
கவிமணியின்
உரைமணிகள்
சந்திரா

பாகனேரி
7.5.59

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

5388

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# கவிமணியின் உரைமணிகள்

[redacted] BY:
V. PR. PL. M.
[redacted]
PAGANERI.

கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை
எழுதிய முன்னுரையுடன் கூடியது

**பாரி நிலையம்**
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: ஜூலை 1953

நூல் - உரிமை
கவிமணி அவர்களின் மருகர்
திரு. கே. குமாரசாமிப் பிள்ளை
அவர்களுக்கு உரியது

விலை ரூ. 2—8—0

நவபாரத் பிரஸ் 2/141 பிராட்வே சென்னை-1.

# பதிப்பகத்தார் குறிப்பு

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கவிதைகளை ஐந்து தொகுதிகளாக வெளியிட்ட நாங்கள் அவர்கள் அவ்வப்போது எழுதிய வசனங்களையும் தொகுத்து வெளியிடப் பல நாட்களுக்கு முன்பே எண்ணினோம். அவ்வெண்ணம் இப்பொழுதுதான் ஈடேறியுள்ளது. இது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

கவிமணி அவர்கள் சாசனம், சரித்திரம், இலக்கியம் முதலியன பற்றிப் பல ஆண்டுகளாக எழுதிவந்திருக்கிறார்கள். அவைகளிற் பெரும்பாலனவும் ஆங்கிலத்தில் அமைந்துள்ளன. அவற்றுள் 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆராய்ச்சி மட்டும் தனிப்புத்தகமாக, 1936-ல் ஆசிரியரால் வெளிப்படுத்தப்பட்டது. மற்றைய ஆங்கில ஆராய்ச்சியுரைகள் புத்தக வடிவில் வரவில்லை.

தமிழிலும் அவ்வப்போது பல கட்டுரைகளும் ஆராய்ச்சியுரைகளும் வெளிவந்துள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்து வையாமையால் இப்பொழுது முற்றும் கிடைக்கவில்லை. இயன்றவரையில் தமிழில் எழுதப்பெற்ற வசனங்களைத் திரட்டி, 'கவிமணியின் உரைமணிகள்' என்ற பெயரால் இப்பொழுது வெளியிட்டுள்ளோம். இத்தொகுதி கவிமணியின் உரை நடைப் போக்கையும், அவர்களுடைய உள்ளப் பாங்கையும் தெள்ளிதில் விளக்கவல்லது.

கவிமணி அவர்கள் இயற்றியுள்ள கவிதைகள் எப்படி எளிமையும், தெளிவும், இனிமையும் வாய்ந்து விளங்குகின்றனவோ, அங்ஙனமே உரை மணிகளும் அமைந்துள்ளன. நம் நாடு, மக்கள், மொழி: இவைகளெல்லாம், எவ்வெவ்வகையில் முன்னேற்றம் எய்தவேண்டும் என்று ஆசிரியர் நமக்கு வழி காட்டுகிறார். சாசன ஆராய்ச்சிப்

பகுதியிலே ஆசிரியரின் ஆராய்ச்சித்திறம் படித்து மகிழ்தற்குரியது.

இதனை வெளியிடும் பேற்றை எங்களுக்கு அளித்த கவிமணி அவர்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். இந்நூலுக்குச் சிறந்ததொரு முன்னுரை அளித்த பேராசிரியர், உயர்திரு, எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும், பதிப்பு வேலைகளைக் கவனித்த திரு. வித்வான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றி.

10—6—1953
பாரி நிலையம்

**பாரி நிலையத்தார்**

# முன்னுரை

மானஸீக உலகு முத்திறப்பட்ட கண்டங்களாக அமைந்துள்ளது. ஒன்று அறிவுலகு. பிறிதொன்று உணர்ச்சி, பாவனை என்ற இரண்டினாலும் இயன்ற உலகு. மூன்றாவது ஆன்ம உலகு. கவிமணி அவர்களது கீர்த்தனங்கள் மூன்றாவதாகக் கூறிய ஆன்ம உலகினின்று பிறந்தவை. அவர்களது 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதி* பாவனையோடு கூடிய உணர்ச்சி யுலகிற் பூத்து மலர்ந்தது. அவர்களது உரைமணிகள் அறிவுலகாகிய சுரங்கத்தில் தோன்றி யொளிர்ந்தவை. இவைகள் முறையே கற்போரது ஆன்ம அனுபவத்திற்கும், கவித்துவ அனுபவத்திற்கும், அறிவு நுகர்ச்சிக்கும் உரியன மேற் கூறிய மூன்றுலகும் மனத்தில் ஒன்றோடொன்று கலந்து கிடப்பது போல் இந்த மூன்று நூல் – தொகுதிப் பொருள்களும் கவிமணியிடத்தே கலந்து கிடந்தனவேயாம். மூன்று உலகையும் மனத்தத்துவ விளக்கத்தின் பொருட்டு நாம் பிரித்து உணர்வது போல் இம் மூன்று நூல் — தொகுதிகளும் பிரித்து அமைக்கப்பட்டன. ஆனால், ஆன்ம நுகர்ச்சிக்குரிய கீர்த்தனங்கள் மற்றை இரண்டு நூல் – தொகுதிப் பொருள்களுக்கும் பிற்பட்டுத் தோன்றியவை. கவிமணியின் வாழ்க்கையிலும் அவை பிற்பட்டுத் தோன்றியவையே யாகும்.

எளிய வாழ்க்கைக்கு நிதர்சனமாக விளங்குபவர் கவிமணி. ஒப்பு யாருமின்றித் தாம் மேம்பட்டு நிற்கும் துறையிலும் கூட, சிறிதும் அவர் செருக்குக் கொள்வதில்லை.

---

* முதற் பதிப்பில் ஆசிய ஜோதியும், உமார்கய்யாம் பாடல்களும் 'மலரும் மாலையும்' என்ற தொகுதியில் ஒரு சேர வெளியிடப்பட்டன. பிற்பதிப்புக்களில் அவை இரண்டும் தனித்தனி நூல்களாக வெளிவந்துள்ளன.

**எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து**

என்று வள்ளுவர் கூறியது இவருக்கு மிகவும் பொருத்தமாவதேயாம். ஆடம்பரப் பிரியரல்லாமையால் இவர் பிரசங்கங்கள், மேடைப் பேச்சுக்கள் முதலியவற்றிற்குச் செல்வது வழக்கமில்லை. எனினும் அன்பர்களது வேண்டுகோளை மறுக்கும் மனத்திட்பம் இவருக்கு இல்லை. சிலர் இதனை ஒரு குறையென்பர். இந்தக் குறையினாலும்கூட இவரது திறமைகளுள் ஒன்று நமக்குப் புலப்படுகிறது. அதுதான் இவரது பேச்சுத் திறமை.

பேச்சுத் திறமை யென்றால் சரமாரியாக வாக்கியங்களைப் பொழிந்து தள்ளுவதல்ல. கேட்போரது அறிவிற் படாதவாறு கருகிய சொற்களையும் பொருள்களையும் அடுக்கிக்கூறுவதுமல்ல. படாடோபமான சொல்லடுக்குக்களை எதுகை மோனைகளில் அமைத்து முழக்கித் தள்ளுவதுமல்ல. இனிய, எளிய சொற்களால் கேட்போர் உளங்கொள்ளுமாறு, நேர்பட, முறைப்பட, விளக்கிச் சொல்வதே பேச்சு என்று சொல்வதற்குரிய தகுதி வாய்ந்தது. கவிமணியின் மேடைப் பேச்சுக்களில் இந்த இயல்பை நன்கு காணலாம்.

இரண்டாம் பகுதியிலுள்ள கட்டுரைகளில் கவிமணியின் இதயத்தை முதலாவது கவர்ந்துள்ளது வள்ளுவரது புகழ்.

> **இவர் இறவாத புகழுடையவர். எக்காலத்தினரும், எந்நாட்டினரும், எம்மதத்தினரும் இவர் நூலைக் கற்று அனுபவிக்கலாம்; இவரது உபதேசங்களைக் கைக்கொள்ளலாம். இவர் கூறும் விஷயங்கள் அனைத்தும் எச்சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளும் தரத்தனவே. எனினும், இவர் சமணரே யாவர். உலகியலோடு பொருந்தத் தம் அனுபவம் காரணமாக நுணுகி உணர்ந்து கூறும் உண்மைகள் இவரது நூலிற் பல. இவர் சாணக்கியரது அர்த்த சாஸ்திரத்தைக் கற்று அதிலுள்ள பொருள்களைக் கூறியுள்ளார் என்பது உண்மையே. எனினும், அது குற்றமும் அன்று; இழிவும் அன்று. சிற்பி தனது வேலைப்பாட்டுக்குகந்த கல்**

எந்த மலையில் இருப்பினும் தேடிச்சென்று எடுக்கச் சலிக்க மாட்டான். அவனது குறிக்கோள், சிற்பச் சிறப்பு ஒன்றே; இத்தகைய சிற்பியே திருவள்ளுவர்.

இவரது பெருமை பற்றி இவரைத் தெய்வப் புலவ ரெனப்பலரும் கொண்டுள்ளனர். இவரது உபதேசங்கள் கன்ப்யூஸியஸ், இயேசுநாதர் முதலியோரது அமுத மொழிகளை ஒத்துள்ளன.

இவ்வாறு அமைந்த பெரிய நூலுக்கு வள்ளு வரது திருவுள்ளம் இதுவென ஆராய்ந்து உரை காணு தலே தக்கது. சிலர்தத்தம் கொள்கைகளுக்கு ஏற்கக் குறட் கருத்துக்களைத் திரித்துக்கொள்கின்றனர். சொற்களையும் தொடர்களையும்கூடத் திரித்து விடுகின்றனர். இது பெரியதொரு தவறும். சொல் கருவியாகப் பொருளையும் அதன் துணையாக ஆசிரியரது உள்ளத்தையும் அறியும் அறிவே சிறந்தது. பாடல் என்பது ஆசிரியர் தந்த கண் ணாடிதான். அக்கருவியைப் பயன்படுத்தத் தெரியாமல் அதனையே உற்று நோக்கிக் கொண்டிருத்தல் ஆகாது.

இங்ஙனம் அருமையாகக் கூறி வள்ளுவரது பெரு மையைக் கவிமணி இனிதின் விளக்குகின்றார்.

அறிவியல் துறையில் தலைவராக விளங்கும் வள்ளு வருக்குப் பிற்பட்டு, பக்தி நெறி முதல்வரான மாணிக்க வாசகர் நமது கவிமணியின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார். இவரது திருவாசகத்தைக் குறித்து,

வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே

என இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளமை யாவரும் அறிவர். திருவாசகத்தின் பெருமையில் ஐயங்கொண்டார் யாரும் இல்லை. அது தோன்றிய காலத்தைப்பற்றி மட்டும் தான் இப்பொழுதும் ஐயம் தவிர்ந்த பாடில்லை. இதனைக் குறித்து ஆராய்ந்து கி. பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்து இவ் அரும்பெறல் நூலை இயற்றினர் என்றும், இவர் மூவர் முதலிகளுக்கும் பிற்பட்டவர் என்றும் கவிமணி முடிவு கூறுகின்றார். இம் முடிவு பலர்க்கும் அங்கீகாரமா யுள்ளதே.

அறிவியல் நூலும் பக்தி நூலும் இவ்வாறாக, உணர்ச்சியும் பாவனையும் ததும்புகின்ற தமிழ்ப்பேரிலக்கியம் ஒன்றினைப் பற்றிக் கவிமணி சிந்திக்கின்றார். அதன்மீதுள்ள ஆதராதிசயத்தால், அதனை எரித்துவிடவேண்டும் என்ற முயற்சியைக் குறித்து அவரது உள்ளத்தில் கோபக்கனல் பொங்கி எழுகின்றது.

ஓலை எரியும், தாள் எரியும்,
உள்ளத்தெழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ ?

என்று கூறுகிறார். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனது கலைக்கோயிலான இராமாயணத்தைக் கற்று இலக்கியச் சுவையை நுகர்வது தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாகும் என்பதை இவர் வற்புறுத்துகின்றார். இவ் அரிய இலக்கியத்திற்குப் பிழையற்ற பதிப்பு வெளியிடுதல் அவசியம் என்றும் கவிமணி கருதுகின்றார்.

இயல் - தமிழின்பின், இசையைக் குறித்துச் சில கருத்துக்களை ஆசிரியர் வெளியிட்டுள்ளனர். 'பாடல்களைப் பண்ணோடு பாடும்போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது; பொருள் விளக்கம் ஏற்படுகிறது; பூரணமாகிறது' என்று கூறுகின்றனர். வெறும் வார்த்தைகளால் மனக்கருத்து முழுமையும் வெளிப்படுத்த முடியாது. இசையமையப் பாடுதல் நமது நாட்டில் பண்டைக்காலம்

தொட்டு வழங்கிவந்த ஒரு வழக்கேயாகும். ஆனால், இயலோடு கலவாத இசை அத்துணை இனிமையாகமாட்டாது என்றும் கருதுகின்றனர். கீர்த்தனங்களைப் பாடும் பாகவதர்கள் கைக்கொள்ள வேண்டும் சில நியதிகளும் இங்கே கூறப்படுகின்றன. பாட்டுக்கள் இயற்றுபவன் ஒருவனும் 'இராகதாளங்கள்' அமைப்பவன் பிறனொருவனுமாக இருத்தல் சிறிதும் தவறன்று என்பதும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தமிழிசை முன்னேற்றம் பற்றி நாம் செய்யவேண்டும் காரியங்களையும் இவர் விளக்குகிறார். இசையை அடுத்து நாடகத்தைப் பற்றிய சிற்சில அரிய கருத்துக்களையும் ஆசிரியர் தெளிவுறுத்துகிறார்.

> மக்களின் அறிவை அபிவிருத்தி செய்வதற்கு நாடகத்தைப்போன்று ஒரு சிறந்த கருவி வெறெதுவும் இல்லை. அதனாலேயே கலஞ்சென்ற சரோஜினி தேவியார் நாடகத்தைப் 'பாமரமக்களின் பல்கலைக் கழகம்' என்று கூறியிருக்கிறார்கள். நமது கலாசாலைகள் தோறும் நாடக அரங்கு அமைக்கப்பட வேண்டும். தமிழ்மொழியில் நல்ல நாடகங்கள் இயற்றப்பட வேண்டும்

என்று வற்புறுத்தி, நடிக்கும் கலையில் தக்கவர்கள் பயிற்சி பெற்று மேம்பட்டு வரவேண்டுமென்றும் கூறி ஆசிரியர் இக்கட்டுரையை முடிக்கின்றனர்.

பின்னர், இலக்கியத்துறையில் புகழ்பெற்று விளங்கிய வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரை "எண்பதாண்டான இளைஞர்" என்று வாழ்த்துகின்றார். தேசியத் துறையில் உழைத்து இப்போது மறைந்துவிட்ட வ. உ. சிதம்பரம் பிள்ளையின் புகழ் நீடூழி நிற்கவேண்டும் என்று ஆவல்கொண்டு, அந்தத் தியாக மூர்த்தியின் வாழ்க்கை வரலாற்றைப் பல மொழிகளிலும் வெளியிட வேண்டும் என்று மனங்கனிந்து மொழிகின்றனர்.

வ. உ. சி முதலியோரது பெருஞ்செயல்களால் தேசீயத்துறையில் முயன்று வெற்றிபெற்றுவிட்ட நாம் அத்

துடன் அமைந்து மகிழ்ந்திருக்கின்றோம். சுதந்திரம் அடைந்ததோடு நாம் சோம்பியிருத்தலாகாது. நமக்குஇப் போது பொறுப்பு மிகுதியாயுள்ளது. ஊக்கமும்உழைப் பும் இப்பொழுதுதான் மிகுதியாய் வேண்டப்படுவது.

கவிமணியின் இவ் உபதேசம் நமக்கு லட்சியமாகுக.

இந்த யுகத்திலே பிறந்த புண்ணிய புருஷராகிய காந்திஜியைக் குறித்தது அடுத்த கட்டுரை. இப்புண்ணிய மூர்த்தியைக் குறித்து,

> அவர் பேரறிஞர்; தீர்க்கதரிசி; சீர்திருத்தவாதி, உலக நன்மையை நாடும் உத்தமர். அஹிம்ஸையும் சத்தியமும் அவருக்கு இருகண்கள். அன்பே அவருக்கு உயிர். மக்களை அடிமைத் தளையினின்றும் அகற்றி நல்வாழ்வு வாழச் செய்வதே அவர் குறிக்கோள்.

என விவரிக்கின்றனர். அவர் நம்மைவிட்டுப் பிரிந்து போய்விட்டபோதிலும், அவர் போதித்துவந்த போதனை கள் நம் காதுகளில் எப்போதும் ஒலித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

> எந்தத் தத்துவங்கள் நம்நாட்டை அடிமை வாழ்வி லிருந்து அமர வாழ்விற்கு உயர்த்துகின்றனவோ அவைகளை நம் உயிர்த் தத்துவங்கள் என்று கருதவேண்டும். அவற் றின்படி என்றும் நடக்க வேண்டும். பிறருக்கும் போதித்து நல்வழிப்படுத்த வேண்டும். இதுவே காந்தி யண்ணலுக்கு நாம் புரியும் கைம்மாறு; வழிபாடு.

என்று ஓர் அரிய உபதேசத்தையும் கவிமணி தருகின் றார்.

இலக்கிய நெறியில் ஆசிரியர் கையாண்டுள்ள லட்சி யங்கள் "எனது லட்சியம்" என்ற கட்டுரையில் தரப்படு கின்றன. உண்மைக் கவியின் இயல்பு, புதிய இலக்கிய வளர்ச்சிபற்றிய கருத்துக்கள், அவ் இலக்கிய வளர்ச்சி மேம்படுதற்குக் கைக்கொள்ள வேண்டும் உபாயங்கள், சொல்லாக்கம், விமரிசனம் முதலியனபற்றி இவர் கொண்

டுள்ள கருத்துக்கள் : இவையெல்லாம் சுருங்க இங்கே உணர்த்தப்படுகின்றன. தமிழோடு மிக இணைந்திருப்ப தால் தென்னிந்தியச் சரித்திரமும் தென்னிந்தியக் கல் வெட்டுக்களும் ஆராயப்படத் தக்கன என்பதும் இங்கே சுட்டப்படுகிறது.

தமது வாழ்விற் செய்த பெருமுயற்சிகளுள் ஒன்ருன சாசன ஆராய்ச்சி பற்றியது இந்நூலின் மூன்றும் பகுதி யின் முதல் கட்டுரை. முதலில் சாசன ஆராய்ச்சி செய் வோரது தகுதியும் மனநிலையும் இவ்வாறு இருக்கவேண் டும் என்று வரையறுக்கின்றனர். 'திருவடி சார்த்த' என்பதன் பொருள் ஆதார பூர்வமாய் நன்கு விளக்கப்படு கிறது. தெலுங்கு நாட்டுச் சாசனத்தால் 13-ம் நூற்ருண் டில் மலபாரில் தமிழர்கள் குடியிருந்தார்கள் என்பதும் அவர்களில் சிலர் விசாகப்பட்டணம் வரையிலும் சென்று தங்கிஞர்கள் என்பதும் புலப்படுகின்றன. இப்போது 'கொயிலோன்' என்று கூறப்படும் நகரம் முற்காலத்தில் 'குரக்கேணிக் கொல்லம்' என்று வழங்கியது சாசனத்தால் தெளிவாகிறது. 'புலைப்பேடி' என்ற சாசனம் சமுதாய வழக்கமொன்றினைத் தெரிவிக்கிறது. ஆண்டின் இறுதி மாதமான கர்க்கடக மாதத்தில் அஸ்தமனத்திற்குப்பின் வெளிபட்டுலவும் பெண்களைப் புலையர்கள் தமது உரிமை யாக்கிக் கொள்ளலாம். அப்பெண்கள்மேல் ஒரு சிறு கல்லை எடுத்து அவன் தீண்டிஞலும் போதும்; அவன் பின்ஞல் அவள் சென்றுவிட வேண்டியதுதான். இவ்வழக்கத்திற் குச் சில விதிவிலக்குக்களும் இருந்தன. இவ்வாறே மண் ணர் (வண்ணர்)களுக்கும்இவ்வாருன உரிமை இருந்தது. இதனை மண்ணார்பேடி என்று அழைத்தனர். இக்கொடிய வழக்கம் இன்ன காலம்முதல் நின்றுபோக்கடவது என்று ஆணை பிறப்பித்துத் திருவிதாங்கோட்டு அரசரொருவர் அதனை ஒழித்தனர். இவ் ஆணையை யாரேனும் மீறிப்

பூர்வ வழக்கத்தைக் கைக் கொள்வதாயிருந்தால், அவர்களை மட்டுமல்ல, அவர்களது பெண்டுபிள்ளைகளையும்—வயிற்றுப் பிள்ளை முதலாகத் தோண்டியெடுத்து — வெட்டி வீழ்த்தவேண்டும் என்றும், தீண்டப்பட்ட பெண் குளித்துக் கரையேறித் தீட்டைப் போக்கிக் கொள்ளலாம் என்றும் சட்டம் இயற்றப் பட்டது. இவ்வழக்குக்கள் சேரநாட்டில் மட்டுமின்றி, தமிழ் நாட்டிலும் பல இடங்களில், பூர்வ காலத்தே இருந்ததென்று நாம் ஊகிக்கலாம். இராப்பாடி என்று வருபவர்கள் இச்சாசனம் கூறும் மண்ணார்களாக இருத்தல் வேண்டும். இச்சாசனத்தில், 'இப்படிக்குத் திருவயித்தும் நாட்டி' என்று வருகிறது. இதனை, அயித்து—அயித்தம் — தீண்டாமை என்னும் பொருள் பயக்கும் சொல்லாயிருக்க வேண்டும் என்று கவிமணி கூறுகிறார். ஆனால், தீண்டாமையைத் திருத்தீண்டாமை என்று சிறப்பித்தல் பொருத்தமின்று. திருவயித்தும் என்பது 'திருவெழுத்தும்' என்பதன் திரிபாக இருத்தல் கூடும்.

சாசனங்களில் வரும் தொடர்களுக்கு அதனைப் பதிப்பித்தவர்கள் செய்துள்ள விநோத வியாக்கியானங்களுள் ஒரு சிலவும் தரப்பட்டுள்ளன. 'ஐம்படைப் பருவத்து' என்பது, 'மன்மதன் காதல் எழுப்புகின்ற பருவம்' என்று ஒருவரால் கொள்ளப்படுகின்றது. ஆனால், திருமாலின் படைக்கலங்களாகிய ஐம்படைகள் அமையச் செய்யப்பட்ட தாலியை அணியும் பருவம் என்பதே பொருள். பக்ஷி ராஜன் என்று பொருள்படும் 'பறவைக்கரசு' என்ற தொடரைப் 'பறவைக் காசு' என வாசித்து அதன் நிறை முதலியவற்றை ஆராய்ந்தாரும் உளர். ஆடி மாதத்துச் சுவாதி நட்சத்திரம் என்று பொருள்படும் 'திருவாடிச் சோதிக்கு' என்ற தொடரை, 'திருவடிச் சோதிக்கு' என்று வாசித்துப் பொருள் கொண்டாரும் உளர். இப்

பொழுது கோட்டைக்கரை என வழங்கி வருவது ஒரு சாச னத்தில் 'கரைக் கோட்டை' எனக் குறிக்கப்படுகின்றது. இப்பெயரை ஆங்கிலத்தில் எழுதிக் காரைக்குடி என வாசித்துக் கொண்டு, அந்நகரம்வரை வேணாட்டரசனுடைய போர் வீரர்கள் பாண்டியர் சேனையைத் துரத்தியோட்டி னார்கள் என்று சேரர்படைப் பெருமையை ஓர் ஆசிரியர் விளக்கினர். இதில் அவரது தேசாபிமானம் ஒன்றுதான் புலப்படுகிறது. 'திரிபுவனதேவி சாசனம்' என்ற கட்டுரை கவிமணி கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்த வரலாற்றிற்கு ஒரு தக்க உதாரணமாக நாம் கருதலாம். 'சோழபுரம் சாசனம்' இராசேந்திர சோழீசுவரம் என்ற கோயிலிலுள்ள கல்வெட்டு. ஆரம்பத்திலிருந்து சில பகுதிகள் அழிந்து குறைப்பட்டுள்ளது. கோயிலின் பெயரைக் கொண்டு, இது ஒரு சோழ அரசனது சாசனம் என்ற கொள்கை இருந்தது. நமது கவிமணி, இதனோடு தொடர்புள்ள வேறு சில சாசனங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து இது பாண்டியனது சாசனம் என்பதை நன்கு விளக்கியிருக்கின் றார்கள். இதில் வரும், 'ஐயன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்' என்ற தொடரில் குறிக்கப்படும் மழவ ராயனை, 'மாமடி' என்று பிறிதோர் சாசனம் அழைத் தலால், இவன் அரசனுக்கு மாமனாதல் வேண்டும் என்று துணியலாம்.

உலக முழுதுடையாள் சாசனம், அரசர்கள் தேவதாசி யர்களை மணந்து, அரசியராக ஏற்றிருப்பதுமன்றி, அவ ரது மக்களை அரசாட்சிக்கு உரிமைப் பட்டவராகவும் செய் திருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. இறுதி யில் கொடுக்கப்பட்டுள்ள சாசனக் கட்டுரையில் வரும் பராந்தக பாண்டியன் கலிங்க வெற்றியில் விக்கிரம சோழ னுக்கு உதவி செய்தவன் என்பர் சில ஆராய்ச்சியாளர்.

இப்பாண்டியனுக்குப் பிற்பட்டவன் ஜடிலவர்மன் குலசேகர பாண்டியன். இக்குலசேகரன் 1190-ல் பட்டம் எய்தியவன். ஆதலால், பராந்தக பாண்டியனது காலம் 12-ம் நூற்றுண்டின் முற்பகுதியாயிருக்கலாம். கலிங்கப் போர் நிகழ்ந்த காலத்தில் விக்கிரம சோழனுக்கு உதவியாய்ப் பராந்தக பாண்டியன் சென்றிருந்தான் என்பதற்கு வேறு தக்க ஆதாரம் வேண்டும் என்று ஆசிரியர் துணிகின்றனர். இக்கட்டுரையின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள குறிப்புக்களும் நமக்குப் பெரிதும் பயன்படத்தக்கவை.

இங்குக் கூறியவற்றுல் கவிமணியின் உரை மணித்தொகுதி வாசகர்களுக்கு ஓர் அரிய நல்விருந்தாக அமைந்துள்ளது என்பது விளங்கும்.

திருவனந்தபுரம்
ஸர்வ கலா சாலை
4—6—'53.

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

# உள்ளுறை

பக்கம்

## I மேடைப் பேச்சு


1 தலைமை உரை ... 1
2 வரவேற்புரை ... 14
3 திறப்புரை ... 32


## II கட்டுரை மணிகள்


1 திருவள்ளுவர் ... 45
2 தெய்வப் புலவர் ... 52
3 மாணிக்கவாசகர் காலம் ... 65
4 கவிச்சக்கரவர்த்தி கம்பன் ... 72
5 தமிழிசை ... 75
6 நாடகமே உலகம் ... 84
7 எண்பதாண்டான இளைஞர் ... 88
8 வ. உ. சிதம்பரம் பிள்ளை ... 90
9 சுதந்திரமும் நமது வாழ்க்கையும் ... 92
10 காந்தியண்ணலுக்குக் கைம்மாறு ... 95
11 எனது லட்சியம் ... 98


## III சாசன ஆராய்ச்சி


1 சாசன ஆராய்ச்சி ... 107
2 தெலுங்கு நாட்டுச் சாசனம் ... 114
3 புலைப்பேடி ... 119
4 சாசனங்களும் விநோத வியாக்கியானங்களும் ... 125
5 திரிபுவனதேவி சாசனம் ... 133
6 சோழபுரம் சாசனம் ... 136
7 உலக முழுதுடையாள் சாசனம் ... 143
8 பராந்தக பாண்டியன் சாசனம் ... 150

# கவிமணியின் உரைமணிகள்

## i. மேடைப் பேச்சு

### 1. தலைமை உரை*

சிவநேசச் செல்வர்களே! பெண்மணிகளே! பெரியோர்களே!

தென்னாட்டிற்கு மணம் தருவது தமிழ்மொழி. அத் தமிழ் மொழிக்கு மணம் தருவன தேவாரம், திவ்வியப் பிரபந்தம் முதலிய தெய்வத் திருப்பாக்கள். இப் பாக்களை அருளிச் செய்த சைவ சமயாச்சாரியர்களும், வைணவ ஆழ்வார்களும் நம் நாடு சிறக்க அவதரித்த புண்ணிய மூர்த்திகளாவர். இவர்களிற் சிலர் பௌத்த சமண சமயங்கள் நாடெங்கும் பரவியிருந்த காலங்களில் தோன்றி விளங்கியவர் என்பது அவர்கள் பாடல்களால் நன்கறியக் கிடக்கின்றது. அம் மதங்கள் வேரூன்றுவாறு அசைத்துப் பிடுங்கிவிட்டு, சைவ வைணவங்களை ஆணி அடித்தாற் போல நிலைநிறுத்திய பெருமை இவர்களுடையது என்பதற்கு ஐயமில்லை. இதனாலேயே வட நாட்டைவிடவும் தென்னாடு சைவ வைணவக் கோட்பாடுகளுள் அழுந்திய போக்குடையதாக விளங்கி வருகிறது. கல்லால் அமைக்கப்படும் ஆலயங்களை விட எவ்வளவோ உறுதியான— என்றுமழியாத — ஆலயங்களை இவர்கள் சொல்லால் அமைத்து உதவி யிருக்கின்றனர்.

---

* சுசீந்திரம் தேவாரப் பாடசாலையின் எட்டாவது ஆண்டு விழாவில் (15–9–1124) தலைமை வகித்துப் பேசிய பேச்சு.

ஒரு நாட்டினர் அல்லது ஓரினத்தாருடைய நல்லொழுக்கத்திற்கும் நாகரிகத்திற்கும் முக்கியமான அடிப்படை அவர்கள் கடைப்பிடித்து வரும் சமயக் கோட்பாடுகளேயாகும். ஆகவே, தங்களுடைய ஆக்கத்திற்கெல்லாம் மூலகாரணமான சைவ வைணவ சமயங்களைத் தம்மிடையே நீடூழிகாலம் நிலவச் செய்த ஆச்சாரியர்களையும், ஆழ்வார்களையும் தெய்வங்களாகப் போற்றுதற்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

சைவத்திலும் வைணவத்திலும் ஊறித்திளைத்தது நாஞ்சில்நாடு. மூவர் தமிழும் முழங்கும் நாடு. முத்தமிழ் முழக்கம் கேட்கும் நாடு. சைவ வைணவ பேதச் சழக்கற்ற நாடு. அதற்கு இதோ இருக்கும் திருக்கோவிலே தக்க சான்று. மும்மூர்த்திகளும் இங்கே வீற்றிருக்கிறார்கள். அவர்மூவராயினும் ஒருவரே என்ற உயரிய நோக்கினால் நாம் வேற்றுமை யின்றி வழிபட்டு வருகிறோம். என்றாலும், சைவப் பற்றுத்தான் நம்மிடையே கூடுதல் என்பதைக் கூறாமலிருப்பதற்கில்லை. தேவார திருவாசகத் திருப்பதிகங்களும், நாயன்மார் வரலாறுகளும் நம்மிடையே பெற்றுள்ள மதிப்பைப்போல் வேறெதுவும் பெறவில்லைதான்.

இதற்குக் காரணம் சைவ மடங்கள் புரிந்து வந்த சேவை என்றுதான் சொல்ல வேண்டும். தம்பிரான்களின் போதனைகளும், குருக்களின் உபதேசங்களும், தீக்ஷை செய்வித்தல் முதலான சடங்குகளும் சைவப்பற்றை மிகுதியும் தந்தன. தேவாரம் ஓதும் வழக்கம் எங்கும் பரந்தது. ஏன்? உயிரிறுதியின்போது கூடத் திருவாசகம்தானே படிப்பார்கள். இவை இறைவனோடு ஒன்றுவிக்கும் ஆற்றலுடையவை என்பது அவர்கள் துணிபு.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பதிகம் தேவாரம். 'அப்பனே! பாடு' என்று அவன் வேண்டிப் பெற்ற பாசுரத் தொகை இது. நண்ணற் கரியனாய்—பண்

ணுருவாய் நின்ற அப் பரம்பொருளைப் பாகாயுருக்க வல்ல பண்ணார் இன்தமிழ். அகங்குழைந்து ஆண்டவனைப் பின் தொடரச் செய்தவை; ஏவல் கொள்ளச் செய்தவை; அவன் காட்சியை எளிதாக்கியவை. இதன் தேனூறு சொற்களுக்கு நாவூறி நின்றான் தில்லைப்பதியான். கேட்டுக் களிகூர்ந்து எல்லையிலா ஆனந்தத்தால் திரு நடனம் புரிந்தான்; புரிகிறான். திருவாசகம், கல்லைப் பிசைந்து கனியாக்கும் களியமுதம். நினைந்தவரை நெக்கு நெக்குருகி நிற்க வைக்கும் சொல்லமுதம். தொல்லையிரும் பிறவித் தளையை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்கும் செந்தேன்.

இவற்றிலே ஏன் இத்தனை கனிவு? இத்தனை சக்தி? ஓரிடத்திலே யிருந்து கொண்டு ஆச்சாரியர்களால் இணறித் திணறிப் பாடப்பட்டவையா அவை? இல்லை. இறைவனிடம் ஒன்றிய மனத்தோடு அவன் திரு முன் நின்று கசிந்துருகிக் கண்ணீர் சோர, மெய்ம் மயிர் சிலிர்க்கப் புளகிதமுற்றுப் பக்தி மேலீட்டால் பாடப்பட்டவை அவை. அதனாலேதான் கற்பார்க்கும் கேட்பார்க்கும் அத்தனை ஈடுபாடு. இவ்வாச்சாரியர்களைப் பற்றிச் சொல்லும்போது சிலர் மிக இளமையிலேயே பாடத் தொடங்கி விட்டதாகவும், ஒவ்வொருவரும் பதினாயிரக் கணக்கான பதிகங்களைப் பாடிக் குவித்திருந்ததாகவும், அவற்றுள் பெரும் பகுதி அழிந்து பட்டதாகவும் சொல்லப்படுகிறது. தெளிவாகச் சொன்னால் சம்பந்தர் பதிகம் இப்போதுள்ளவை 384; ஆனால் பாடப்பட்டவை 16 ஆயிரம். அப்பர் பதிகங்களாகக் கிடைத்தவை 311; பாடப்பட்டவை 49 ஆயிரம். சுந்தரர் பதிகம் இப்போதுள்ளவை 100; பாடப்பட்டவை 38 ஆயிரம். இப்படி ஒவ்வொருவரும் 2 லட்சம் முதல் 5 லட்சம் வரை பாடல்கள் பாடியிருக்கக் கூடுமா என்னும் ஐயம் நம்முள் எழாமலிருப்பதற்கில்லை.

ஏன் பாடியிருக்கக்கூடாது என்று கேட்கிறேன். பதினேழாம் நூற்றுண்டின் துவக்கத்திலே, அதாவது ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில மகா கவியின் காலத்தில் ஸ்பெயினில் ஓர் அற்புதக் கவிஞர் இருந்தார். லோப் பிலிக்ஸ் டி வெகா கார்பிஸ் (**Lope Felix De Vega Carpis**) என்பது அவர் பெயர். அவர் 2 கோடி 10 லட்சம் பாடல்கள் பாடியிருக்கிருர். இது மட்டுமா? 1500 நாடகங்களும் செய்திருக்கிருர். அங்கே ஏன் போகவேண்டும்? சிறிது காலத்துக்கு முன்னுலிருந்த திரிசிரபுரம் மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் பாடிக் குவித்திருக்கும் பாடல்களுக்குக் கணக்கு வழக்கு உண்டோ? தம்மைச் சோதிக்க வந்த ஒருவர், கைகடுத்துக் காலில் விழுந்து கும்பிடும் அளவுக்கு இருந்த இருப்புப் பெயராமல் பாடல் சொல்லிக் கொண்டிருந்தார் என்பதை அவரை நேரில் தெரிந்தவர்கள் மூலம் அறிந்திருக்கிறேன்.

சம்பந்தர், மிக்க இளமையில் ஆற்றலோடு பாடினுர் என்பது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. ஆனுல் அது நடக்கக்கூடாத காரியம் என்று சொல்வதற்கில்லை. சில நாட்களுக்கு முன்னுல்தான் 'இந்து'ப் பத்திரிகையில் பார்த்தேன். காலிபோர்னியாவில் 5 வயதுச் சிறுவனெருவன் அறிவு நிரம்பப் பெற்றவனுய், பல பெரிய காரியங்கள் செய்தான் என்று எழுதப்பட்டிருந்தது. இது நம் காலத்திலே நடக்கும் நிகழ்ச்சி. சில வருஷங்களுக்கு முன் ஆறுமுகம் என்ற ஓரிளைஞன் பல பெரிய கணக்குகளை நிமிஷப் பொழுதில் தீர்த்துக் கூறி வந்ததை நேரில் பலரும் பார்த்திருப்பார்கள். ஆகவே சாதாரண மக்களுக்கு அரிய காரியங்கள் என்று தோன்றுபவை நடைபெற்றிருக்கவே கூடாதவை என்ற முடிவுக்கு வந்துவிடுவது அவ்வளவு பொருத்தமென்று தோன்றவில்லை.

எப்படியாயினும் இந்தத் தேவார திருவாசகங்கள் இறைவனிடம் பக்தியை எழுப்புகின்றன; ஒரு ஈடுபாட்டை உண்டாக்குகின்றன என்பதற்குச் சந்தேகமில்லையல்லவா? அதனாலேதான் தேவாரப் பிரசாரம் சமயப்பிரசாரமாக விளங்குகிறது. ஆண்டவன் சந்நிதியிலும், அன்பர் இல்லங்களிலும் தேவார முழக்கம் எழுகின்றது. கோவில்களிலே தேவாரம் ஓதும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. திருமுறை கண்டவன் முதல் ராஜராஜன் (கி. பி. 985-1014). இவன் காலத்துக்கு முன்னரேயே கோவில்களில் தேவாரம் ஓதும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. முதல் பராந்தகன் (கி. பி. 907-953) காலத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த லால்குடி, ஆற்றூர் என்னும் இடங்களில் எழுந்த சாசனங்கள் இதுபற்றித் தெரிவிக்கின்றன. திருப்பதிகம் ஓதுவதற்குப் பிராமணர் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

தேவாரத்துக்குத் தனித்தனியாகப் பண்கள் உண்டு. உரிய பண்களோடு இயைத்து அவற்றைப் பாடவேண்டும். எந்த ஒரு பாடலையும் இசையோடு பாடும்போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது. பொருள் விளக்கம் ஏற்படுகிறது. உணர்ச்சி பாவத்தை வெளிப்படுத்துவதற்கேற்ற இசையில்லாவிட்டால் அவை வெறும் சொல்லடுக்குக்களே. அவற்றுக்கு முழு நிறைவும் உண்டாவதில்லை. இதனாலேயே பக்திரசம் ததும்பும் பாடல்களுக்கெல்லாம் பண்ணமைத்திருக்கிறார்கள். அவற்றைத் தெரிந்து இனிமையாகப் பாடினால்தான் பயனுண்டு.

இந்த இடத்தில் ஒன்று சொல்லாமலிருப்பதற்கில்லை. தேவாரம் ஓதுகின்ற ஓதுவார்களிற் சிலர் தமிழறிவில் மிகக் குறைந்தவர்களாயிருக்கின்றனர். வமிச பரம்பரை என்ற வழக்கத்தால் இவர்களும் ஓதும் தொழிலுக்கு வந்துவிடுகிறார்கள். இவர்கள் பாட்டைப் படுத்தும் பாடு,

ஐயோ! கொடுமை! 'அரியானை அந்தணர்தம் சிந்தை யானை......'என்ற பாட்டுத்தான் இவர்களிற் பலருக்கும் தெரியும். தீபாராதனையின் இறுதிவேளை, கூட்டம் பக்தி ஆரவாரத்தில் ஈடுபட்டு நிற்கும் சமயத்தில் பாடத் தொடங்குவார்கள். 'அரியானை' என்ற பதம் மட்டும் எடுப் பாகக் கேட்கும். கூர்ந்து கவனித்தால் இடைக்கிடையே சில ஆனைகள் வரும். சங்கு ஊதுகிறவனிடத்திலே சொல்லி வைத்திருப்பார். இவர் கடைசி அடி எடுக்கும் போது அவன் சங்கையெடுத்து முழக்கிவிடுவான். 'அசு வத்தாமா ஹதகுஞ்சர:' என்ற மாதிரிதான். இது ஒரு சடங்காக நடந்து வருகிறது பல கோவில்களிலும். சாதா ரண மக்கள் இந்தச் சடங்குக்கு 'ஆனைப்பாட்டுப் பாடுவது' என்று வைத்திருக்கிறார்கள். இந்த ஆனைப்பாட்டில் அவர்கள் வைக்கும் வேலைப்பாடுகளைப் பார்க்க வேண்டும். 'அனுவை யார்க்கும்' என்று கூறி நிறுத்துவார்கள். 'தேவர் கடங்கோனை' என்று சேர்ப்பார்கள். இப்படிப் பலவிதம். 'காட்டில் நாய் கழுக்குன்றிலே' என்று பிரிக்க வும் அவர்களுக்குத் தெரியும். ஐயோ! பரிதாபம்!

இப்படிப்பட்டவர்களைத் தேவாரம் ஓதுவதற்கு அனு மதிக்கக் கூடாது. ஓதுவார்களுக்குத் தமிழறிவும், இசை யறிவும் வேண்டும். ஆகவே, தேவாரம் பயிலும் இளைஞர்கள், ஒன்பதாவது அல்லது ஏழாவதாவது தேறிய அடிப்படையறிவுடையவர்களாயிருந்தால் நல்லது.*

---

* இங்கே ஒன்பதாவது, ஏழாவது என்று குறிப்பிடுவது முன்பு திருவிதாங்கூரில் ஏற்பட்டிருந்த தமிழ்ப் பள்ளிக்கூடங் களையாகும். இந்த இருவகுப்புக்களிலும் அரசாங்கத்தார் பரீட்சை நடத்தி வந்தனர். ஒன்பதாவது வகுப்புத் தேறி ஆசிரி யர் பயிற்சியும் பெற்றவர்களே ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் களாக விளங்கி வருகிறார்கள். இப்பொழுது இப்படிப்பும், இவ் வகைப் பாடசாலைகளும் இல்லை. இவ்வகைப் பாடசாலைகளை இப்பொழுது ஆங்கிலப் பாடசாலைகளாக மாற்றி அமைத்துள் ளனர்.

அவர்களுக்குத்தான் பொருளறிந்து படிக்கவும், அனுபவிக்கவும், அதன்மூலம் பிறருக்கு உணர்ச்சியூட்டவும் முடியும். அத்தகையோர் கிடைக்கவேண்டுமானால் ஓதும் இளைஞர்களுக்கு ஒரு உருண்டைச் சோறு கொடுத்தாற் போதுமா? போதவே போதாது. அவர்களுக்கு வேறு பல ஊதியங்களும் கிடைக்குமாறு செய்யவேண்டும். திறமையுள்ளவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டும். இப்படி ஊக்கமும் உற்சாகமும் கொடுத்துப் பயிற்றினால்தான் நல்ல அறிஞர்களைப் பெறமுடியும் தொன்றுதொட்டே ஓதுவார்களுக்கு நாம் கௌரவம் கொடுத்து வந்திருக்கிறோம். அந்த நெறி அழியலாகாது.

இன்று திருமுறை பன்னிரண்டாக இருக்கிறது. பன்னிரண்டாம் திருமுறையாகப் பெரிய புராணம் சேர்க்கப்பட்டது பின்னர்த்தான். அதுபோல, அதன் பின்னர் எழுந்த தெய்வப் பாடல்களையும் திருமுறைகளாக ஏன் சேர்க்கக்கூடாது? இந்தக் கூட்டத்தில் திருப்புகழையும் இராமலிங்க சுவாமிகள் பாடிய திருவருட்பாவையும் சேர்ப்பதில் எவ்விதமான தவறுமில்லை. அவற்றையும் சேர்த்தே மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு முன் திருவிதாங்கூர் சர்க்காரால் நியமிக்கப்பட்ட 'கல்வி இலாகாச் சீர்திருத்தக் கமிட்டி அறிக்கை'யில், ஸம்ஸ்கிருதப் பாடசாலைகள் இந்நாட்டில் முக்கியமான ஆறு இடங்களில் நிறுவ வேண்டுமென்றும், அதற்காகத் தேவஸ்தான இலாகாவிலிருந்து ஏராளமான தொகை செலவு செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.* இப்படிக் கமிட்டி சிபார்சு

* A sufficient number of scholarships should be earmarked for Sanskrit education; and the same grant-in-aid provisions as in the case of other schools should be allowed for Sanskrit Schools. The Com-

செய்திருப்பதும், சர்க்கார் அதனை அங்கீகரித்திருப்பதும் பாராட்டத் தக்கவைதான். ஆனால் இப்படிப்பட்ட தேவாரப் பாடசாலைகளையும் என்னாளும் நிலைநிற்குமாறு தேவஸ்தானம் ஏன் செய்யக்கூடாது? தமிழும் தெய்வ மொழி தானே. ஆதலால் சமயப் பாடசாலைகளை வைத்துத் தமிழையும் அவர்கள் வளர்ப்பார்களாக!

கோவில்களை யொட்டித் தேவாரப் பாடசாலைகள் அமைத்து நடத்தி வருவது சிறந்த முறையாகும். வேத அத்யயனம் செய்வதற்கென்று கோவில்களில் சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதைப் பழைய கல்வெட்டுக்க ளால் அறிகின்றோம்; அத்தகையவற்றுள் முன்சிறை யில் ஸ்ரீ கோக்கருநந்தடக்கனால் ஏற்படுத்தப்பட்ட சாலை மிக்க பழைமையானது. ஒன்பதாம் நூற்றாண்டிலுள்ளது. இப்படி வடமொழி வேதபோதனைகளுக்குச் சாலைகள் இருந்ததைத் தவிர, தேவார திருவாசகங்களுக்கென்று சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகக் கல்வெட்டுக்களால் தெரியவில்லை. இக்குறைபாடு நமது சைவத்திரு மடங்க ளாலும், அரசாங்கத்தாலும் நிவர்த்திக்கப்பட்டு வருவதை அறிந்து மகிழ்கிறேன்.

---

mittee feels that a number of endowments might be made by the Devaswom Department for the promotions of Sanskrit studies for Hindu students generally, and for those who are likely to be available for service in that department. Government should conduct schools of this type at least six important centres of the state.

(The Travancore Education Reorganinzation Committee Report, 1945, PP. 47-48.)

ஆதீனத்தார் அங்கங்கே மடங்கள் கட்டி, பேரறிஞர்களான துறவிகளை அமர்த்திச் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்து வந்தார்கள். சுசீந்திரம், பறக்கை, கன்னியாகுமரி, வாணந்திட்டு, வீமநகரி, அருமநல்லூர் முதலிய பல இடங்களிலும் மடங்கள் இருக்கின்றன. இவற்றுக்கென ஏராளமான நிலபுலன்கள் உண்டு. இம்மடங்களுள் ஒன்றான வாணந்திட்டு மடத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரான் அவர்களிடம் தமிழ் கற்றவன் நான். இம்மடங்கள் நாஞ்சில் நாட்டில் அளவற்ற மதிப்பும் பெற்றிருந்தன, அந்தக் காலத்தில். பிற்காலத்தில் இவை தம் கடமையினின்று பெரிதும் வழுவி விட்டன என்று சொல்லாமலிருக்க வழியில்லை. இது மிகவும் வருந்துதற்குரியது. இப்பொழுதேனும் தம்மைத் திருத்திக் கொண்டு ஆதினத்தார் பணிபுரிய வந்திருப்பதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்போம்.

சுசிந்திரத்தில் மட்டும் ஒரு தேவாரப் பாடசாலை இருந்தாற் போதாது. சிற்றூர்களிலெல்லாம் அவை ஏற்பட வேண்டும். அங்கெல்லாம் சைவசமயப் பிரசாரம் நன்முறையில் நடத்தப்படவேண்டும். பழைய ஸ்தல புராணக் கதைகளை மட்டும் இந்தக் காலத்தில் திருப்பித்திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவை எவர் செவிகளிலும் ஏறமாட்டா. ஸயன்ஸூம் சரித்திரமும் படிக்கின்ற காலம் இது. சோதனையும், சாசனமும் கொண்டு அவை நிரூபிக்கப்படுகின்றன. இப்படிப் படித்தவர்களிடம் அம்மாதிரியான கதைகளுக்கு இடமுண்டா? மதிப்புண்டா? ஆகவே அவற்றை அடியோடு நீக்கிவிட்டு, நல்ல முறையில் சமயப் பிரசாரம் நடத்தி வந்தால் மக்கள் பயன் பெறுவார்கள். அதுவே உண்மையான தொண்டுமாகும்.

தேவாரப் பாடசாலைகளோடு சேர்த்துப் பெரிய நூல் நிலையம் ஒன்றும் அமைப்பது நலம். அதில் சமய சம்பந்த

மான நூல்கள் அனைத்தும் இருக்கவேண்டும். அன்றியும் கோவில் அமைப்பு, அங்குள்ள சிற்பங்கள், சாசனங்கள், விக்கிரகங்கள் என்பவற்றை விளக்கிக் காட்டும் நூலொன்றும் கோவில்தோறும் இருப்பது மேலானது. பேராசிரியர் டாக்டர் கனக சபாபதிப் பிள்ளையவர்கள் இத்தேவாலயத்தைப் பற்றித் தயார் செய்து வைத்திருக்கும் புத்தகம் இதற்குத் தகுந்த முன்மாதிரியா யிருக்குமென்று கூறிக் கொள்ளுகிறேன்.* விக்கிரகங்கள் பற்றிய நூல்கள் (Iconograpy) எத்தனையோ ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவை தமிழிலும் வரவேண்டும்.

நம் நாட்டுக் கோவில்கள் வெறும் கற்கோவில்களல்ல; அவை கலைக் கோவில்களாகும். அங்குள்ள சித்திரங்களும், சிற்பங்களும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நம்மை இன்பவெள்ளத்துள் ஆழ்த்துகின்றன. குரலிலும் கருவிகளிலுமெழுப்பப்படும் இன்னிசை புலனெடுங்கச் செய்கின்றது. நாட்டியமும், போதனையும், பாராயணமும் அறிவுக்கு விருந்தாயிருக்கின்றன. சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனங்கள் கோவிலினுடையவும், நாட்டினுடையவும், மக்களுடையவும் வரலாற்றைப் போதிக்கின்றன. மக்கள் எல்லோரும் இப்பயன்களை அடைய வேண்டுமென்பது பண்டையோர்களின் இலட்சியக் கொள்கையாயிருந்தது. ஆனல் இன்று......?

நாட்டியம் அதனைக் கையாண்டவர்களின் ஒழுக்கக் குறைவால் கோவில்களிலில்லாமல் ஒழிந்துபோயிற்று. இசை அனுபவிக்க இயலாதவாருகிவிட்டது. சாசனங்களோ சீரழிந்து கொண்டு வருகின்றன. அவற்றைக் கவனிப்பாரில்லை. சாசனக் கற்களைத் துண்டுபடுத்துகிருர்

---

* இந்நூல் சென்னை அடையாற்றிலுள்ள கலாக்ஷேத்திரத்திலிருந்து இப்பொழுது வெளியாகி யுள்ளது.

கள். அவற்றின்மேல் சுண்ணும்பு பூசுகின்றார்கள். அல்லது அவற்றிடையே சுவர்கட்டி எழுப்புகிறார்கள். இப்படி, விலையறிய முடியாதவர்களால் சாசனங்கள் பெரிதும் அழிந்து வருகின்றன. அதிகாரிகள் இவற்றில் சற்றுக் கவனம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாசனங்களைத் துலக்கிச் சாயமிட்டு, யாவரும் படிக்குமாறு செய்யவேண்டும். அவற்றின் பக்கத்தில் சிறு குறிப்புக் கூடக் கொடுக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிற்பங்களைப் பற்றிச் சில சொல்ல ஆசைப்படுகிறேன். கோவில்களில் பார்த்துப் பரவசமடையத் தகுந்த அழகழகான சிற்பங்களிருக்கின்றன என்பது உண்மை. அதே சமயத்தில் கண்டகண்ணைக் கழுவத் தகுந்த ஆபாசச் சிற்பங்களுமிருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. இங்கே சில தூண்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களைப் பற்றி அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஆணும் பெண்ணுமாக நின்று பார்க்கத் தகாதவை; ஒரு தந்தையும் மகனும் நின்று பார்க்கத் தகாதவை; அண்ணனும் தங்கையும் நின்று பார்க்கக் கூடாதவை. இப்படிப்பட்ட ஆபாசச் சிற்பங்கள் ஏன் இருக்கின்றன என்று கேட்கிறேன். இவற்றைச் சாத்திரங்கள் அனுமதிக்கின்றனவா? எந்தச் சாத்திரங்கள்? இதுபற்றி எத்தனையோ சாத்திரிகளிடம் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் கூறுகின்றவை நழுவிக் கொள்வதற்குச் சொல்கின்ற பதில்களாயிருக்கின்றனவே ஒழிய, அறிவுடையார் ஏற்கும் பதில்களாயிருக்கக் காணேம். பலப்பல சிற்பங்களும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றனவே. இவற்றையும் வரைந்து அவை பிரசுரிக்குமா? உலகம் அவற்றை ஏற்குமா? எந்தச் சாத்திரம் அனுமதித்தாலும் சரி; எந்தச் சாத்திரியார் ஆதரவு தந்தாலும் சரி. இவற்றைச் செதுக்கி எறியவேண்டுவது மிகமிக

அவசியம். இப்படியே பலதுறைகளிலும் கோவில்களில் படிந்துள்ள மாசுகளைப் போக்கவேண்டும்.

இன்னொன்று. கோவில் பொருள்களை விளக்கிக் காட்ட வல்ல 'விளக்கங் கூறுவோர்' (guide) ஒருவர் கோவில்கள்தோறும் தேவை. இல்லாவிட்டால் ஒன்றை இன்னொன்ருக மக்கள் புரிந்துகொண்டு போவார்கள். சில சமயம அறிஞர்களுக்கே இந்த மயக்கம் ஏற்படுவதுண்டு. கலியாண மண்டபத்தில் பிடிமொந்தை வைத்திருக்கும் சிலையைப் பார்த்துவிட்டு, மஷிக்குப்பியும் பென்னும் ஏந்தி யிருப்பதாகச் சொல்லிக் கொடுத்தார் ஒருவர். கோபுரத்தின் அடியில், அர்ச்சுனனுக்குக் கண்ணன் கீதோபதேசம் செய்வதைக் காட்டும் சிற்பத்தை, அது சூரியனுடைய அவதாரம் என்று புரிந்துகொண்டு 'இந்து'ப் பத்திரிகையில் எழுதிவிட்டார் இன்னொருவர். பின் அது உண்மை கூறி மறுக்கப்பட்டது.

வேரூர் இடத்தில் உள்ள ஒரு சிற்பத்தைக் கண்டு வியாக்கியானம் செய்தார் ஒருவர். பெண் தோற்றத் தோடு கூடிய அதற்கு ஒரு மார்புதான் இருந்தது. இதைப் பார்த்து அந்த அறிஞர் என்ன சொன்னார் தெரியுமா? "பண்டை நாளில் ஆண்களைப் போலவே பெண்களும் வீரர்களா யிருந்தார்கள். அவர்கள் விற்போரில் வல்லவராயிருந்தனர். வில்லின் நாணை இழுத்துப் பிடித்து அம்பு தொடுப்பதற்கு வலது மார்பு இடைஞ்சலாயிருக்குமாதலால் பெண்கள் நாளடைவில் அதனை வளரவிடாமல் தடுத்துவிடுவது வழக்கம். அத்தகைய ஓர் வீரப் பெண்மணியின் சிலையே இது" என்று ஆராய்ந்து கண்டுபிடித்துக் கூறியிருக்கிருர். எவ்வளவு சிறந்த ஆராய்ச்சி பார்த்தீர்களா? ஐயோ! பாவம்! அர்த்த நாரீசுவரர் விக்கிரகம அது என்று அவர் கண்டாரா? கேட்டாரா?

இப்படிப்பட்ட பொல்லாத ஆராய்ச்சிகள் தோன்ருவாறு தடுக்க வேண்டுவது அவசியமல்லவா? இதற்காகவே கோவில்தோறும் விளங்கங் கூறுவோர். இருக்க வேண்டுமென்று கூறினேன். ஒரு கோவிலைச் சார்ந்து தேவாரப் பாடசாலையும, நூல் நிலையமும், கோவில் விளக்கமும் இருக்க வேண்டும். பண்டை நாளில் கோவில் பாடசாலையாக மட்டுமல்ல; மருத்துவ சாலையாகவும், ஆதுலர் சாலையாகவும் இருந்துவந்திருக்கிற தென்பதை சாசனங்களால் அறியமுடியும். அப்படியே இனிமேலும் அவை சிறந்து விளங்குமாக! முன்னைய ஆக்க வேலைகளோடு புதிய தொண்டுகள் பலவற்றையும் அவை மேற்கொண்டு மக்களுக்கு சாதிமத பேதமின்றி நன்மை புரிந்து வரட்டும்! இதற்கு வேண்டிய அளவு அரசாங்கத்தினுடையவும் மடாதிபதிகளுடையவும் ஒத்துழைப்பு இணையட்டும். இதனல் ஆக்கம் பெருகி, ஒளிபரவத் தாணுநாதர் அருள் புரிவாராக!

# 2. வரவேற்புரை *

இனிய தமிழில் செந்தமிழில் என்றும் தழைத்து வரும் தமிழில் கனியும் பாலும் தேனுங்கற் கண்டும் அனைய கவிதைகள், கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், நவீனங்கள் முதலியவற்றை எழுதித் தமிழ் மக்களுக்கு அறிவையும் ஆனந்தத்தையும் பெருக்க வல்ல எழுத்தாளர் பெரு மக்களே! அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் நல்வரவு கூறி, என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாஞ்சில் நாட்டில் இத்தகைய ஒரு கூட்டம் இது வரை கூடினதே இல்லை. உங்களை யெல்லாம் வரவேற்கும் படியான ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது வாய்த்தது எங்கள் பாக்கியமே யாகும். திருவிதாங்கூர், நாஞ்சில் நாடு என்று கேட்ட உடன் தானே, பக்கத்திலிருக்கிற திருநெல்வேலிக்காரர்களும் கூட இது ஒரு மலையாள நாடென்றும், இங்குள்ளவர்களெல்லாரும் மலையாளிகளென்றும், அவர்கள் யாவரும் பேசுவது மலையாள மென்றும் தீர்மானித்து விடுகின்றனர். இது முற்றிலும் தவறான கொள்கையாகும்.

திருவிதாங்கூர் சேர நாட்டின் ஒரு பகுதி என்பதை அறியாதவர் யார்? சேர அரசர்கள் யாவரும் செந்தமிழ் வேந்தர்களாயிருந்தார்கள் என்பதைச் சங்க கால இலக்கியங்கள் நமக்குக் காட்டவில்லையா? சேரமான் பெருஞ்

---

* நாகர் கோவிலில் (14-5-1948) நடைபெற்ற மூன்றுவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின்போது நிகழ்த்திய வரவேற்புப் பிரசங்கம்.

சேரலாதன் முதலான அரசர்கள் தமிழ்ப் பாடல்களுக்குப் பரிசிலாக நாடும் ஊரும்—ஏன்—அரசாட்சியையும் கூடக் கொடுத்தார்கள் என்பதைப் பதிற்றுப் பத்து என்ற இலக்கியம் கொண்டு அறிகிறோம்.

வடநாட்டு ஆரிய மன்னர்கள் தமிழர்களைப் பழித்துக் கூறியபோது சினந்தெழுந்தவன் சேரனா? சோழ பாண்டியர்களா?

**'வாய்வாள் ஆண்மையின் வண்டமிழ் இகழ்ந்த**
**காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்**
**.......................................**
**செங்குட்டுவன் தன் சினவலை'யில் பட்டார்கள்.**

(கால்கோள். *221-224*)

என்று தானே சிலப்பதிகாரம் சொல்லுகின்றது?

சேர வேந்தர்கள் பாடல் பெற்ற வேந்தர்கள் மட்டுமல்ல. பாடியவர்களும் ஆவார்கள். சிலப்பதிகாரம் பாடியவர் ஒரு சேர மரபினர். கலித்தொகையுள் பாலைக்கலி பாடியவர் பெருங்கடுங்கோ என்ற சேர வேந்தர். ஐங்குறுநூற்றுள் ஒருதிணை பாடியவரும், அதனைத் தொகுப்பித்தவரும் சேரவேந்தர்கள். புறப்பொருள் வெண்பாமாலை பாடியவர் யார்? ஐயனாரிதனார் என்ற சேர மரபினர்தான். ஆதி உலா என்னும் சிறப்புப் பெயர் பெற்ற திருக்கைலாய ஞானவுலா, பொன்வண்ணத் தந்தாதி என்பவை பெருமை வாய்ந்த செந்தமிழ்ப் பிரபந்தங்கள். இவற்றைப் பாடியருளியவர் அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனாரல்லவா? சைவ சமயத்துக்கு ஒரு பெரியாரை ஈன்றளித்த சேரகுலம் வைணவ சமயத்துக்கும் ஒருபெரியாரைப் பிறப்பித்தது. அவர்தாம் குலசேகர ஆழ்வார்; பெருமாள் திருமொழி என்ற திவ்

வியப் பிரபந்தம் பாடியவர். இப்படிச் சிறந்த தமிழிலக் கியங்களையும் சமய நூல்களையும் தமிழுக்கு உபகரித்த பல பெரியார்களைத் தோற்றுவித்தது இந்தச் சேரர்குலம் என்பதைப் பெருமையுடன் சொல்லித்தான் ஆக வேண் டும். இது மட்டுமல்ல. தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட போது சபைத் தலைமை பூண்டிருந்த அதங்கோட்டாசான் இந்த நாட்டுக்காரர். அதங்கோடு என்ற ஊர் விளவங் கோட்டுத் தாலுகாவில் இன்றும் இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருவிதாங்கூர் என்ற பெயர் வந்த வகையைப்பற்றியும் சிறிது சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பெயர் ஏற்பட்ட விதத்தை நினைக்கும்போது சென்னையிலுள்ள ஹாமில் டன் பிரிட்ஜ் அம்பட்டன் பிரிட் ஜான கதைதான் நினைவுக்கு வருகிறது. இது திருவிதாங் கூர்' அல்ல; 'திருவிதாங்கோடு' ஆகும். இதனை ஆங்கி லேயர்கள் 'ட்ராவன்கோர்' என்றெழுதினார்கள். பின் மலையாளத்தில் எழுதும்போது அதனையே பெயர்த்துத் திருவிதாங்கூர் என்றெழுதி விட்டார்கள். அவ்வளவுதான். இனி திருவிதாங்கோடு என்ற பெயர்தான் எப்படி வந் தது என்று சிந்திக்க வேண்டும். கல்வெட்டுக்களில் 'முதாங்கோடு' என்ற பெயர் காணப்படுகிறது. வேள்விக் குடிச் செப்பேட்டில் 'செங்கோடியும் புதாங்கோட்டும் செருவென்றவர் சினந்தவிர்த்து' என வருகின்றது. முதாங்கோடு என்பதும் புதாங்கோடு என்பதும் ஒன்றைத் தான் குறிக்கின்றன. ஏனென்றால் வட்டெழுத்தில் 'பு' வுக்கும் 'மு' வுக்கும் வரி வடிவில் அதிக வேறு பாடு இல்லை. இவற்றுள் ஒன்றை இன்னொன்றாக வாசிக்கும் தவறுதல் உண்டாவது இயற்கை. ஆகவே திருமுதாங் கோடு என்ற பெயரே திருவிதாங்கோடு எனத் திரிந்தி ருக்கலாம்.

திருவிதாங்கோட்டுக் கோவிலில் வட மொழியில் எழு தப்பட்ட சுலோகமொன்று காணப்படுகிறது. அதில் அங்குள்ள கடவுளை 'வடக்ரோட தேவ' எனக் கூறியிருக் கிறது. இதற்கு 'ஆலமரத்தின் பொந்திலிருக்கிற கடவுள்' (God in the hollow of the Banian tree) என்பது பொருள். அப்படியானல் **மூதாலங்கோடு** என்னும் பெயர் நாளடைவில் திரிந்து **முதாங்கோடு** ஆயிற்ரு என ஊகிக்க இடமுண்டு. அது அடைமொழி ஏற்றுத் திருமுதாங்கோடு ஆகிப் பின் திருவிதாங்கோடு எனத் திரிந்திருக்க வேண்டும்.

நீங்கள் இந்த நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள், செப்பேடு கள் முதலியவற்றைப் பார்ப்பீர்களானல் இது தமிழ்நாட் டின் ஒரு பகுதி என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொள் வீர்கள். ஒரு நாட்டிலுள்ள கல்வெட்டு, செப்பேடு, ஓலைப் பிரமாணம் முதலியவை சாதாரணமாக அந்நாட்டில் வழங்கிவரும் மொழியிலேதான் எழுதப்பட்டிருக்கும் என் பது யாவரும் அறிந்த உண்மை. முன்சிறையில் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் ஆண்ட கோக் கருநந் தடக்கன் என்ற ஆய் அரசன் காலத்துச் செப்பேடு ஒன்று வெளியாகி இருக்கிறது. அதில் அம்மன்னன் பார்த்திப சேகரபுரம் என்று தன் பெயரால் கோவில் ஒன்று கட்டி, வேத அத்யயனத்துக்கென உயர்தரக் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தித் தானம் விட்ட செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது.

விழிஞம் என்ற ஊர் ராஜேந்திர சோழ தேவனது ஆட்சியின்கீழ் இருந்தது. அதற்கு **'விழிஞமான ராஜேந் திர சோழபட்டணம்'** என்பது பெயர். இது பற்றிய ஆதாரங்கள், கல்வெட்டுக்கள் முதலியவை இருக்கின்றன. திருநந்திக்கரையில் ராஜராஜ சோழன் கல்வெட்டு இருக் கிறது. அதில் அவன் தன் பிறந்த நாளான ஐப்பசிமாதச்

2

சதயநாளில் திருவிழா நடத்துவதற்கு நிபந்தம் விட்ட செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

> **'...........வள்ளுவநாட்டு முட்டம் என்னும் பேர் தவிர்த்து மும்முடி சோழ நல்லூர் என்று பேராக்கி, இந்நாட்டுத் திருநந்திக்கரை மாதேவர்க்குப் பெரு மாள் ஐப்பிகைச் சதயத்தின் நாள்..........திருவிழா எடுத்து'**
>
> **(T. A. S. Vol. I. Page, 292)**

இதில் பெருமாள் என்றது ராஜராஜ சோழனே. தென் கடற்கரையிலுள்ள முட்டமும் இவன் ஆட்சியிலிருந்த தாகக் கல்வெட்டினால் தெரியவருகிறது.

இப்படி எத்தனையோ ஆதாரங்கள் காட்டலாம். இவையெல்லாம் எதை விளக்குகின்றன? இது ஒரு தமிழ் நாடு என்பதற்கு இவற்றைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

இந்நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் செப்பேடுகள் எல் லாம் தமிழ் என்றேன். பழமையான ஏட்டுச்சுவடிகள் கிடைக்குமானால் அவையும் தமிழாகத்தான் இருக்கும். சிறிது காலத்துக்கு முன்னால் மலபாரிலிருந்து ஒரு ஏட்டுப்பிரதி கிடைத்தது. அது வட்டெழுத்தில் எழுதப் பட்ட திருவாய்மொழி ஏடு. இதைத் தாம் நேரில் பார்த்த தாகக் காலஞ்சென்ற கே. ஜி. சேஷையர் அவர்கள் என் னிடம சொன்னார்கள்.

மலைநாட்டில் பாடகம் சொல்லும் வழக்கம் இருக்கிறது. அதாவது, காவியம், இதிகாசம், புராணம என்பவற்றி லுள்ள யாதேனும் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு ஆடிப்பாடி அபிநயித்துக் காட்டுவதாகும். இதற்குக் கம்பராமாயணப் பாடல்களைப் பயன்படுத்தி வந்ததாகப் பழைய ஏடுகள் கொண்டு அறிய முடிகிறது.

திருவிதாங்கூர் அரசாங்கத்தார் 'வலைவீசு புராணம்' என்றொரு ஏட்டுச் சுவடியைப் புத்தகமாகப் பதிப்பித்திருக்கிறார்கள். இதை மலையாளிகள் யாரும் வாங்குவதில்லை. ஏன்? பாடல்களெல்லாம் தமிழ்ப்பாடல்கள். அவர்களுக்குப் பொருள் விளங்காது. தமிழர்களும் வாங்குவதில்லை. காரணம் தமிழ் நூலைப் பழைய மலையாளமென்று நினைத்து மலையாள எழுத்தில் பதிப்பித்திருப்பதுதான். பாடல்களெல்லாம் தூய தமிழ். கதை திருவிளையாடற் புராணத்திலுள்ள வலைவீசு படலத்தைத் தழுவியது.

அரண்மனையிலுள்ள கையெழுத்துப் பிரதிகளிலிருந்து சமீபத்தில் ஓர் ஏடு கிடைத்தது. அரிச்சந்திரன் கதையை வெண்பாவினால் எழுதப்பட்ட ஏடு இது. இதை முதனூலாகக் கொண்டுதான் வீர கவிராயர் அரிச்சந்திர புராணம் பாடியிருக்கிறாரென்பது,

**விதியினர சிழந்தவரிச் சந்திரன்றன்**
**வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி**
**அதிவிதமாங் கலியுகத்தில் வருச காத்தம்**
**ஆயிரத்து நானூற்று நாற்பத் தாறில்**
**சதுமறைதேர் புல்லாணித் திருமால் முன்னே**
**சக்கரதீர்த் தக்கரைமேல் மண்ட பத்துள்**
**கதிருசீர் நெல்லூர்வாழ் வீரை யாசு**
**கவிராசன் கவியரங்க மேற்றி னனே**

என்ற பாடலால் தெரிய வருகின்றது. இந்தச் சுவடியின் பிரதி வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனைத் தாமதியாமல் நமது திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தார் வெளியிடுவார்களென்று நம்புகிறேன்*.

---

* இந்நூல் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகப் பேராசிரியராயிருந்த ராவ்ஸாகிப் ஸ்ரீ. மு. இராகவையங்கார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று, ஷை பல்கலைக் கழகவெளியீடாக 1949-ல் வெளிவந்துள்ளது.

தேடிப்பார்த்தால் இத்தகைய ஏட்டுப்பிரதிகள் இன்னும் எத்தனையோ மேல் கடற்கரை நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறலாம். அவற்றைத் தேடிச் சேர்ப்பது மட்டுமல்ல, இன்னும் வெளிப்படுத்தப் படாமல் கிடக்கின்ற பல கல் வெட்டுக்களையும் வெளிக்கொண்டு வருவதும் மிகுந்த பயனைத் தருவதாக இருக்கும்.

நாஞ்சில் நாட்டைப்பற்றியும் இந்தச் சந்தர்ப்பத்தில் சில சொல்ல ஆசைப்படுகிறேன். இது நன்செய் மிகுந்த வளநாடு. நாஞ்சில் வள்ளுவன் ஆண்டநாடு. மாமதில் போல் மலை ஆளும் நாடு. வானம்—மாதம் மும்மாரி பொழியும் நாடு.

**பண்ணை பெருத்த பழநாடு—சுற்றிப்**
**பார்த்திடக் கண்கள் குளிரும்நாடு**
**மண்ணையும் பொன்னுக மாற்றும்நாடு—கவி**
**வாணர் புகழும் தமிழ்நாடு.**

நாஞ்சில் வள்ளுவன் செய்தி புறநானூற்றால் அறியப் படுவது. ஆகவே அதனோடு ஒத்த பழமையுடையது இந்நாடு. சங்க இலக்கியங்களில் பஃறுளி என்று கூறப் படும் ஆறு தான் இந்நாட்டை வளம்படுத்தும் பழையாறு. இதன் உற்பத்தி இடம் இன்றும் பறளியாறு என்று அழைக்கப்படுகிறது. இதன் முதல் அணை 'தலையணை' என்று சொல்லப்படும்; பாண்டியன் கட்டியது ஆதலால் 'பாண்டியன் அணை' என்றும் கூறுவர். அதில்,

**எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் தோன்றி**
**இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டா மாண்டில்**
**வெற்றிசெயும் கும்பத்தில் வியாழன் நிற்க**
**விளங்குபுகழ் ஆவணிபன் னிரண்டாந் தேதி**
**தத்திவிழும் பறளியாற் றணையும் தள்ளி**
**தமிழ்ப்பாண்டி ராஜசிங்கம் தனையும் வென்று**
**கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சி நாடும்**
**கோட்டாறும் கூபகர்கோன்* கொண்ட நாளே**

* கூபகர்கோன்-திருவிதாங்கோட்டரசன்.

என்னும் பாடல் இருப்பதாகக் கூறுவர். ஆனால் கண்டவர் ஒருவரும் இல்லை.

இந்த ஆற்றிற்குக் கோட்டாறு என்றும் பெயருண்டு. அதைத் 'தந்த நதி' என வடமொழியில் பெயர்த்துப் புராணகாரர்கள் அதற்கோர் கதையும் கட்டிவிட்டனர். பழையாறு என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டதுதான். நாஞ்சிநாட்டுப் புத்தனாறு என்ற சிற்றாறு பிற்காலத்தில் வெட்டப்படவே, தாய் நதியான இது பழையாறு என்ற பெயரைப் பெற்றது. இதனை நாஞ்சில் நாட்டுக் காவேரி என்று கூறினும் பொருந்தும். கோடையிலும் பல்துளி நிறைந்து நீர்வளம் சுரக்கும் காரணத்தால் பஃறுளி எனப் பட்ட ஆறே நாஞ்சிலின் செழுமைக்குக் காரணமான பழையாறு என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

இன்று நாகர்கோவில் என்றழைக்கப் படுகிற நகரம் இந்தக் கோட்டாற்றின் கரையில் இருப்பதால் கோட்டாறு என்றே பெயர் பெற்றிருந்தது. இதுதான் பழமையான பெயர். நாகர்கோவில் இதன் ஒரு பகுதிதான். கிறிஸ்தவ மிஷனறிகள் நாகர்கோவிலில் வந்து தங்கி, பள்ளிகளும், பாடசாலைகளும் கட்டின பிற்காலத்தில் நாகர்கோவில் என்ற பெயர் பிரசித்தி பெறத் தொடங்கியது.

இப்பெயர் கொண்ட பெரிய ஆலயமொன்று நாகர்கோவில் பட்டணத்தின் வடகிழக்குப் பகுதியில் இருக்கின்றது. இது ஆதி காலத்தில் ஒரு சமணக் கோவிலாக இருந்ததென்றும், பிற்காலத்தில் ஒரு இந்துக்கோவிலாக மாறியிருக்கிறதென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்தக் கோவில் சந்நிதி மண்டபத்தின் சுவரிலும் தூண்களிலும் மகாவீரர், பார்சுவநாதர், பத்மாவதி இவர்களுடைய சிலைகள் செதுக்கப்பட்டிருப்பதை இன்றும் பார்க்கலாம். '**கோட்டாறு ஆன மும்முடி சோழபுரத்து நாகர்**

**கோயிலில் பள்ளியுடைய குணவீர பண்டிதனும் கமலவாக பண்டிதனும்'** என்றுவரும் சாசனப் பகுதியும் கவனிக்கத் தக்கது. ஞாயிற்றுக்கிழமை இந்தக் கோயிலில் விசேஷ நாளாம். ஒருவித நனைந்த மணல் பிரசாதமாக வழங்கப் படுகிறது.

கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் கோட்டாற்றைப் பற்றி மிகுதியும் சொல்லப்பட்டிருக்கின்றன. ராஜ ராஜ சோழன் இதைக் கைப்பற்றிய காலத்தில் இதற்குக் **'கோட்டாருன மும்முடி சோழபுரம்'** எனப் பெயர் கொடுத்தான். ராஜேந்திர சோழன், ராஜாதிராஜன், குலோத் துங்க சோழன் முதலானவர்களுடைய ஆட்சியின் கீழும் கோட்டாறு இருந்ததாகத் தெரிகிறது.

இந்நகரத்தின் ஒரு பகுதியான ஒழுகினசேரியின் பக்கத்திலுள்ள இடத்துக்குச் சோழபுரம் எனப் பெயர் ஏற்பட்டதும், அங்கே 'ராஜேந்திர சோழீசுரம்' என்ற கோவில் அமைந்ததும், பழையாற்றில் 'சோழன் கட்டு அணை' கட்டப்பட்டதும் இச்சோழர்களின் ஆட்சிக் காலத்திலாயிருக்கவேண்டும். சோழர்களின் நிலப் படை ஒன்று இங்கிருந்ததாகவும் இலக்கியங்களாலும் கல்வெட்டுக்களாலும் அறியக்கிடக்கின்றது.

இவ்வூரை விட்டுச் சுசீந்திரத்துக்குச் சற்றுச் செல்வோம். தாணுமாலையப் பெருமான் கோவிலையுடைய பழமையான ஸ்தலம் இது. பாண்டியர், சோழர், சேரர், விஜய நகர வேந்தர், நாயக்க அரசர் என்பவர்களுடைய கல்வெட்டுக்கள் இங்கே ஏராளம் இருக்கின்றன. சோழ அரசர்களின் ஆட்சிக் காலத்தில் இது **'சுசீந்திரமான சுந்தர சோழ சதுர்வேதிமங்கலம்'** என்றழைக்கப்பட்டது. பாண்டியன் ஆட்சியில் வந்தபோது **'சுந்தர பாண்டிய சதுர் வேதி மங்கலம்'** எனப்பட்டது. வீரகேரள மன்னன் கல்வெட்டு இதனை **'வீரகேரள சதுர்வேதி மங்கலம்'** எனக்

குறிப்பிடுகிறது. இங்கு நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. வடமொழியிலுள்ள ஒன்றிரண்டைத் தவிர மீதியெல்லாம் தமிழ்.

கோவிலின் சந்நிதியின் முன்புள்ள ஒரு மண்டபத்தின் பெயர் வீரபாண்டியன் மணிமண்டபம். அதை அடுத்துள்ள இன்னொரு மண்டபத்துக்குச் செண்பக ராமன் மண்டபம் என்று பெயர். அதில் தென் பகுதியில்—அதாவது பெருமாளுக்கு முன்புள்ள பகுதியில்—விஷ்ணுவினுடைய லீலைகள் பலவும் சிற்பத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் இராமாயணக்கதையும் ஒன்று. சிற்பத்தின் சில குறிப்புக்களைக்கொண்டு அது கம்ப ராமாயணக் கதையைப் பின்பற்றிச் செய்யப்பட்டது என்று அறியலாம்.

சந்நிதியில் இப்பொழுதிருக்கிற கோபுரத்தைக் கட்டுவித்தவர் 'நாடுநீங்கின' ஸ்ரீமூலம் திருநாள் மன்னர்பிரான் ஆவர். இதற்கு முன்னிருந்த கோபுரம் விஜயநகர வேந்தரான கீர்த்திபெற்ற கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டதாகும். இதை விளக்கும் கல்வெட்டு கோபுரத்தினடியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. கோவிலின் உள்ளே விஜயநகர வேந்தர்களுடையவும் நாயக்க அரசர்களுடையவும் சிலைகளைக் காணலாம்.

கோபுரத்தின் அடியிலுள்ள கல் சுவரிலும், மண்டபங்களிலும் இருக்கும் அழகழகான சிற்பச்சிலைகள் பார்ப்பவர் கண்களைக் கவரும் என்பதற்கு யாதும் ஐயமில்லை. இக்கோவில் ஒரு காலத்தில் 'தெய்விக நீதி மன்றம்' (**Divine Court of Justice**) என்று கருதப்பட்டு வந்தது. நம்பூரிப் பிராமணர்கள் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்பட்டால் சந்நிதியின் முன் காய்ச்சின நெய்யில் கையைமுக்கச்செய்து சோதிக்கப்படுவார்கள். இதற்குச் 'சுசீந்திரம் கைமுக்கு'

என்று பெயர். இதை விவரித்துக் கூற இடமில்லாததி னல் இம்மட்டோடு விட்டுவிடுகிறேன்.

இனிச் சுசீந்திரத்தை விட்டுக் கன்னியாகுமரி வரையும் சற்றுச் சென்று வருவோம். இது பண்டைக் காலத்தில் 'குமரி' என்றே அழைக்கப்பட்டு வந்தது. பண்டை இலக் கியங்களிலும், யாத்ரிகர்களுடைய குறிப்புக்களிலும் இதைப்பற்றிய செய்திகள் அறியக் கிடக்கின்றன.

கன்னியாகுமரியும் அதைச் சூழ்ந்துள்ள இடமும் கல் வெட்டுக்களில் 'புறத்தாயநாடு'என்று சொல்லப்படுகிறது. **'இராஜராஜப் பாண்டிய நாட்டு உத்தமசோழவள நாட்டுப் புறத்தாயநாடு'** என்னும் தொடரை நோக்குக. 'குமரிச் சேர்ப்பன்' என்பது பாண்டியன் பெயர்களுள் ஒன்று பகவதி நாய்ச்சியார், பராந்தக பாண்டியன் சாசனமொன் றில் **'தென்னவர்தம் குலதெய்வம்'** என்று குறிக்கப்பட் டிருக்கின்ருள். கோவிலில் சோழர், பாண்டியர், விஜயநகர வேந்தர்கள், நாயக்க அரசர்கள், திருவிதாங்கூர் அரசர்கள் என்பவர்களுடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கொடிமரத்தின் அடிப்பீடத்தைச் சுற்றி விஜயநகர அரசருடைய கல்வெட்டு ஒன்று ஸம்ஸ்கிருத எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. கொடிமரத்தை யடுத்துள்ள சந்நிதி மண்டபச் சுவரில் தெலுங்கில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு இருக்கிறது. இவ்விரண்டும் இதுவரையிலும் சரியானபடி பரிசோதித்து வெளிப் படுத்தப்படவில்லை. உட்கோவில் சுற்றுச் சுவரில் அனேக கல்வெட்டுக்கள் சுண்ணும்புப் பூச்சுக்குள் மறைந்து கிடக்கின்றன. கோவில் புதுப்பிக்கிற காலத்தில் உடைபட்டுப்போன எழுத்துக் கற்களுக்கு அளவில்லை.

1766-ல் தான் கன்னியாகுமரி திருவிதாங்கூரோடு சேர்ந்தது. இது நாகமையா எழுதிய 'திருவிதாங்கூர்

ஸ்டேட் மானுவல்' முதல் வால்யூம் 379-ம் பக்கத்தால் தெரிகிறது.

இவ்வளவு ஆதாரங்களும் கொண்டு இது மலையாள நாடா? அன்றித் தமிழ் நாடா? என்பதைப்பற்றி முடிவு கட்ட வேண்டும் பொறுப்பை உங்களுக்கே விட்டு விடுகிறேன். இவை போதா என்றால் வெளியிடங்களிலிருந்து வந்துள்ள உங்களிடம் இந்நாட்டை ஒருமுறை சுற்றிப் பார்க்கும்படி வேண்டுகிறேன். மக்களின் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், பேச்சுவழக்கு, ஆசாரம் என்பவற்றைக் கவனியுங்கள். அப்போது உண்மை விளங்கும். இங்கே எடுத்துச் சொல்லத் தொடங்கினால் அது மிக விரிந்துபோகும். இந்நாட்டிலுள்ள எந்தப் பழமையான கோவிலுக்குச் சென்றீர்களானாலும் சுவர்கள் தமிழ்மொழியில் தங்கள் வரலாறுகளை எடுத்துக் கூறுவதை அறிவீர்கள்.

இத்தகைய பழந்தமிழ் நாட்டிலே இன்று தமிழ் படும் பாடு அந்தோ! பரிதாபம்!

**நான்படும் பாடு சிவனே**
**உலகர் நவிலும் பஞ்சு**
**தான்படு மோசொல்லத் தான்படு**
**மோ? எண்ணத் தான்படுமோ?**
**கான்படு கண்ணியில் மான்படு**
**மாறு கலங்கி நின்றேன்;**
**ஏன்படு கின்றனை என்றிரங்**
**காயெனில் என்செய்வனே?**

(திருவருட்பா, திருவருள்முறையீடு, 10)

என்ற பாடலுக்கு இலக்காய் நின்று பரிதவிக்கிறது. தமிழ் புறக்கணிக்கப்படுகிறது. தமிழன் என்றால் ஏளனம் செய்யப்படுகிறான். எழுத்தாளர் பெருமக்களே! இதனை எண்ணிப் பாருங்கள்.

ஆனால் இந்த வறட்சியிலுங் கூடத் தமிழ் விதை இந் நாட்டில் கருகிப் போகவில்லை. அவ்வப்போது புலவர் மணிகள் பலர் தோன்றிக் கொண்டுதான் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள். காலஞ் சென்ற கவிஞர்களில் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும், செண்பகராமன்பள்ளு ஆசிரியர் அவர்களும், பக்திரசக் கீர்த்தனைகள் பல பாடிய நீலகண்டசிவம் அவர்களும், சட்ட ஞானமும் தமிழாராய்ச்சித் திறமும் வாய்க்கப் பெற்ற கே. ஜி. சேஷையரவர்களும், கந்தபுராணக் கீர்த்தனை பாடிய நீலகண்ட ஆச்சாரி அவர்களும், சாணக்கிய சூத்திரம் பாடிய அவர் மகன் கணபதி ஆச்சாரி அவர்களும், லலிதா புராணம் பாடிய தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும், ஆராய்ச்சி வல்லுநரான கே. என். சிவராஜ பிள்ளை அவர் களும், 'திவான்வெற்றி' என்னும் பெயருடைய விற்கவிதை பாடிய வெற்றி கொண்டான் புலவரும் குறிப்பிடத் தகுந்தவராவர்.

'இன்னமுதொழுகுமிசை தமிழிசை இந்நிலத்தோங் கிட' இரவும் பகலும் உழைத்து வரும் இசைக் கவியரசு இலட்சுமண பிள்ளையவர்கள், 'ஓரும் அவதானம் ஒருநூறு செய்திந்தப் பாரில் புகழ் படைத்த பண்டிதராம்' செய்கு தம்பிப் பாவலர் அவர்கள், 'கம்பன் கவியின் கனியமுதை ஊட்டி நம்மை அம்புவியில் தேவராய் ஆக்கி வரும்' குமரேச பிள்ளை அவர்கள் முதலியோர் இன்றைய தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவரின் பரம்பரையினராய் விளங்கிக் கொண் டிருக்கிறார்கள்*. இளம் புலவர்களும் எத்தனையோ பேர் இக்காலத்தில் இருக்கின்றனர். அவர்கள் பெயரையெல் லாம் இங்கு எடுத்துக்கூற நேரமில்லை.

---

* இவர்கள் மூவரும் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பூதவுடம்பு நீங்கிப் புகழுடம்பு பெற்றனர்.

இப்பொழுது தமிழுக்கு ஒரு நல்ல காலம் பிறந்திருக்கின்றதென்றே சொல்ல வேண்டும். இந்திய நாடு சுதந்திரம் பெறவே தமிழன்னையும் விடுதலை யடைந்து விட்டாள். ஒரு மொழியின் விடுதலை அந்நாட்டின் விடுதலையில் அடங்கினது என்பது நமக்குத் தெரிந்ததல்லவா? சுதந்திர தாகம் கொண்ட இந்தக் காலத்தில் எந்த நாடு அல்லது எந்த மொழிதான் இனி அடிமைப்பட்டுக் கிடக்கும்? தமிழன்னை அரியாசனத்தில் ஏறி ஆட்சி புரியத் தொடங்கி விட்டாள்.

சென்னை மாகாண அமைச்சர்கள் தமிழ் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமா யிருப்பது நமது பாக்கியமாகும். இன்னும் சில வருஷங்களுக்குள் அரசாங்க மொழியே தமிழாகிவிடும் என்று திட்டமாய் நம்பலாம். கலைக் களஞ்சியம் எழுதத் திட்டமிட்ட கல்வி மந்திரியை நாம் பெரிதும் பாராட்ட வேண்டும். இன்னும் பல ஆக்க வேலைகளை அவர்கள் செய்து வருகின்றார்கள். அவற்றுள் ஒன்று ஆஸ்தானப் புலவர் உத்தியோகம்.

நம் நாட்டில் புதுப்புதுக் காலேஜ்கள் தோன்றிய வண்ண மிருக்கின்றன. அவை வரும் வருஷம் முதலே தமிழில் கற்பிக்கத் தீர்மானித்திருப்பதும் ஐந்து வருஷங்களுக்குள் எல்லாம் தமிழ்மயமாக்கிவிடத் தீர்மானித்திருப்பதும் மேலானகாரியங்களல்லவா?* ஆங்கில மொழிக்கு அரணாய் அதற்கு வளப்புத்தாயாய் இருந்த காலேஜ்கள் இன்று தமிழின் தாயகமாக மாறிவிட்டன என்றால் தமிழ் வளர்ச்சிக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? பட்டமளிப்பு விழாவின் போது சொற்பொழிவுகள் கூடத் தமிழில் நடைபெறத் தொடங்கிவிட்டனவே!

இச் சந்தர்ப்பத்தில் தமிழின் முன்னேற்றத்துக்காகச் சில தனிப்பட்டவர்களும் ஸ்தாபனங்களும் புரிந்து வரும்

---

* இந்தத் தீர்மானம் எங்கும் இன்னும் நடைமுறையில் வரவில்லை.

தொண்டுகளை நாம் போற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். ஸ்தாபனங்களில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் ஆதீனங்களையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தனிப்பட்டவர்களில் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார், அழகப்பச் செட்டியார் என்பவர்கள் சிறந்தவர்கள். இவர்களின் கொடையும் ஊக்கமும் குன்றாமலிருக்குமாக!

தமிழில் எண்ணற்ற புத்தகங்களும் பத்திரிகைகளும் தோன்றத் தலைப்பட்டு விட்டன. இப்பக்கம் பார்த்தால் பத்திரிகை; அப்பக்கம் பார்த்தால் சஞ்சிகை. இவை நம் நாட்டில் எழுத்தாளர்களின் தொகை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு வருவதையே காட்டுகின்றன. இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு நண்பர் சொன்னார்: 'எண்ணற்ற சஞ்சிகைகளும் புத்தகங்களும் தோன்றிய வண்ணம் இருக்கின்றனவே. இவற்றை வாங்குபவர் யார்? படிப்பவர் யார்? எங்கே சேமித்து வைப்பது? இலக்கிய உலகில் கருப்பத்தடை செய்யவேண்டும் காலம் வந்து விட்டது போலிருக்கிறதே' என்றார். அதற்கு நான், 'கவலைப்பட வேண்டாம்; வாழ்க்கைப் போராட்டத்தில் வலுவுள்ளது நிலைக்கும்; வலுவற்றது மறையும்; இது நியதி' என்றேன். தமிழுலகம் புத்தகமின்றி வறண்டு கிடந்தது. இப்பொழுதுதான் ஊற்றுக் கிளம்பிப் பாயத் தொடங்கியிருக்கிறது. ஆதலால் கருப்பத்தடைக்கு இது காலமல்ல என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழில் அது இருந்தது; இது இருந்தது என்று பழம் பெருமை பேசிக்கொண்டிருக்காமல் எது தேவையோ அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்க வேண்டும். முத்தமிழ் முத்தமிழ் என்று முழக்கம் செய்கிறார்கள். இசைத்தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டை நூல்களைப் படித்துவிட்டு, நாம் 'பெரு

நாரை' 'பெருங்குருகு' என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகிவிடுமா? அந்த நாரைகளும் குருகுகளும் மறைந்து போய்விட்டன. இனி நம்முடைய வலைக்குள் அகப்படப் போவதில்லை. ஒரு ஏழை உண்ணச் சோறும் உடுக்கத் துணியுமில்லாமல் தவிக்கிறான். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும் கொட்பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாயிருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனால் என்ன பயன்?

நாடகத் தமிழ் என்பதன் பொருள்தான் என்ன? நாடகம் என்னும் சொல்லுக்கு 'ட்ராமா' 'நடனம்' என்று இரண்டு பொருள் உண்டு. கூத்துக்கும் அப்படியே.

**'பதஞ்சலிக் கருளிய பரம நாடக'**

(திருவாசகம், கீர்த்தித். 138)

**'கூத்தாடும் தேவன்'**

(சுசீந்திரம், கல்வெட்டு)

இவற்றிலிருந்து நாடகத் தமிழ் என்பது 'ட்ராமா'வைப் பற்றிக் கூறுகிற தமிழா, நடனம் அல்லது நாட்டியத்தைப் பற்றிக் கூறுகிற தமிழா என்பது ஆராயத் தக்கது.

சில தமிழர்களிடம் இதைப்பற்றிப் பேசினால் 'தமிழிலிருந்த இசைத் தமிழ், நாடகத் தமிழ் நூல்கள் கொஞ்சமா? அவையெல்லாம் கபாடபுரத்தைக் கடல் கொண்டதோடு போய்விட்டன' என்று சொல்லி நம் வாயை அடைத்துவிடுகிறார்கள். போய்விட்டன, போய்விட்டன என்று சொல்லிக் கரையிலிருந்து அலையை எண்ணிக் கொண்டிருந்தால் அவை வந்து கரையேறுமா? புது நூல்கள் ஆக்குவதுதானே செய்யத் தக்க முயற்சி. தமிழில் நாடகங்கள் அதிகமாக இல்லை. இசையைப்பற்றி வடமொழி, தெலுங்கு

முதலியவற்றில் இருப்பதுபோன்ற நூல்கள் தமிழில் உண்டா? தற்காலத்தில் சில அறிஞர்கள் நாடகங்கள் எழுதி வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சி பெரிதும் பாராட்டுதற் குரியது. செந்தமிழ்ச் செல்வி பல காளிதாசர்களையும், ஷேக்ஸ்பியர்களையும், ஹிப்ஸன்களையும், பர்ளுட்ஷாக்களையும் பிறப்பித்து உதவுவாளாக.

காலேஜ்களில் கற்பிப்பதற்கேற்ற சரித்திர நூல்கள் விஞ்ஞான நூல்கள் முதலியவை தமிழில் இல்லை. அவை பல எழுதப்பட வேண்டும். இந்த விதமான நூல்கள் பலவும் வெளிவந்த பிறகு 'கலைக்களஞ்சியம்' எழுதுவதுதான் சௌகரியமாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம். உஸ்மானியாப் பல்கலைக் கழகத்தார் ஏறக்குறைய 30 வருஷங்களுக்கு முன்னமேயே உயர்தரக் கல்விக்கு வேண்டிய அனேக சாஸ்திரங்களை உருதுவில் மொழிபெயர்க்கத் தொடங்கிவிட்டனர். இப்பொழுது அவர்களுக்கு அந்த விஷயத்தில் நமக்கு இருப்பது போன்ற கஷ்டங்கள் ஒன்றுமில்லை. ஆதலால் நாம் முதனூல்கள் எழுதுவதோடு மொழி பெயர்ப்பும் செய்யவேண்டியது மிக்க அவசியமாகும். இங்ஙனம் தமிழ் வளத்தைப் பெருக்கவேண்டுவது எழுத்தாளர் கடன்.

எழுத்தாளர்க்குப் பல குறைகள் இருக்கின்றன. அவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. அவர்கள் மனத்திருப்தி உடையவர்களாக இருந்தால் தான் ஊக்கமாக உழைப்பார்கள்; பயன் தரும் காரியங்களைச் செய்வார்கள்.

ஆகவே இம்மகாநாடு தமிழ் முன்னேற்றம், எழுத்தாளர் நலன் என்பவை பற்றி நன்கு கவனிக்குமென்று நம்புகிறேன். தீர்மானங்களை நிறைவேற்றுவது பெரிதல்ல;

அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். அவற்றுள்ளும் எதனை முதலில் செய்யவேண்டும், எதைப் பிந்திச் செய்யவேண்டும் என்று பகுத்தறிந்து நடக்க வேண்டும். முந்திய மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு நடத்தவில்லை என்று ஒரு பத்திரிகை குற்றம் சாட்டியிருந்ததைப் பார்த்தேன். இந்த மகாநாடு அக்குறைகளைத் தவிர்த்து ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் இங்கே கூடியது திருவிதாங்கூர்த் தமிழர்க்கு நல்ல காலம் என்பது மட்டுமல்ல, ஒரு பாக்யமுமாகும் என்று கூறி, இன்னுமொருமுறை உங்களுக்கு நல்வரவு சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

# 3. திறப்புரை *

அருமைத் தலைவர் அவர்களே! பெரியோர்களே! இந்தப் புண்ணிய பூமியில் உங்களனைவரையும் தரிசிக்கும் படியான ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது என் பெரும் பாக்கிய மேயாகும். இதனுல் எனக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அள வில்லை. அரசியல் துறையில் எனக்கு விசேஷ அனுபவம் ஒன்றுமில்லை. ஆயினும் திறப்புரையாக இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து அவற்றைக் கேட்பீர்களாக!

பண்டைக் காலத்தில் தென்திருவிதாங்கோடு, பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆய்நாடு, தெங்க நாடு, படப்பாநாடு, வள்ளுவநாடு, குறுநாடு, நாஞ்சில்நாடு, புறத்தாநாடு என்பவை அவற்றுள் முக்கியமானவை. இவை யாவும் செந்தமிழ் நாடுகளே என்பதைப் பல சந் தர்ப்பங்களிலும் தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன். கடந்த ஆண்டு மே மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டின் வரவேற்புரையிலும் இவ்விவரம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.[1] அன்றியும், நாகர் கோவில் வித்வான் சதாசிவம் பிள்ளை அண்மையில் வெளி யிட்டிருக்கும் '**சேரநாடும் செந்தமிழும்**' என்ற அரிய ஆராய்ச்சி நூலில் மேற்கூறிய நாடுகள் எல்லாம் செந்தமிழ் நாடுகளாகவே இருந்தன, இருக்கின்றன என்பதைப்

---

* கன்னியா குமரியில் (6—1—1950) நடைபெற்ற 'தமிழ் நாட்டின் தென்குமரி எல்லை மகாநாட்டை'த் திறந்து வைத்து ஆற்றிய சொற்பொழிவு.

1. இதுவே மேடைப்பேச்சின் இரண்டாவது பேச்சாக இந் நூலில் தரப்பட்டுள்ள வரவேற்புரை.

போதிய சான்றுகள் கொண்டு நிறுவியிருக்கிறார். ஆதலால் இப்பொழுது அதனைப்பற்றி விரிவாக ஒன்றும் கூறத் தேவையில்லையென்று விட்டொழித்து, தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒருங்கு கூடியிருக்கும் இத்தென் குமரியைப் பற்றிய சில விவரங்களை மட்டும் தெரிவிக்கத் துணிகின்றேன்.

இது பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஓர் ஊர் என்பதில் யாதும் ஐயமில்லை. கல்லெழுத்துக்களில் இவ்வூரிலெழுந்தருளி யிருக்கும் தேவி, அடியில் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றாள்.

**ராஜ ராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழவளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார்.**

புறத்தாயநாடு என்பதற்கு 'முறத்தாய நாடு' என்பது வேறொரு பெயர். வாரணவாசிநாடு என்ற பெயரும் இதற்குண்டு.

**ஸ்ரீ பாண்டி நாட்டுப் புறத்தாய நாடான தென் வாரணவாசி நன்னாட்டுக் குமரி கன்னியா பகவதியார்**

எனவரும் கல்வெட்டுத் தொடரால் இவற்றை யறியலாம். வாரணவாசி நாடு என்பது இரண்டாவது குலோத்துங்க சோழனுடைய பாட்டன் பெயரால் ஏற்பட்ட பெயராம். இக்குமரிக்குக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற வேறொரு பெயரும் இருக்கிறது. கங்கைகொண்ட சோழன் என்பது முதல் ராஜேந்திரனுக்கு ஒரு சிறப்புப் பெயர். அதன் காரணமாக இப்பெயர் இதற்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

தேவி கோவிலும், சற்று வடபாலிருக்கும் குகநாதேசுவரர் கோவிலும் இங்கு முக்கியமான கோவில்கள். இரண்டிடங்களிலும் ஏறக்குறைய நூறு கல்வெட்டுக்களுக்குமேல்

காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டொன்றைத் தவிர மற்றவை யாவும் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளவையே. குமரி கோவிலில் கொடிமரத்தின் பீடத்தைச் சுற்றிப் பொறிக்கப்பட்டிருப்பது விஜயநகர வேந்தருடைய கல்லெழுத்து. அது கிரந்த லிபியில் பொறிக்கப்பட்ட வட மொழிச் சாசனம். இன்னொன்று அதற்கடுத்த மேல்பக்கமுள்ள மண்டபத்தில் பொறிக்கப்பட்டிருப்பது. அது ஒரு தெலுங்குச் சாசனம். இந்த இரு கல்வெட்டுக்களைப் பற்றிய விவரமெதுவும் இதுகாறும் வெளிவரவில்லை.

முதல் ராஜராஜ சோழனுடையதுதான் இங்குள்ள கல்வெட்டுக்களில் மிகப் பழமையானது. ராஜேந்திர சோழன், ராஜாதிராஜன் முதலியோருடைய கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. வீரராஜேந்திரனுடைய நீண்ட சாசனமொன்று மணிமண்டபத்திலுள்ள கல்தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அது கெட்டுப் போகாமலிருப்பதற்காகப் பித்தளைத் தகட்டினால் பொதியப்பட்டிருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம்.

பராந்தக பாண்டியன், குலசேகர பாண்டியன் முதலான பாண்டிய மன்னர்கள் பலருடைய சாசனங்களும் இங்கே காணப்படுகின்றன. நாயக்க அரசர், சேர அரசர் என்பவர்களுடைய கல்லெழுத்துக்களும் சில உண்டு.

மேற்குறித்த பராந்தக பாண்டியனுடைய கல்வெட்டு* இந்தக் கன்னியாகுமரி ஆலயத்தைத் தவிர வேறெந்த இடத்திலும் இருப்பதாக இதுவரையிலும் கண்டறிந்ததில்லை. இதன் காலம் ஏறக்குறைய 850 ஆண்டுகளுக்கு

---

*** பராந்தக பாண்டியனுடைய கல்வெட்டுக்களுள் ஒன்றை இந்நூலில் வரும் 'சாசன ஆராய்ச்சி' என்ற பகுதியில் பார்க்க.**

முன்னராம். இதில் தேவியைத் '**தென்னவர்குல தெய்வம்**' என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. பாண்டிய மன்னனுக்குக் '**குமரிச்சேர்ப்பன்**' என்பது ஒரு பெயர்.

**பொதியப் பொருப்பன் புனல் வையைத் துறைவன்**
**குமரிச் சேர்ப்பன் கோப்பாண் டியனே**

என்பது சேந்தன் திவாகரச் சூத்திரம். இத்திவாகரம் தமிழ் நிகண்டுகளுள் மிகப் பழமையானது. இதன் காலம் கி.பி. எட்டாவது நூற்றுண்டின் நடுப்பகுதி யென்பது அறிஞர்களின் ஆராய்ச்சி முடிபு.

மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களாலும், தென் திருவிதாங்கோட்டில் வேறு பல பாகங்களில் காணப்படும் கல்வெட்டுக்களாலும், விளவங்கோட்டுத் தாலுகாவிலுள்ள முன்சிறைப் பார்த்திபசேகரபுரம் செப்பேடுகளாலும் தென் திருவிதாங்கோடு செந்தமிழ் நாடே என்பதும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே-ஏன்?-சரித்திர காலத்துக்கு முன்னிருந்தே தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறுர்கள் என்பதும் பிறவும் தெள்ளத் தெளிய அறியக்கூடியவையாம். இலக்கியங்களும் வரலாறுகளும், சாசனங்களும், ஆலயங்களும், பழக்க வழக்கங்களும் இந்நாட்டவர் தூய தமிழர்களென்று காட்டுவதைத் தவிர வேறெதற்கும் ஆதரவளித்து நிற்பதாய் நாமறிந்தவரையில் சொல்வதற்கில்லை.

உண்மை இவ்வாறிருந்தும் ஒரு மேதாவி திருவிதாங்கோட்டிலுள்ள தமிழர்கள் இடைக்காலத்தில் தோட்ட வேலைக்காக வந்த கூலியாட்கள் என்று பிதற்றியிருக்கிறுர். இப்பிதற்றலுக்குக் காரணம் அவருடைய அகங்காரக் காய்ச்சலோ அறியாமை மயக்கமோ யான் அறியேன். **உண்மையைச்** சொல்கிறேன் கேளப்பா, கேளப்பா என்

ருல் கேட்பதுமில்லை. ஆதாரங்களை எடுத்துக்காட்டிப் பாரப்பா, பாரப்பா என்ருல் பார்ப்பதுமில்லை. பொருமை யும் பேராசையும்தான் கண்ணையும் காதையும் நன்கு மறைத்து விட்டனவே! இவர்களோடு எப்படி வழக் காடுவது?

இந்நாடு முழுமையும் தம்முடையதென்பதற்கு மலை யாள நண்பர்களும் சில ஆதாரங்கள் காட்டுகிருர்கள். அவர்கள் காட்டும் ஓர் ஆதாரம், 'கேரளோற்பத்தி', 'கேரள மகாத்மியம்' என்னும் நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு பாட்டி கதை. பரசுராமர் கோகர்ணத்திலிருந்து மழுவையெறிந்து கன்னியாகுமரியில் வீழ்த்தி 160 யோசனை தூரம் கடலை விலக்கிப் பிராமணர்களுக்குத் தானம் செய்த கதை அது. த்ரேதாயுகத்தில் நிகழ்ந்த தாகச் சொல்லப்படும் இந்தக் கதை கலியுகத்தில்—அது வும் அணுகுண்டு சகாப்தத்தில் சரித்திரப் பிரமாணமாக முன்னிறுத்தப்படுகிறது. இந்தப் பிரமாண நூல்களைப் படித்துவிட்டு **'மலபார் அண்ட் அஞ்சங்கோ'** என்ற நூல் எழுதிய திரு லோகன் என்பார்' 'அவை பொருளற்ற புராணப் புளுகுகள்' (A farrago of legendary nonsense) என்ருர். இப்படியிருக்கவும் இந்த நூல்களின் புனிதத் தன்மையை எடுத்து விளம்பரப் படுத்தும் பெரியார்களின் நேர்மையை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள். இந்தக் கதையை நம்புகின்ற மலையாள அன்பர்கள் பரசுராமர் பிரா மணருக்குத் தானம் கொடுத்த பகுதியை மட்டும் நம்பாம லிருக்கலாமா? அப்படியாஞல் அந்தணர்களுக்கு நாட்டை யளித்து அவரடிக்கீழ் நின்று வாழ இன்று அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

இதுவோர் புரட்சிக்காலம். சிறிதுகாலத்துக்குள் எத் தனையெத்தனை மாறுதல்களைக் கண்ணுல் பார்த்துவிட் டோம்! பாரததேவியின் நெஞ்சை வகிர்ந்ததுபோல் பாகிஸ்

தான் ஏற்பட்டுத் தனி நாடாகப் பிரிந்து போனதைப் பார்க்கவில்லையா? மகுடங்களெல்லாம் தகர்ந்து மறைந்து போனதைப் பார்க்கவில்லையா? பன்னூறாண்டுகளாகச் சேர்ந்திருந்த நாடுகள் பிரிகின்றன. பிரிந்த நாடுகள் சேர்கின்றன. முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகையேற்படுவது இன்றியமையாதது. அதற்காகவே தெலுங்கர்கள் ஆந்திர மாகாணம் கேட்கிறார்கள். கன்னடர்களும் பிரிந்து போக விரும்புகிறார்கள். கேரளீயர்களும் தனி மாகாணத்துக்கு அரும்பாடு படுகிறார்கள். இவ்வேளையில் தென் திருவிதாங்கோட்டிலும், செங்கோட்டையிலும், தேவிகுளத்திலும், பீருமேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்களிடங்களையும் தாய்த் தமிழ்நாட்டோடு சேர்க்கவேண்டுமென்று கேட்பதில் குற்றமென்ன இருக்கிறது? பிரித்துவிட மாட்டோமென்று கேரளீயர் சொல்வதில் யாதொரு பொருளுமில்லை. இவர்கள் தங்களுடைய நன்மையைக் கருதிச் சொல்கிறார்களா? தமிழர்களுடைய நன்மையைக் கருதிச் சொல்கிறார்களா? என்று சிந்திக்க வேண்டும். தங்கள் நன்மையைக் கருதி என்றால் அது காலமறியாத பேச்சு; தமிழர்களை என்றென்றும் தம் கீழ் அடிமைகளாக வைத்து நன்மை பெறலாமென்ற வீணாசை. அதல்லாமல் தமிழர்களின் நன்மையைக் கருதியே சொல்கிறார்களென்றால் அது, ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தியழுவதனையே ஒக்கும். இந்தப் பேச்சை எவரும் நம்பமாட்டார்கள். திருவிதாங்கோட்டுத் தமிழ்நாடின்றிக் கேரள மாகாணம் அமைக்க முடியாதென்றால் அவர்கள் தனி மாகாணக் கொள்கையை அடியோடு விட்டு விடட்டுமே. தமக்குத் தனி மாகாணம் வேண்டுமென்பதற்காக லட்சாதிலட்சம் தமிழர்களின் நலன்களைப் பலியிட நினைப்பது நீதியா? முறையா? தர்மமா?

எங்கெந்த மொழியாளர்கள், அண்டையிலுள்ள தம் தாய்மொழிப் பகுதியோடு சேர விரும்பினாலும் அவர்களைப் பிரித்தும் சேர்த்தும் ஒற்றுமையாய் வாழத் துணை செய்வதுதான் பொதுநோக்கங் கொண்ட சிறந்த அரசியல் தலைவர்களின் கடமையாகும். இதற்காகச் சரித்திரமும், புராணமும், சாசனமும், இலக்கியமும் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவையேயில்லை. கண்முன்னே காணும் உண்மையை நிரூபிக்க ஆதாரம் தேடவேண்டிய அவசியமுண்டா? இமயமலையில் சேரசோழ பாண்டியர்களின் வில்லும் புலியும் கயலும் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதை எடுத்துக்காட்டி இமயம் வரையும் தமிழர்க்குரிய பகுதியென்று தமிழர்கள் சொன்னால் சிரிக்கமாட்டார்களா இந்தக் காலத்தில்? கொல்லம் 925-ல் பெரிய மார்த்தாண்டவர்ம மகாராஜா திருவிதாங்கோடு முழுவதையும் பத்மநாப சுவாமிக்குத் திருப்படி தானம் செய்திருக்கிறார். இப்பொழுது அதனை ஆதாரமாகக் கொண்டு கொச்சியைத் திருவிதாங்கோட்டோடு இணைக்கக் கூடாதென்றும், நாடு முழுவதும் கோவில் அதிகாரிகளால் ஆளப்பட வேண்டுமென்றும் சொன்னால் அதை உலகம் ஒப்புக்கொள்ளுமா? ஆதலால் இன்றைய நிலை எந்த அமைப்புக்குத் துணை நிற்கிறதென்று பார்த்துச் செய்வதுதான் தக்கது.

சில அரசியல் நிபுணர்கள் நாடுகளைப் பிரிக்கவோ சேர்க்கவோ வேண்டுமென்றால் பொருத்தம் பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள். மக்களின் விருப்பத்தை மட்டும் கவனித்தால் போதாதாம். சரித்திரப் பொருத்தம், பூமி நூல் பொருத்தம், பொருளாதாரப் பொருத்தம், கலாசாரப் பொருத்தம், மொழிப் பொருத்தம், மதப்பொருத்தம் முதலிய பொருத்தங்கள் ஒத்துவர வேண்டுமாம். இதில் ஓரளவு உண்மை யில்லாமலில்லை. ஆனால் இன்று உரு

வாகி யிருக்கும் ஸம்ஸ்தான யூனியன்கள் எதிலாவது மேற் கூறிய பொருத்தங்கள் அனைத்தும் ஒத்து வந்திருப்ப துண்டா?

திருமணத்துக்குச் சோதிடர்கள் பொருத்தம் பார்ப்ப துண்டு. நட்சத்திரப் பொருத்தம், கணப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதி பதிப் பொருத்தம், வசியப் பொருத்தம், வேதைப் பொருத் தம், சரட்டுப் பொருத்தம் என்று பத்துப் பொருத்தம் சொல்வார்கள். இந்தப் பத்துப் பொருத்தங்களும் ஒத்து இணைந்த மணமக்கள் ஆயிரவரில் எத்தனைபேர் இருக்க முடியும்? மனப் பொருத்தம் ஒன்றுதான் வேண்டியது. மனப்பொருத்தமில்லாமல் மற்றப் பொருத்தங்கள் எல்லா மிருந்தும் பயனில்லை. மனப்பொருத்தமிருந்து மற்றப் பொருத்தங்களில்லாமற் போனாலும் பாதகமில்லை. இதை உலகில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆதலால் சோதிடர்கள் பொருத்தங்கள் கூறிச் செப்பிடுவித்தை காட்டும் முறையைத் தாமும் கையாளாமல் அரசியல் தலைவர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமென் பது என் ஆசை.

திருவிதாங்கோட்டுத் தமிழர்கள் அண்டையிலிருக்கும் தாய்த் தமிழகத்தோடு இணைய விரும்புகிறார்கள். தமிழ் நாட்டாரும் இவர்களைச் சேர்த்துக்கொள்ள ஆசைப்படுகின் றனர். இந்நிலையில் இவ் விரு சாராரையும் இணைத்து வைப்பதொன்றே ஆளும் அதிகாரிகளின் கடமை. கேரளீ யர் இதில் தலையிட்டுக் கலைக்க முயல்வது ஒரு சிறிதும் நியாயமாகாது.

'பிரிவினைக்கேற்ற காலம் இதுவல்ல; அதற்கு அமைதியான சூழ்நிலை வேண்டும்' என்று பெரிய அரசியல்

தலைவர்கள் சொல்லுகிருர்கள். உலகப் போக்கை உற்றுப் பார்த்தால் அமைதி அண்டையிலிருப்பதாகத் தெரியவில்லை. உலகில் என்றும் கொந்தளிப்பும் சூழுறலும் இருந்துகொண்டுதா னிருக்கும். அந்த உலகச் சுழற்சிக்குள் அகப்பட்டுக் கிடக்கும் நம் பாரத தேசம்போன்ற ஒரு பெரிய தேசத்திலும் அத்தகைய சில்லறைச் சண்டைகளும் குழப்பங்களும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும். அவை நீங்கியபின் பிரிக்கவோ சேர்க்கவோ செய்யலாமென்பது திரை நீங்கித் தீர்த்தமாடலாமென்று சொல்வதற்குச் சமமாகுமே தவிர வேறல்ல.

நான்கு சகோதரர்களுள்ள ஒரு குடும்பத்தில் சொத்துப் பிரிவினை நடைபெறுகிறதென்று வைத்துக் கொள்வோம். சொத்தினை ஒரே சமயத்தில் நால்வர்க்கும் பகிர்ந்து கொடுப்பதுதான் முறை; சௌகரியமும் அதுதான். ஒவ்வொருவருக்காகப் பிரித்துக் கொடுக்கத் துணியும்போது, ஒரு முறைக்கு மூன்று முறை துன்பமும்குழப்பமும் அநுபவிக்கநேரும். இங்கும் அத்தகைய நிலை ஏற்படாமல் ஒரு கமிட்டி ஏற்படுத்தி ஏககாலத்தில் தென்னட்டு மொழிவாரி மாகாணங்கள் நான்கையும் அமைத்துவிடுவதுதான் நலமென்று கருதுகிறேன். இந்த எண்ணம் நம் மேலிடத்தாருக்கு உண்டாகாமலிருப்பது நம் கஷ்ட காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

'தமிழர்கள் ஏன் பிரிந்துபோகவேண்டும்? வேற்றுமையுணர்ச்சியின்றி இன்றுபோல் என்றும் இருந்தால் என்ன?' என்று சிலர் கேட்கிருர்கள். தமிழனென்றும், மலையாளியென்றும் வேற்றுமை பாராத ஒரு பொது மன்னர்—ஒரு பொது அரசாங்கம் இருந்தகாலம் வரை யாருக்கும் இந்தப் பிரிவினையுணர்ச்சி உண்டானதில்லை. என்று 'நாம் மலையாளிகள்; மலையாளப் பகுதிகள் அனைத்தையும் ஒன்ருகத்

திட்டி ஓர்மலையாள மாகாணம் அமைக்கவேண்டும்' என மலையாளிகள் க்ருதிவிட்டார்களோ அன்றே வேற்றுமை யுணர்ச்சி வேரூன்றிவிட்டதல்லவா? அதற்குமேல் சிறு பான்மைச் சமூகத்தாரான தமிழர்கள் ஆட்சியாளர்களின் தயவை எதிர்பார்த்து வாழ்வதைத் தவிர, நியாயமான உரிமையைப் பெற்று வாழமுடியுமா? இச் சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் எழுவது இயல்புதானே. இது வெறும் சந்தேகமா? இல்லை. உண்மையுமாகிவிட்டது. இதற்குள் தமிழர்கள் இகழப்பட்டு விட்டார்கள்; புறக் கணிக்கப்பட்டு விட்டார்கள். இதை நிரூபிக்க எத்தனையோ சான்றுகள் தரமுடியும். இன்று திருவிதாங்கோடு முழு மையும் ஒரே நாடு, ஒரே நாடு என்று சொல்வதெல்லாம் குப்பிக்குள் தண்ணீரும் எண்ணெயும் நிறைத்துக் கார்க்கி னால் இறுக மூடி ஒன்றெனக் காட்டுவதற்கொப்பே யன்றி வேறல்ல. உண்மை யாவரும் அறிந்ததே.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்திரத்தைப் பற்றியும் சில சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வுலகில் பூரண சுதந்திரம் எந்த மனிதனுக்கும் கிடையாது; கடவுள் ஒருவ ருக்குத் தான் உண்டு. அலெக்ஸாண்டர் ஸெல்கிர்க்கைப்* (Alexander Selkirk) போலே மனிதப் பூண்டேயில்லாத சகாராப் பாலைவனங்களில் ஒருவன் ஏகாந்தமாக நின்று கொண்டு,

**'என்னெதிரே காணுமிந்த**
**நிலத்திற் கெல்லாம்**
**யானிறைவன் இதை மறுப்போர்**
**எவரு முண்டோ?'**

என்று தன் நாயகத் தன்மையைக் கூறிக் கொக்கரிக்கலாம் பித்தனைப்போல. அல்லாமல் மக்கள் சமுதாயத்தில் ஓர்

---

* **'I am monarch of all I survey**
**My right there is none to dispute'**

அங்கமாக இருந்து கொண்டு 'நான் பரிபூரண சுதந்திர முடையவன்; யாரையும் மதிக்க மாட்டேன்; எவர் சொல்லேயும் கேட்கமாட்டேன்' என்று எவனுக்கும் சொல் லிக்கொள்ளமுடியாது.

இப்பொழுது நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். நம் நாடு குடியரசு நாடாகப் போகிறது*. இனி வயது வந் தோர்க்கெல்லாம் வாக்குரிமையுண்டு. வாக்குரிமையுடைய ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மன்னனாகின்றான். ஆத லால் அவன் அபிப்பிராயத்துக்கு விலேயுண்டு; மதிப் புண்டு. அவ்வபிப்பிராயங்கள் ஒரு முகப்படாது பல்வேறு வகையாகப் பிளவுபடும்போது பெரும்பான்மை, சிறு பான்மை முறை கையாள வேண்டியதாகின்றது. இது நடைமுறைக்கு உகந்த நல்ல முறைதான். ஆனால் அதி காரத்துக்கு வந்த பெரும்பான்மைக் கட்சியினர் சிறு பான்மையோரின் நலத்துக்கு ஊறு செய்து, அவர்கள் கூக்குரல் வெளிக்கிளம்ப ஒட்டாமல் தடுத்து, அவர்களே அடக்கி ஒடுக்கி மிதித்து வைப்பதற்கும் இது உதவக் கூடும். பெரும்பான்மையினர் எனப்படுவோர் இந்த வகைக்குத் தம் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அது பெரும் பாதகமானது; ஆபத்தானதும் கூட. ஆதலால் ஆட்சியாளர்கள் சிறுபான்மையோர் பெரும் பான்மையோர் என்னும் பேதமின்றி யாவர்க்கும் ஒத்த நீதி வழங்கி, மனக்கசப்பைப்போக்கி, வளமுள்ள பல மாகாணங்களே அமைப்பார்களாக! அவை யெல்லாம் வலிமை மிக்க தூண்களாக நின்று நம் பாரத சமுதாயத் தைத் தாங்கட்டும்! இதற்கு வேண்டிய பொது நோக்கும் நேசப் பான்மையும் மக்களிடையே உண்டாகட்டும்!

---

* 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ம் நாள் நமது பாரத நாடு குடியரசு நாடாக ஆயிற்று.

இவையின்றிக் கோட்டைக்குள் படைவெட்டும் நிலை ஏற்பட்டால் பெற்ற சுதந்திரம் வீணாகும்; பட்டபாடும் பழுதாகும்.

**மாதவம் செய்து பெற்ற**
**மந்திர வாளைக் கொண்டு**
**வேதனை மிகுந்தி டத்தன்**
**மெய்யினை அரிவ தொக்கும்**
**கோதிலாச் சுதந்திரத்தால்**
**குணம்பெறு தென்றும் நாட்டில்**
**வாதினைப் பெருக்கிச் சண்டை**
**வளர்ப்பவர் செய்கை யம்மா!**

என்ற பாட்டுக்கு இந்திய மக்கள் இலக்காய் விடக்கூடாது.

செந்தமிழ்ச் செல்வர்களே! நீங்கள் தமிழ் நாட்டின் வடவெல்லையை வாதித்து வழக்காடி நிலை நாட்டி விட்டீர்கள். 'மதருஸ் மனதே' என்ற பேச்சு அடங்கிவிட்டது. இப்பொழுது தென்னெல்லைக்கு வந்திருக்கிறீர்கள். இங்கும் 'நாஞ்சிநாடு ஞங்ஙளிடேது' என்ற பேச்சையும் அடக்கி வெற்றிக்கொடியேற்றி வீரத் தமிழ் முரசை முழக்குவீர்கள் என்பதில் யாதும் ஐயமில்லை. அதற்குத் தேவி குமரி திருவருள் புரிவாளாக!

**தென்னெல்லை காத்தருளும்**
**தேவி குமரீ நின்**
**பொன்னடியைக் கும்பிட்டுப்**
**போற்றுகின்றேன்—மன்னுபுகழ்ச்**
**செந்தமிழ்நா டொன்றாகித்**
**தேவர்நா டொத்துலகில்**
**சந்தமும் வாழவரம்**
**தா.**

என்ற பிரார்த்தனையோடு இந்த மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

**வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்நாடு**
**வாழ்கதமிழ் மக்கள் மகிழ்ந்து.**

# ii. கட்டுரை மணிகள்

## 1. திருவள்ளுவர்

மக்கள் நலங்கருதி இம் மாநிலத்தில் தொன்றுநாள் தொட்டு இன்றளவும் தோன்றிய நூல்கள் எண்ணத் தொலையாதவை. அறிவு வளர்ச்சியும், நவீன கருவி வசதிகளும் மிக்க இக்காலத்தில் புற்றீசல்கள்போல் அவை தோன்றிய வண்ணமிருக்கின்றன. ஆனால் முன்னர்த் தோன்றியவையனைத்தும் நிலை நின்றனவா? இன்று தோன்றுமனைத்தும் நிலை நிற்பவையா? இல்லவே இல்லை. ஒரு சிலதாம் கால வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படாமல் ஊன்றி நிற்கும் ஆற்றலுள்ளவை. உள்ளீடற்ற—வலுவற்ற கோடிக்கணக்கானவை கால வெள்ளத்தில் மிதந்து கண்காணாத் திசைக்கு அடித்துக் கொண்டு போகப்படுகின்றன.

பிறந்த குழவிகளெல்லாம இவ்வுலகில் நிலைத்துப் பெருவாழ்வு வாழ்வ தில்லை. அன்றே இறப்பவை, சில நாள் நின்று இறப்பவை, பலவாண்டுக்ள் சென்று இறப்பவை, இப்படிப் பல. நூறுண்டு வாழ்ந்து மடிபவர் மிகச் சிலர். இறந்தும் இறவாமல் வாழ்கின்றவர் அவரினும் மிக மிக்ச் சிலர்தாம். ஒரு புத்தர், ஒரு இயேசு, ஒரு நபி, ஒரு காந்தி இவர்கள் ஆத்மிகத்துறையில். ஒரு லெனின், ஒரு ஆபிரகாம் லிங்கன் இவர்கள் அரசியற்றுறையில். ஒரு கம்பன், ஒரு ஷேக்ஸ்பியர், ஒரு மில்டன், ஒரு காளிதாசன், ஒரு தாகூர் முதலியோர் இலக்கியத்துறையில். இப்படிச் சிலர்தாம் ஒவ்வொரு துறையிலும் சிறந்தவராய் இறவாமல் வாழ்கின்றனர்.

நம் தமிழ்நாட்டில் தோன்றி அற நூலியற்றி இற வாது வாழ்கின்ற ஒரு பெரும்புலவர் திருவள்ளுவர். அவ ரியற்றிய நூல் இவ்வுலகத்தோடு அவரை நிலைநிறுத்தி விட்டது. காலத்தையும், தேசத்தையும் வென்றுவிட்டார் அவர். உலக மொழிகள் பலவற்றிலும் அவர் கருத்துக் கள் ஏறிவிட்டன. அவருடைய நூல் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர் அறிஞர் அனை வருடைய புகழ்ச்சிக்கும் உரியவராகிவிட்டார். தேவர் கூறும் பொருள் அத்துணைக்குப் பொதுமையுற்று ஆழ்ந்து அகன்று நுணுகி நிற்கின்றது. அதனை எக் காலத்தினரும், எந்நாட்டினரும், எம்மதத்தினரும் படிக்க லாம்; துய்க்கலாம்; கைக்கொள்ளலாம்.

இங்ஙனமிருக்கவும் திருக்குறள் சைவ நூலா? வைணவ நூலா? சமண நூலா? பௌத்த நூலா? என ஆராய்கின்றனர் சிலர். திருக்குறள் பொதுச் சமயநூல்; அது பொதுமறை. ஒருக்கால் திருவள்ளுவர் சைவ ராகவோ, வைணவராகவோ, சமணராகவோ, பௌத்த ராகவோ, இருக்கலாம. ஆம்; அவர் சமணராகவே இருக்க வேண்டும். அதற்குரிய காரணங்களைப் பற்றி இங்கு நான் விரித்துக்கூற விரும்பவில்லை. ஆனால் தேவர் சமணர் என்ற காரணத்தால் குறள் சமண நூலாகி விடாது என் பதை நாம் உணர்தல் வேண்டும். அதில் கூறப்படும் விஷயங்கள் அனைத்தும் எச்சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளும் தரத்தனவே.

திருவள்ளுவரைச் சிலர் தெய்வ அம்சமாகக் கருது கின்றார்கள். அவர் நான்முகனாரின் அவதாரமாகத் தோன்றிக் கவிபாடியவரென்றோ, ஓதாதுணர்ந்த உத்தம ரென்றோ அவரை நான் கருதவில்லை. அவர் தம் கால நூல்களையெல்லாம் நன்கு கற்றவர்; ஐயம் திரிபறக் கற்ற

வர். பிற மொழி நூல்களையும் பிறசமய நூல்களையும் நன்கு ஆராய்ந்தவர். அவற்றைத் தம் நுண்ணறிவுடன் கரைத்தார்; அங்ஙனம் செறிந்த அறிவாலும், அநுபவத்தாலும குறட் செல்வத்தை நமக்குப் படைத்தளித்தார் என்று கொள்வதே பொருத்தமாம்.

உலகியலோடு பொருந்த தம் அநுபவம் காரணமாக நுணுகி யுணர்ந்து கூறும் உண்மைகளும் திருக்குறளில் பலவாம். உதாரணமாக, 'நிகழ்ந்தது கூறல்' என்று சொல்லப்படும் வாய்மைக்கு அவர் கூறும் இலக்கணத்தைக் கவனிக்கவேண்டும்.

**வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்.**

**பொய்ம்மையும் வாய்மை யிடத்த; புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**

(குறள், 291, 292)

என்பவை அவர் கூறும் இலக்கணங்கள்.

நஞ்சு கொடியதென்று கருதப்பட்டாலும், அது அமிர்தமாகும் இடமும் உண்டு. சில நோய்களுக்கு நஞ்சு மருந்தாக நின்று நலம் பயப்பதைப் பார்க்கிறோம். பால் அமிர்தமென்று சொல்லப்படுகிறது. கொள்ளும் அளவுக்கு உட்கொண்டால் அது அமிர்தம்தான். மிஞ்சினால் நஞ்சாகின்றது. ஆகவே, நல்லவை தீயவை என்பன பயன் கொண்டு அறியத் தக்கனவே யன்றிப் பெயரால் அறியத் தக்கனவல்லவாம்.

தன் சிறுவன்மீது கடுங்கோபங் கொண்ட ஒரு தந்தை, பேய்கொண்டவன் போல் ஆவேசமுற்று, அவனை யைப் புடைக்கக் கருதி, பக்கத்தே கிடந்த விறகுக்கட்டையைத் தூக்கவே, அஞ்சி நடுங்கிய சிறுவன் அலறிப் புடைத்துக்

கொண்டு ஓடுகிறான். தந்தை பின்தொடரக் காற்றினும் கடுகிவரும் சிறுவனைக் கண்ட அருளுடையான் ஒருவன் தன் வீட்டுக்குள் புகவிட்டுச் சிறுவனை மறைத்துக் கொள்கிறான். அது மட்டுமன்றிப் பின்தொடர்ந்து வருபவனை வேறு வழியே போக்கியும் விடுகிறான். தந்தை தெருவெல்லாம் சுற்றித் திரிந்து ஏமாந்து வீடு திரும்புகிறான். சற்று நேரத்தில் அவன் கோபமும் தணிகிறது. பின் அவ்வருளாளன் சிறுவனையழைத்து வந்து தந்தையிடம் சேர்த்து இருவருக்கும் புத்தி புகட்டுகிறான். 'நிகழ்ந்தது கூறல் வாய்மை; பிறன் பொருளை மறைத்தல் களவு' என்னும் நியதிப்படி பார்த்தால் இவன் சொன்னதும் செய்ததும் தவறுகள்.

ஆனால் பயனை நோக்க இவை தவறுகளா? அறங்களிலெல்லாம் தலையாய அறங்களல்லாவா? இன்சொல், ஒப்புரவு, விருந்தோம்பல், நன்றியுடைமை முதலியவற்றை அறங்களென்கிறோமே, ஏன்? அவை நற்பயன் தருபவை என்ற காரணத்தாலேதான். ஆகவே நற்பயனளிப்பவை எவையோ அவை அறங்களென்னவும், நற்பயனளியாத எவையும் அறங்களாகா எனவும் தெரிகின்றோம். இந்நியதி பற்றி வாய்மை என்பது வெறும் நிகழ்ந்தது கூறலல்ல எனவும், நன்மை விளையுமாயின் பொய்ம்மையும் வாய்மையின் பாற் படும் எனவும், தீமை விளையுமெனின் நிகழ்ந்தது கூறல் என்ற காரணத்தால் வாய்மையாகாதெனவும் நன்கு தெளிவு படுத்துகின்றார் நாயனார். "தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை யெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை யெனவும், அவற்றது இலக்கணங் கூறப்பட்டது" என்ற பரிமேலழகர் உரை (குறள், 292) இங்கு நோக்கத்தக்கது.

இதே கருத்தினை இ. வெஸ்டர்மார்க் (E. Westermark) என்பவர் நல்லொழுக்கம் பற்றித் தாம் இயற்றிய நூல் ஒன்றில் நன்கு கூறியுள்ளார். *

பின்னுளிலும் கருத்து மாறுபடாமல் யாவரும் ஒவ்வும் வகையில் வாய்மைக்கு இலக்கணம் வகுத்துரைத்த வள்ளுவரின் நுண்மதியை நாம் என்னென்று புகல்வது? உலகியலை ஒட்டி அறம் பொருளின்பங்களை நன்முறையில் பிரித்துக்கூறிய காரணத்தாலன்றே அவர் நூல் காலங் கடந்து நின்று நிலவுகின்றது.

இனிச்சிலர், வடமொழியில் சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தைப் பார்த்துத் திருவள்ளுவர் திருக்குறள் எழுதினுரென்பர். அங்ஙனம் கூறுவோர் சாணக்கியர் பங்கிலே நின்று, திருவள்ளுவர் ஒரு மொழி பெயர்ப்புப் புலவர்தான் என்று காட்டி, இவருக்குத் தாழ்வும், சாணக்கியர்க்கு உயர்வும் கற்பிக்கும் கருத்துடையராய்க் காணப் படுகின்றனர். இவர்க்கு மாருகத் தன்னபிமானம் மிக்க தமிழரிற் சிலர், வள்ளுவர் பங்கிலே நின்று அவர் கூற்றை மறுப்பதோடு தேவர் சாணக்கியரை விடப்

---

* According to the early Christian Church, all lies are not equally sinful. The degree of sinfulness depends on the mind of the liar and the nature of the subject on which the lie is told. Thomas Acquinas says that lying is not a mortal sin if the end intended be not contrary to charity. The Greek fathers maintained that an untruth is not a lie when there is a 'just cause' for it, and as a just cause they regarded not only self-defence, but also zeal for God's honour. (The origin and development of the moral ideas Vol. III pp. 99–100)

பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்டவ ரென்றும் வாதிக்கின்றனர். கால ஆராய்ச்சிக்கன்றி உயர்வு தாழ்வு நிலை நாட்டுவதற்காக இங்ஙனம் விவாதம் செய்வதை நோக்கின் அறிவுடையோர் நகைக்கத்தான் செய்வார்கள்.

திருவள்ளுவர் அர்த்த சாஸ்திரம் படித்துத் திருக்குறள் இயற்றியிருந்தால் அது குற்றமா? இழிவா? அழகிய மாளிகை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது என வைப்போம். அதனை யாவரும் கண்டுகளிக்கலாம்; அங்கே தங்கி இன்புறலாம் என்றிருக்கும்போது, அங்ஙனம் செய்வதை விட்டு, அதற்குக் கல் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது? சுண்ணும்புக்கு வேண்டிய கற்கள் எந்த நிலத்தில் புதைந்து கிடந்தன? மரங்கள் எந்தக் காட்டில் எந்த மலையில் நின்றன? என்பது முதலாகிய ஆராய்ச்சிகள் செய்வார் உலகிலுண்டா? அவை எங்கே இருந்திருந்தால் என்ன? அவற்றைக் கொண்டு கண்கவர் வனப்பினதாய், தங்கி வாழச் சௌகரியமானதாய் ஆக்கித் தந்த சிற்பிக்கும் ஆக்கப்பட்ட மாளிகைக்குமல்லவா நம் புகழ்ச்சியும் பாராட்டும் உரியவை? வேறெவற்றுக் கேனும் உரிமையாகுமா?

அழகிய சிலை சமைக்கும் சிற்பி, தன் வேலைப்பாட்டுக்குகந்த கல் எந்த மலையிலிருப்பினும் தேடிச் சென்று எடுக்கச் சலிக்கமாட்டான். சிற்பச் சிறப்பொன்றே அவன் குறிக்கோளா யிருக்கும்.

காற்றும் வெளிச்சமும் போல அறிவும் யாவர்க்கும் பொதுவானது. நல்ல காற்று, நல்ல வெளிச்சம்: இவை எங்கிருந்து கிடைப்பினும் நாம் ஏற்றுக்கொள்ளத் தவற மாட்டோம். இரவில் தெருவழியே நடக்கின்ருன் ஒருவன்; தட்டித் தடுமாறிச் செல்கின்ருன்; சற்றுச் சென்றதும் தன் பகைவன் வீட்டில் ஏற்றியிருக்கும் பெரிய விளக்கினின்று நான்கு பக்கமும் வெளிச்சம் வீசிப் பரப்பதைப்

பார்க்கிருன். பகைவன் வீட்டு வெளிச்சமாயிற்றே என்று கண்ணடைத்துக் கொள்வானு? கண்ணடைத்துச் சென்ருல் தீமையாருக்கு? பகைவனுன அயலான் வீட்டு மலர்ச் செடிகளினின்று நறுமணம் வீசுகின்றது. அது புகாதபடி தம் வீட்டுக் கதவை அடைப்பாருண்டா?

இவை போலவே அறிவும் எங்கிருந்து கிடைப்பினும் ஏற்றுக்கொள்வது இழுக்காகாது. ஆகவே வள்ளுவர் சாணக்கியரைப் பாராது எழுதியிருப்பினும் பார்த்து எழுதியிருப்பினும் பெருமையுடையவரே, அவர் திருக் குறள் என்ற வற்ரு நிதியைப் படைத்துத் தந்த குபேரர்; தமிழர் சமுதாயத்தைப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே நாகரிகமுடையுதாய் ஆக்கிவைத்த சிற்பி. அவர் இன்றளவும் வாழ்ந்து ஆங்கிலம், கிரீக், இலத்தீன், முதலிய மொழிகளேயும் கற்று அவற்றின் சாரங்களேயும் வடித்திறுத்து இன்னும் பல குறள் வெண்பாக்களாகத் தந்தாரில்லேயே என்று நான் கவலேப்படுகிறேன். தாம் எடுத்துக்கொண்ட எந்தப் பொருளும் இதற்குமேல் விரித்துக்கூற இயலாது என்ற வகையில் பொருள் செறித்து இனிது விளக்கித் திட்பநுட்பம் அமையப் பாடப்பட்ட திருக்குறளே உலக மக்கள் அனேவரும், சிறப்பாகத் தமிழர் ஒவ்வொருவரும், படித்துப் பயன்பெற வேண்டுமென்பது என் ஆசை.

**மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெலாம்**
**சிக்கலறக் காட்டிநலம் செய்நூலாம்—மிக்கபுகழ்ச்**
**செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளே நெஞ்சமே**
**சிந்தனே செய்வாய் தினம்.**

# 2. தெய்வப் புலவர்

மக்களின் அறிவுப் பசியைத் தணிக்க முயன்றதன் மூலம்—அறிவுக்கு விருந்தளித்ததன் மூலம்— எத்தனையோ புலவர்கள், மக்கள் இதயங்களில் நிரந்தரமாகக் குடி புகுந்துள்ளார்கள். எந்தப் புலவரின் கவிதைகள், காவியங்கள் என்பவை தம்மை வியப்பேணியின் உச்சியில் ஏற்றி நிறுத்தினவோ, அப்புலவர்களை அன்னார் தெய்வ அருள் பெற்றவராகவே மதித்துப் போற்றினர். காளிதாசர் நாவிலும், கம்பர் நாவிலும் காளிதேவி எழுத்தாணியால் எழுதினுளென்றும், காளமேகப் புலவர் நாவில் அகிலாண்ட நாயகி தம்பலம் உமிழ்ந்தாளென்றும் கதைகள் கேட்கின்றோம். கடவுள் தந்த மாங்கனியை உண்டு கவிபாடிய புலவர்கள், 'இவ்வாறு பாடு' என ஈசன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய புலவர்கள் என்போர் வரலாறுகளும் படிக்கின்றோம். இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றன? உலகில் விஞ்சிய புலமை படைத்தோரனைவரும் தெய்வத் திருவருள் பெற்றவரே; அதாவது, ஆண்டவனருள் பெற்ற காரணத்தாலேதான் அவர்கள் அசாதாரணப் புலமை வாய்ந்து விளங்கினுர்கள் என்பதையே காட்டுகின்றன.

மேம்பட்ட புலவர்களைத் தெய்வ அருள் பெற்றவராக மதித்துப் போற்றும் வழக்கம் நம் நாட்டில் அடிப்பட்ட ஒன்ருகி விட்டது. வேறு நாடுகளில் இதனைக் காணமுடியாது. ஆயினும் அவரைத் தெய்வ அருள் பெற்றவராகக் கூறுவதல்லது, தெய்வமே புலவனுக வந்து அவதரித்தது என்று கூறும் வழக்கம் இல்லை. ஆனல் இதனை ஒரேஒரு இடத்தில் காண்கின்ருேம். தேவர் என்றும், தெய்வப் புலவர் என்றும், நாயனுர் என்றும், நான்முகனுர்

என்றும் வரும் பெயர்கள் யாரைக் குறிப்பிடுகின்றன? திருவள்ளுவரையல்லவா?

**நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்**
**தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்தான்**

(திருவள்ளுவ மாலை, 4)

என்றும்,

**தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி**
**அந்தா மரைமேல் அயன்**

(ஷை 28)

என்றும்,

**தெய்வத் திருவள்ளுவர்** (ஷை 49)

என்றும் இவர் கூறப்படுகின்றார். திருக்குறள், இறையவர் மொழிந்த எழுதாக் கிளவியாகிய வேதம் என்றும், அதனை ஈந்தருளிய நாயனார் பிரமதேவரின் மறுபிறப்பு என்றும் மிகுத்துக் கூறுகின்றார்கள். இந்த அளவுக்கு நூலினிடத்தும், ஆசிரியனிடத்தும் என்ன காண்கின்றோம்?

தேவர் உலகியலை நன்கு உணர்ந்தவர். மக்களின் உள்ளங்களோடு ஒட்டி உறவாடியவர். அவர் தமது காலத்தில் வழங்கிய நூற் பொருளையும் வழக்குக்களையும் நுனித்து உணர்ந்தார். தாம் கண்ட மெய்ப் பொருளை முப்பொருளாகப் பாகுபடுத்தினார். அதனைச் சிறு சொற்களில் திட்பநுட்பம் அமையக் குறள் வடிவாக யாத்தார். அக்குறள்களனைத்தும் கற்றோரைப் பிணித்து அவருள்ளங்களில் சிலையில் எழுத்துப்போல் நிலைத்து நிற்கின்றன; செந்நெறி காட்டி அவரை உய்வித்துக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ நூற்றாண்டுகளாகியும் அவற்றின் சொல்லுக்கோ, பொருளுக்கோ அழிவு நேரவில்லை; இனியும் நேரப் போவதில்லை. எக்காலத்தார்க்கும் எந்நாட்

டார்க்கும் ஏற்கும் வண்ணம் தொலை நோக்கோடு நுணுகி உணர்ந்து பாடப்பட்டவை அவை. இந்த அளவுக்கு யாவருள்ளங்களையும் ஆட்சி செய்து நிலைத்த பயன் தரவல்ல நூலெதுவும் இதுகாறும் தோன்றினதில்லை. இதனாலே தான் ஆசிரியர்மீதும் நூல்மீதும் தெய்விகம் ஏற்பட்டுள்ளது.

அவர், வாழ்க்கை அனுபவத்தோடு பொருந்த யாவரும் ஒவ்வுமாறு வாய்மைக்கு இலக்கணம் வகுத்துள்ளமையை முந்திய கட்டுரையில் கூறியுள்ளேன். இப்போது, துன்பம் செய்தாரை ஒறுக்கும் முறைபற்றி அவர் கூறுவதனையும், அவர் கூற்றுக்களை எவ்வாறு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதனையும் இங்கே சிறிது குறிப்பிடுகிறேன்.

கன்பூசியஸ், சீன தேசப் பேரறிஞருள் தலைசிறந்தவர். கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்குமுன் இருந்தவர். மக்கள் கைக்கொண்டு ஒழுகவேண்டும் அறங்களை வகைப்படுத்திக் கூறிய பெரியார். இவர் கொள்கை 'கன்பூசியானிஸம்' என்னும் பெயரால் சீன தேசத்தில் இன்றும் நிலைத்து நிற்கின்றது. இவர், "நன்மை செய்தார்க்கு எதிர்க்கடன் இறுப்பது எவ்வாறு?" என்னும் கேள்வியை எழுப்பி அதற்குக் கீழ்வருமாறு விடை பகர்கின்றார்.

"நன்மை செய்தார்க்கு நன்மையால் பதிலிறுக்க; தீமை செய்தார்க்குத் தண்டனையால் பதிலிறுக்க" என்பது.* மேலும், "நன்மை செய்தார்க்கு நன்மை செய்வதானது பிறரையும் நன்மை செய்ய ஊக்குவதாகவும், தீமை

---

* Repay kindness with kindness, but repay evil with Justice or severity. (The Wisdom of confucius by Lin Yutang, page. 182).

செய்தாரை ஒறுத்தல் பிறரை எச்சரிப்பதாகவும் அமையும்."[1] என்று தம் கொள்கைக்குக் காரணமும் காட்டி நிறுவுகின்றார்.

இத்துறையில் ஏசுநாதர் மொழிந்த மாற்றம் ஒரு படி முன்னேறி நிற்கின்றது. அது வருமாறு:—"தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ளவேண்டு மென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு...உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்......உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்"[2] என்பதாம்.

மனித இதயங்களைத் துருவி யுணர்ந்த வள்ளுவரும் இதே முடிவைத்தான் கூறுகிறார். ஆனால் அது வெறும் உபதேச மொழியா யில்லாமல் காரணங் காட்டி நிலைநாட்டும் அனுபவ மொழியாக அமைந்துள்ளது. ஒருவன் பிறனொருவனுக்குத் தீங்கு செய்தா னென்றால் தீங்கு அநுபவித்த உள்ளம் கொதித்தெழாமல் அமைந்திருத்தல் பெரும்பாலுமில்லை. இவன் இது செய்தானே என வருந்துதலும், அதற்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும் என விரும்புதலும், பதிலுக்குத் தீமை செய்யத் துணிதலும் சாதாரண மக்களின் இயல்புகளா யிருக்கின்றன. இம் மன வியல்பினை நன்குணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார்

---

1. When you repay kindness with kindness then the people are encouraged to do good, when you repay evil with evil then the people are warned from doing bad. (The Wisdom of Confucius by Lin Yutang, page. 182).

2. மத்தேயு சுவிசேஷம் அதி—6. பக். 40, 44

இன்னு செய்யப்பட்டவனை நெருங்கி, அவன்தான் துய்த்த தீமையால் கொதிப்படைவதையும், தனக்கு இன்னு செய் தானை ஒறுக்கத் துணிதலையும் காண்கின்ருர். இது நியாய மான செயலே என ஒத்துக் கொள்கின்ருர். ஒத்துக் கொண்டு ஒரு நிபந்தனை விதிக்கின்ருர்.

"தீமை செய்த அவனுக்கு மறுத்துத் தீமை செய் யாதே. நன்மை செய்து அவனை ஒறு. (தீயைத் தீயினுல் அணைக்க முடியுமா? நீரினுலேதான் அது ஆகும்) நீ அவ னுக்குத் திருப்பி நன்மை செய்தால் அவனுள்ளத்தின் முனைப்பு அகல்வதோடு இச் சீரிய பண்புடையானுக்கும் தீங்கு செய்தோமே என்று இரவு பகலாக எண்ணி எண்ணி ஏங்கவும், தன் செயலுக்கு நாணவும் காரணமாய்த் தீரும். இதனினும் கொடிய தண்டனை அவனுக்கு வேண் டியதில்லையன்ருே? இச் செயலால் ஒறுத்தல் இன்பத்தை நீ அடைவதோடு தீங்கு செய்த உள்ளத்தைத் திருத்திய பயனையும் பெறுகின்ருய். ஆனுல் இவ்விரு செயல்களும் அதாவது, அவன் உனக்குத் தீங்கு செய்ததும், அவனை ஒறுக்கும் முகமாக நீ நன்மை செய்ததுமாகிய இரண்டும் உன் மனத்தில் நிலைக்க விடலாகாது; மனத்திலிருந்தால் மேலும்மேலும் பல நினைவுகளைத் தோற்றுவிக்கும். ஆகவே, அவற்றை உடன்தானே மறந்துவிட வேண்டும்" என்று இத்தனை கருத்துக்களையும் ஒரு சிறு குறள் வெண்பாவில் அடக்கிக் கூறுகிருர் தேவர்.

**இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்** (314)

என்பது அது. இக் குறளுக்கு மெருகு கொடுத்து நிற்பது பரிமேலழகர் உரை. அதன் துணைக்கொண்டு மேலே காட்டிய இரண்டினேடும் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் பெருமை யாவர்க்கும் எளிதிற் புலனுகும். இக்

குறட்பா ஒன்று மட்டுமா? திருக்குறள் பாக்கள் அனைத்துமே இத்தகைய அரும்பெரும் பொருள்கள் பொதிந்த சீரிய கருவூலங்கள் என்பதற்கு ஐயமில்லை.

திருக்குறளுக்கு உரை காணும்போது தேவர் திருவுள்ளம் இதுவென ஆராய்ந்து உரை காணல் வேண்டும். சிலர் தத்தம் கொள்கைகளுக் கேற்பக் குறட் கருத்துக்களைத் திரித்துக் கொள்கின்றனர். சொற்களையும் தொடர்களையும் கூடத்திரிக்கின்றனர்

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு** (107)

என்னும் குறளுக்கு, 'தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்' என்பது பரிமேலழகர் கூறிய உரை. தங்கண்—தம்மிடத்தில் (உண்டான) விழுமம்—துன்பம் என்பது இவர் கொண்ட பொழிப்பு.

இத் தொடரைப் போப் ஐயர், தம்+கண்+விழும்+அம்+துடைத்தவர் நட்பு எனப் பிரித்து 'தமது கண்ணிலிருந்து விழும் கண்ணீரைத் துடைத்தவரின் நட்பை' எனப் பொருள் கூறுகின்றார். இதில், சொற் பொருளமைதி பற்றிய குற்றம் யாதேனும் உண்டா என்று பார்த்தால் இல்லைதான். ஆனால் 'துன்பம் துடைத்தல்' என்பதிலுள்ள கவிதை யழகு குன்றி வறட்சி தட்டிவிடுவதை இதிலே பார்க்கிறோம். ஆகவே இது வள்ளுவர் உள்ளமாக இராதென்று உணரலாம்.

பொருளெடுக்க வழி யிருக்கிற தென்று கண்ட கண்டபடி பிரித்துக் கூறுவது ஆசிரியர் கருத்தறிந்து கூறுவதாகாது.

'காட்டினாய் கழுக் குன்றிலே' என்னும் திருவாசகத் தொடரை, காட்டில்+நாய்+கழுக் குன்றிலே எனப் பிரித்

தார் ஒரு நண்பர். காட்டிலுள்ள நாய்களெல்லாம் திருக் கழுக்குன்றத்திலே கூட்டம் போட்டிருக்கின்றன என்பது பொருளாம். 'ஊக்கமது கைவிடேல்' என்னும் ஔவையின் அமுதமொழிக்கு, 'ஊக்கத்தைத் தரும் மது அருந்துதலை விடாதீர்கள்' என்று கூறும் வேடிக்கைதான் இதிலிருக் கிறது. ஒரு மைந்தன் தன் தந்தையை அவதூறாகப் பேசி னையப் புடைத்து விட்டு,

**மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு**

என்னும் குறளை மேற்கோள் காட்டத் தொடங்கிவிட்டால் ஊரும் நாடும் உருப்பட்டாற் போலத்தான். ஏன் இப்படிச் சொல்கிறேன்? சில குறளுக்கு இவ்வாறு உரை கூறப் படுகின்றது.

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை** (55)

என்னும் குறளுக்கு, "தன் கணவனை யன்றிப் பிற தெய் வங்களைத் தொழுதறியாத கற்புடைய மங்கை, பெய்என்று சொல்லப் பெய்யும் மழைக்குச் சமம்" என்று ஒருவர் பொருள் கூறியுள்ளார். "ஒரு பெண் மேகத்தைப் பார்த்து மழை பெய் என்றால் பெய்யுமா? இது நடைபெறக் கூடாத காரியமல்லவா? என்ற பகுத்தறிவு வாதமே அவரை மேற் கூறியவாறு புதுப் பொருள் காணத் தூண்டி யிருக்க வேண்டும். புதுப் பொருளிலும் இத்தகைய அசம்பாவிதம் இருக்கத்தானே செய்கிறது! கற்புடையாளை விட்டுவிடு வோம். பிறர் எவர் கூறினாலும் தான் மழை பெய்வ துண்டா? இல்லையே. பின், பெய்யெனப் பெய்யு மழை யைப் பத்தினிப் பெண்ணாக அபேதப் படுத்திக் கூறுவ தேன்?

இதற்கு அவர்கள் ஒரு சமாதானம் சொல்லக் கூடும். ஒன்றனை மேம் படுத்திக் கூறக் கருதிய புலவர்கள் உலகி

லுள்ள பொருளெவையும் ஒப்பாகா என விடுத்து, இல்லாப் பொருளைக் கற்பித்துக் கொண்டு உவமைப் படுத்திக் கூறும் வழக்கம் உண்டு; இது அணியிலக்கணத்துள் இல் பொருளுவமை யணி எனப்படும். இவ்வணி நலம் தோன்றப் பாடப்பட்டதே மேற்கூறிய குறள் வெண்பா என்பர்.

இப்பாட்டு, தனக்கு இரண்டு வகையான எதிரிகளைத் தோற்றுவித் திருக்கிறது. முதல் தரத்தினர், சொல்லுக் குச் சொல் பொருள் பார்க்கிறவர்கள். இவர்கள் பாட்டை யும் ஆசிரியரையும் கிண்டல் செய்து 'என்ன உலகமடா' என்று அதற்கோர் முட்டாள் பட்டம் கட்டிவிட்டுத் தம் பகுத்தறிவை வியந்து நிற்பர். இரண்டாவது வகையின ரும் பாட்டுக்கு நேர் பொருள் காண்கிறவர்தாம். ஆனால் திருக்குறள் மீது அபிமானம் உடையவர் இவர். ஆகவே இவர்கள் மேலே காட்டிய பொருளினால் அதற்கொரு தாங் கல் கொடுத்துத் தளராமல் நிறுத்தப் பார்க்கின்றனர்.

இரு தரத்தார்க்கும் ஒரு வார்த்தை. எந்தப் பாட்டை எடுத்தாலும் சொற் பொருளமைதியோடு நின்றுவிட லாகாது. அதற்கப்பாலும் ஒன்றுண்டு என்பதை உணர வேண்டும். சொல் கருவியாகப் பொருளையும், அதன் துணையால் ஆசிரியர் உள்ளத்தையும் அறியும் அறிவே சிறந்தது. பாடலென்பது ஆசிரியர் தந்த ஒரு கண்ணாடி தான். அக்கருவியைப் பயன் படுத்தத் தெரியாமல் அதையே உற்று நோக்கிக் கொண்டிருத்தலாகாது.

கற்புடைமை மிக மேலானது என்பதை, கேட்பார் மனத்தில் பதியும்படி கூறக் கருதினார் ஆசிரியர். அதற் கேற்ற ஒரு முறையை அவர் கையாண்டார். அதுதான் வீறுகோளணி (உதாத்தாலங்காரம்) தோன்றச் சொன் னது. சொல்லக் கருதிய பொருளை உயர்ச்சியாகப் புனைந்து

கூறுவது, இதன் இலக்கணம். கற்புடையாள் மழையை யும் ஏவல் கொள்வாள் என்றால் அதன் கருத்தென்ன? கற்பு, மேன்மையுடையது என்பதுதானே. 'கல்லும் கனிந் துருகப் பாடினன்' 'பட்ட மரம் தளிர்த்துவரப் பாடினன்' என்று சொல்லும் வழக்கமில்லையா? இங்கெல்லாம் சொல் லின் பொருளையா பார்க்கிறோம். ஆசிரியர்களைப் புரிந்து கொள்ளும் ஞானம் நமக்கு மிகமிகத் தேவை. அது இல் லாதபோது ஆசிரியர்கள் மீது மயக்கம் கற்பித்தல் அழ காகாது.

நாயனர், தாம் சொல்வதற் கெடுத்துக் கொண்ட ஒவ் வொரு பொருண்மையையும் ஏனைய வற்றினும் சிறப்புடை யதாக உயர்த்திக் காட்டி அதற்கு அழுத்தம் கொடுத்துச் செல்வது வழக்கம். எடுத்துக் காட்டாக ஒன்று தருகி றேன். கொல்லாமையை அவர் குறிப்பிடும்போது,

**ஒன்றாக நல்லது கொல்லாமை ; மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று** (323)

எனக் கொல்லாமையே சிறந்த அறம் எனக் கூறுவார். பொய்யாமை வருமிடத்தில்,

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று** (297)

**பொய்யாமை யன்ன புகழில்லை** (296)

என எல்லா அறங்களினும் இதுவே நிகரற்றது என ஏற் றம் கூறுகின்றார். இத்தகைய இடங்களில் இரண்டனுள் எது சிறந்ததென்று திகைப்புக் கொள்ளுதலோ, தேவர் திருவுள்ள மறியாது அவர் மயங்கினதாக நாம் மயங்கு தலோ கூடாது. இன்னின்ன காரணங்களால் இன் னின்ன அறங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை என விதந்து கூறவந்த நாயனர் அவ்வவற்றுக்கு அழுத்தம்

கூறிச் செல்கின்றார் என உணர்வதுதான் அறிவுடைமை யாகும்.

இதுபோல் மாறுபட்டுத் தோன்றும் இடம் திருக்குறளில் இன்னொன்று உண்டு. ஊழ் என்னும் அதிகாரத்தில்,

**ஊழிற் பெருவலி யாவுள ? மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும் (380)**

என்று கூறியவர், ஆள்வினை யுடைமை அதிகாரத்தில்,

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர் (620)**

எனக் கூறுகின்றார். இவை ஒன்றோடொன்று முரணாகத் தோன்றவில்லையா? ஆம். ஆனால், இம்முரண் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. தொன்று தொட்டுத் தோன்றிய ஒன்றாகும் இது. உலகில் ஊழ் பெரிதா? ஆள்வினை (முயற்சியுடைமை) பெரிதா? என்ற கேள்விக்கு விடையிறுத்தவர் அன்றுமில்லை; இன்றுமில்லை. இனி வருங் காலத்திலும் இருக்கப் போவதில்லை. இங்குக் கூறப்படுவதெல்லாம் ஊழில் நம்பிக்கை யுடையவர்களுக்குத்தான். அல்லாதவர்களைப் பற்றி இங்குப் பேச்சில்லை.

இரண்டு இளைஞர்கள் வழிநடந்து செல்கிறார்கள். சற்றுத் தொலைவு சென்றதும், இனிக் கண்களை மூடிக் கொண்டு நடப்போமா என்கிறான் ஒருவன். அவ்வாறே இருவரும் கண்ணடைத்துச் செல்கின்றனர். இவர்கள் பின்னால் இன்னொருவன் வருகிறான். முன் சென்றவர்களின் காலடியில் கிடந்து ஒரு விலையேறிய மோதிரத்தைக் கண்டெடுக்கிறான். கண் திறந்து பார்த்து இருவரும் ஏங்குகின்றனர். முன்னவர் இந்த இடத்தில் வந்ததும் ஏன் கண்களை மூடுகின்றனர்? அவர்களுக்கு அகப்படாமல் பின்னவனுக்கு மோதிரம் ஏன் அகப்படுகின்றது? என்னும் கேள்விகள் எழுகின்றன. காரணம் காணமுடி

யாததாய் இருக்கின்றது. இதைத்தான் காண முடியாதது (அதிர்ஷ்டம்) என்று கூறுகிறோம். இங்ஙனம் நம் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு நின்று நற்பயனையோ, தீப்பயனையோ தந்து நம்மை ஆளும் இதனை ஊழ் என்று அழைகின்றோம். பால், தெய்வம், விதி என்றும் இது கூறப்படும்.

இது வலிமையுடையது; தன் பயனைப் பயந்தே விடுவது; இதற்கு யாரும் தப்பமுடியாது என்பது நம்மவர் கொள்கை. இதற்கு ஆதாரமான எத்தனையோ கருத்துக்களையும் கதைகளையும் பெரியோர் வாயிலாகக் கேட்கின்றோம். ஆண்மையும் அழகும் அரசியலறிவும், ஆட்சியுரிமையும் பெற்றுச் சிறந்த இராமன், யாவும் வல்ல சக்கரவர்த்தியான தந்தையின் கட்டளைக் கிணங்கி முடிசூடச் செல்கின்றான். சென்றவன் சிற்றன்னையின் ஏவலால் முடியிழந்து வெறுமையனாய் வருகின்றான். நாடிழந்து காடாளத் துணிந்து மரவுரியும் தரிக்கின்றான். கதை நடத்திவருகின்ற கம்பரே இதற்கோர் காரணம் கூறத் தெரியாமல் திகைக்கின்றார். விதியின்மேல் பாரத்தைப் போட்டு அவர் கூறுவதனைக் கேளுங்கள் :—

**வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள்**
**தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்**
**சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்**
**ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ ?**

இன்னுமோரிடம். அம்பு பட்டு விழும் மாரீசன் குரல் கேட்டுச் சீதை கலங்குகிறாள். இராமனுக்குத் தீங்கு யாதோ நேர்ந்த தென்றெண்ணி இலக்குவனை நோக்கி இராமனுக்கு உதவப் போகுமாறு கூறுகின்றாள். தன் தமையன் தீங்குறான் என்றும், அபயக்குரல் மாரீசன் எழுப்பியதே என்றும், எவ்வளவோ சமாதானங்கள் கூறுகின்

ருன் இலக்குவன். அவள் கேட்க வில்லை. கடுமொழிகள் சொல்கின்ருள்; தீப்பாயத் துணிகின்ருள். இலக்குவனுக்கு அதன் மேல் அங்கு நிற்க முடியவில்லை. போகத் தான் வேண்டும். தன் அறிவுக்கும் செயலுக்கும் அப்பாற்பட்ட ஒன்று தன்னைப் புறத்தே தள்ளித் தன் ஆற்றலைக் காட்டப் போகின்றது என்பதை உணர்கின்ருன். இது மட்டும் நிச்சயமாகத் தெரியும். ஆனால் அது நடைபெருமல் தடுக்க அவனால் ஆகக் கூடிய தொன்றுமில்லை. ஆகவே கீழ் வருமாறு சொல்லிச் செல்கின்ருன்:

**துஞ்சுவ தென்னை ? நீர் சொற்ற சொல்லையான்**
**அஞ்சுவென் மறுக்கிலென் அவலம் தீர்ந்தினி**
**இஞ்சிரும் அடியனேன் ஏகு கின்றனென்**
**வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ ?**

இத்தகைய இடங்கள் பலவற்றைப் பண்டை இலக்கியங்களில் பரக்கக் காணலாம்.*

இனி, விதியையும் வெல்லலாம் என்பதற்கான ஆதாரங்கள் இல்லையா? எத்தனையோ உள்ளன. 'வெஞ்சின விதியினை வெல்லவல்லமோ' என்று கூறிய இதே இலக்குவன், 'முதல் வானவர்க்கும் வலீஇதாம் விதிக்கும் விதியாகும் என் விற்ருெழில் காண்டி' என்று ஓரிடத்தில் கூறுகின்ருன். (அயோத்தி. நகர் நீங்கு. 134) மார்க்

* எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்ருலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னுய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ ?

என்னும் உமார்கய்யாம் பாடலும் இதனையே வலியுறுத்துகின்றது.

கண்டன் சரிதமும், சாவித்திரி சரிதமும் எதைக் காட்டு கின்றன? விதியையும் வெல்லலாம் என்பதைத்தான்.

இங்ஙனம் வலுப்பெற்ற இருவகையான கருத்து வேறுபாடுகள் தொன்று தொட்டே உலவி வருவதால் தான் நாயனர் இரண்டையும் கூற வேண்டியவரானர். இதனினும் இது வலியது என்று துணிந்து கூற எவ ராலும் ஆகாது என்பதே அவர் உள்ளக்கருத்தும். ஆனல் விதியின் பாலுள்ள நம்பிக்கை முயற்சியின்மையை—சோம் பலை—வளர்த்து விடலாகாதே என்று கருதுகின்ருர் ஆசிரியர். அதனலே தான், "முயற்சி செய்க; ஊழ்வலியால் ஆகா தென்றிருந்தாலும் முயற்சி அதற்கிடமான மெய் வருந்தின வருத்தத்தின் அளவேனும் கூலிதரும்; முயற்சி செய்து ஒருக்கால் நற்பயன் கிட்டாமற் போனலும் பழிப் பாகாது; ஊழை நினைந்து கொண்டு முயற்சி செய்யாமல் மடிந்திருத்தலே பழிக்கத் தகுந்த செயலாகும்*" என்று ஓயக் கருதும் உள்ளத்துக்கு உணர்வு ஊட்டுகின்ருர். இவற்றை நன்குணர்ந்து ஒழுகுவார்க்கு ஒருநாளும் துன்ப மென்பதில்லை.

இதுகாறும் கூறியவற்ருல் தெய்வப் புலவர் என்று போற்றப்பட்டவர் திருவள்ளுவ ரொருவரே என்பதும் அவர் சொல்லக் கருதும் பொருளை எவரினும் மேற்பட நின்று மக்களின் வாழ்க்கை அனுபவத்தோடு ஒட்டக் கூறும் ஆற்றல் படைத்தவ ரென்பதும், குறளுக்கு உரை காணும்போது ஆசிரியர் உள்ளக் கருத்தை உணர முயல வேண்டும் என்பதும், ஒன்ருேடொன்று மாறுபடுவது போல் காணப்படுபவை உண்மையில் முரணனவை யன்று என்பதும், தொன்று தொட்ட வழக்கும் ஆசிரியர் கருத் தும் அறிய அவ்விடங்கள் நன்கு விளக்கமாகும் என்பதும் பிறவும் ஒருவாறு அறியப் பட்டன.

---

* ஆள்வினை யுடைமை: 8, 9.

# 3. மாணிக்கவாசகர் காலம்

சைவ சமயாச்சாரியர் நால்வருள் அப்பரும், சம்பந்தரும் ஒரு காலத்தில் இருந்தவரென்பதும், அவர்களுக்குப் பின்னர் வாழ்ந்தவர் சுந்தரர் என்பதும் தெளிவு படுத்தப் பட்ட காரியங்கள். நாலாமவரான மாணிக்க வாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் முன்னிருந்தவரா, பின்னிருந் தவரா என்பது இன்னும் முடிவு கட்டப்படவில்லை. விவா தங்கள் பல எழுந்த வண்ணமிருக்கின்றன. காலப் பழமை தான் பெருமையைக் கொடுக்கும் என்னும் எண்ணமும் சைவாபிமானமும் சேர்ந்து வாகீசரை மூவர்க்கும் முன்னவ ராக்கப்பட்டதோடு சங்க காலத்துக்கும் இழுத்துச் செல் கின்றது. இக்கொள்கையை நிலைநாட்ட ஆயிரக் கணக் கான பக்க அளவில் புத்தகங்கள் வெளி வருவதையும் பார்க்கிறோம். அவர்களெல்லாம் ஒரு காரியத்தை ஊன் றிக் கவனிக்க வேண்டும். அதனிடையே சமயப்பற்று குறுக்கிடாமல் ஒதுக்கி நிறுத்தவும் வேண்டும்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை வகை செய்து திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய சைவப் பெரியார் நம்பியாண்டார் நம்பி. அவரால் மாணிக்க வாசகரின் பாடல் மதித்துப் போற்றி எட்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது திருமுறை வகுப்பில். அக்காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதி. அவருக்கு முன்னிருந்த சைவப் பெரியார் பட்டினத்தடிகள். இவரையும் புகழ்ந்து இவர் பாடற்றொகையைத் திருமுறை வகுப்பில் சேர்த்திருக்கிறார் நம்பியாண்டார் நம்பி. நம்பியின் புகழ் பெற்றவரும் முற்றத் துறந்த சிவப்பழமுமான நம் பட்டினத் தடிகள் திருவாயால் புகழ்ந்தோதப்பட்ட பெருமையை

யுடையவர் இருவர். அவர்கள் தாம் வரகுண பாண்டியனும், மாணிக்கவாசகரும்.

மாணிக்க வாசகர் சிறப்புக்கள் இவ்வளவுதானு? இல்லை; அவர்மீது பாமாலைகள், பிரபந்தங்கள், புராணங்கள், அவருக்கு உருவச்சிலை, திருவிழாக்கள் எல்லாம் உள்ளன. இங்ஙனமாகவும், பெரிய புராணத்தில் இவர் வரலாறு வரவில்லையே ஏன்? இதற்கு விடையிறுத்தல் எளிது. சுந்தரர், திருத்தொண்டத் தொகையில் இவரைச் சொல்லவில்லை; அதனுல் பெரிய புராணத்திலும் வரவில்லை. சரி; சுந்தரர் ஏன் சொல்லவில்லை? இது நியாயமான கேள்வி.

சுந்தரர், சிவனடியார்கள் அனைவரையும் சொல்லித்தீர்வேன் என்று சங்கற்பம் செய்துகொண்டாரா? என வழக்காடுவது விதண்டாவாதம். தாம் 'அடியார்க்கடியேன்'; 'அடியார்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியார் பக்தி தோன்றச் சிவனடியார்களைத் தேடித் தேடித் தொகுத்தார் சுந்தரர். அமர்நீதி நாயனுரையும், அரிவாட்டாய நாயனுரையும், எறிபத்த நாயனுரையும், ஏனுதி நாயனுரையும் தேடிப்பாடிய சுந்தரர்க்கு வாகீசர் முற்பட்டவராயிருந்தால் தேனுங் கசக்கத் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் கண்ணில் படாமல் போகார். பிற்காலத்தாரால்புகழப்படும் வாகீசரைச் சுந்தரர் ஒதுக்கி விடுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? ஒரே காரணந்தான். வரகுணனையும், பட்டினத்தடிகளையும் நம்பியாண்டார் நம்பியையும் பிறரையும் எதனுல் சுந்தரர்க்குத் திருத்தொண்டத் தொகையில் தனித்தனியாகச் சொல்ல முடியவில்லையோ அதே காரணந்தான் மாணிக்கவாசகரைச் சொல்லாமைக்கும். அதாவது இவர்களெல்லாம் சுந்தரர்க்குப் பிற்பட்டவர்கள் என்பது பொருள். ஆகவே மாணிக்க

வாசகர் காலம் சுந்தரர் காலமான கி.பி. 825-க்குப் பிற்பட்ட தெனக் கொள்வது பொருத்த மற்றதாகாது.

இதனோடு இன்னோர் உண்மையும் சிந்திக்கத் தக்கது. பட்டினத்தடிகளாலும் நம்பியாண்டார் நம்பிகளாலும் புகழப் பட்டவன் வரகுணன் என்றேமே? இவனை மாணிக்க வாசகரும் தாம் பாடிய திருக்கோவையாருள் இரண்டு பாடல்களில் (306, 327) குறிப்பிடுகின்றார். அவை,

மன்னவன் தெம்முனை மேற்செல்லு
மாயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல்
லாது வரகுணனும்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத்தான்
மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னாளுமற்
றோர்தெய்வ முன்னலளே.

புயலோங் கலர்சடை யேற்றவன்
சிற்றம்பலம் புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன்
வெற்பின் வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன்
கோபமும் காட்டி வரும்
செயலோங் கெயிலெரித் தெய்தபின்
இன்றோர் திருமுகமே

என்பன. இவ்விரு பாடல்களிலும் 'வரகுணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்' எனவும் 'சிற்றம்பலம் புகழும்......வரகுணன்' எனவும் நிகழ்காலத்தால் கூறியிருப்பவை கவனிக்கத்தக்கன.

நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி

எனப்போற்றித் திரு அகவலிலும்,

**'பருவரை மங்கைதன் பங்கரைப்**
**பாண்டியற்' காரமுதாம்**
**ஒருவரை......'**

எனத் திருப்பாண்டித் திருப்பதிகத்திலும், பிறவிடங் களிலும் புகழப்பட்டிருப்பவன் இவ்வரகுண பாண்டி யனே ஆகல் வேண்டும். ஆனல் மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராயிருந்தார் என் பது கதை. தஞ்சைத் திருவாளர் கே. எஸ். சீநிவாசப்பிள்ளை யவர்கள் கருதுவதுபோல அரிமர்த்தனனும், வரகுண னும் ஒருவனுகவே இருக்க வேண்டும். அரிமர்த்தனன் என்பது வரகுணனுக்கு அமைந்த புனை பெயராயிருக்க லாம். பகைவரை அழிப்பவன் என்பது அதற்குப் பொருள். இவ்வரகுணன் காலத்தில் இருந்தவர் வாகீசர் என்று கொண்டால், அவர் காலம் கி. பி. 862-ஐ ஒட்டி, அதாவது கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதி என் றுகிறது. இவ்விரண்டும் மாணிக்கவாசகர் காலத்தை நிர் ணயிப்பதற்கு மிகப் பொருத்தமான காரணங்களென்பது என் கருத்து.

இங்ஙனம் கொள்கின்ற போது நேரிலே நின்று இவற்றை எதிர்க்க ஆற்றலற்றுப் பக்கவாட்டில் நின்று ஒரு கேள்வியால் அசைத்துத் தள்ளப் பார்க்கின்றுர்கள் சிலர். 'சுந்தரர் திருத் தொண்டத் தொகையில் குறிப்பி டாமையால் வாகீசர் மூவர்க்கும் முந்தியவரா யிருக்க நியாய மில்லை என்கிறீர்களே? அவர் பிந்தி யிருந்தவரானல் தேவார ஆசிரியர்கள் மூவரையும்—அன்றி அவருள் ஒரு வரையாவது தம் பாடல்களில் எங்கேனும் குறிப்பிட்டிருக்க மாட்டாரா? மிகப் பெரும் அற்புதங்கள் செய்த ஆச்சாரி யர்களாயிற்றே மூவரும்? சுந்தரரைப் போல அடியார் களைச் சொல்லித் தீரும் கட்டுப்பாடுடையவ ரல்லராயினும்

சிவனருளை வியந்துரைக்கும்போது அவர் இப்பெரியோர்களுக்குப் புரிந்த பரங்கருணையையும் குறிப்பிட்டிருக்கலாமல்லவா?' என்பது அவர்கள் விடுக்கும் வினா.

உண்மைதான். இதுபற்றி உயர் திரு ராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்களும் நானும் விவாதித்துக் கொண்டிருந்தபோது, நாங்கள் கண்டுணர்ந்த சில இடங்களைக் கீழே தருகின்றேன். முதலாவது,

**பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய**
**அடியார்க்குன்**
**அணியார் பாதம் கொடுத்தி**

(திருவாசகம், திருச்சதகம், 89)

என்னும் அடிகளை எடுத்துக் கொள்வோம். இறைவர் தன் அடியார்க்கு—அதிலும் பழைய அடியார்க்குப் பிணியைத் தீர்த்தருளியது, அணியார் பாதம் கொடுத்தருளியது— என்ற இவ்விரு நிகழ்ச்சிகளும் யார் வரலாற்றிலே காணப்படுகின்றன? அப்பருக்கு ஏற்பட்ட சூலை நோயைத் தீர்த்த செய்தியையும், அவர் முடியில் ஈசன் தம் திருவடிகளை வைத்தருளிய செய்தியையும் குறிப்பனவாகாவோ? நாவுக்கரசரிடத் தன்றி வேறு யாவரிடத்தேனும் இவை நிகழ்ந்திருப்பதாகச் சிவ புராணங்கள் கூறுவதுண்டா? இல்லையே. இரண்டாவது,

**பண்சுமந்த பாடற் பரிசுபடைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தான்**

(ஷை திருவம்மானை, 8)

என்ற தொடர், பண்ணார் பாடலுக்கு இறைவன் பரிசளித்ததைத் தெரிவிக்கின்றது. ஆளுடையடிகளான திருஞான சம்பந்தர் பொற்றாளமும், முத்துச் சிவிகையும் பிறவும்

தம் பாடலுக்குப் பரிசிலாகப் பெற்றதை இது குறிப்பிடு கிறதெனக் கொள்வது குற்றமாகுமா?

மூன்றுவது, சுந்தரரைக் குறிப்பனவாகக் கருதப்படும் அடிகள் வருமாறு:

**பாற்றிரு நீற்றெம் பரமனைப்**
**பரங்கருணையோடு மெதிர்ந்து**
**தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்கும்**
**சோதியை......**

(ஷை எண்ணப் பதிகம், 6)

இதில் வரும் 'மெய்யடியார்க்கு' 'எதிர்ந்து' என்பவை கவனிக்கத்தக்கன. தம்மால் மெய்யடிமை பூண்ட ஒருவருக் காக எதிர்ந்த செயல் எங்கே காணப்படுகிறது? சுந்தரரின் திருமணக் காலத்தில் அந்தணர் கோலத்தில் தோன்றி ஆளோலை காட்டி எதிர்வாதம் பேசித் தடுத்தாட் கொண் டதைக் குறிப்பிடாதா? தம்பிரான் தோழராய சுந்தரரன்றி இங்குக் குறிக்கப்பட்ட மெய்யடியார் வேறு யாராயிருக்க முடியும்? சைவ புராணங்களில் வரும் இத்தகைய பிற வரலாறு யாது? எதிர்ந்தது எவ்விடத்தில்? மெய்யடியார் யாவர்?

மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந் துறையில் இறை வர் அருள் புரிந்ததை இத்தொடர் குறிப்பிடாதோ என்று கேட்கலாம். அதனைச் சொல்வதா யிருந்தால் 'பரங்கருணை யோடு மெதிர்ந்து தோற்றி மெய்யடியேற்கு அடுட்டுறை அளித்த சோதியை' என்று கூறி யிருப்பார். இங்கே 'மெய்யடியார்' எனப் படர்க்கையாகச் சொன்னமையால் அவ்வடியார் பிறரொருவர் என்பதும், அளிக்கும் என்ற தால் முன் நடந்த வரலாறென்று காட்டி ஈசனார் அருள் புரியும் இயல்புடைமையை விளக்குகின்ருரென்பதும் அறி

யத் தக்கன. ஆகவே இப்பகுதி சுந்தரர் சரிதையைச் சுட்டி நிற்கின்றதெனக் கொள்வதே பொருத்தமாகும்.

மேலே காட்டிய மூன்று பகுதிகளாலும் மாணிக்கவாசகர் தமக்கு முன்னிருந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற தேவார ஆசிரியர் மூவரையும் முறையே குறிப்பிட்டுள்ளார் என்பது அறியப்படுகின்றதோடு, அவர் மூவருக்கும் பின்னிருந்தவ ரென்பதும் தெளியப்படும்.

# 4. கவிச்சக்கரவர்த்தி கம்பன்

மண்ணுலகை யாண்ட மன்னுதி மன்னர்கள் எத்தனையோ பேர் மாண்டு மறைந்து விட்டார்கள். அவர்களில் பெரும்பாலாருடைய பெயர்களும் நாளடைவில் மக்கள் மனத்தைவிட்டு நீங்கிப்போயின. மேலும், ஒரு சக்கரவர்த்தி காலஞ்சென்றவுடன் அவரது அரியணையை அலங்கரிக்க இன்னொருவர் வருவது இவ்வுலக வழக்கம். ஆனுல் கவியுலகில் அப்படிச் சொல்வதற்கில்லை. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சக்கரவர்த்தி தான் இருக்க முடியும். அதாவது வட மொழியில் காளிதாசனும், தமிழில் கம்பனும், கிரீக்கில் ஹோமரும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பீயரும் அவர்கள் தோன்றிய காலமுதல் நாளது வரையிலும் சக்கரவர்த்திகளாக இருந்து வருகிறுர்கள். அவர்கள் காலஞ் சென்றதன் பின் இதுவரையிலும் அந்தப் பீடங்களில் அமரத்தக்க மகா கவிஞர்கள் உலகில் தோன்றியதில்லை. அரசர், சிற்றரசர், ஜமீந்தார், பண்ணையார், ஓரேருழவர் என்ற முறையில் கவிஞர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறுர்கள். கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்திற்குரியவர்கள் அவர்களில் யாருமில்லை என்பது திண்ணம். ஆகவே தமிழில் கவிச்சக்கரவர்த்தியான கம்பனைத் தமிழர் ஒவ்வொருவரும் பாராட்டுவதோடு அவனது கலைக் கோயிலான கம்ப ராமாயணத்தையும் பாராட்டிப் பயன்பெற வேண்டியது கடமையாகும்.

இந்நாளில் கம்ப ராமாயணத்தை அறியாத தமிழர்கள் இருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம். நாஞ்சில் நாட்டிலுள்ள முக்கியமான ஒவ்வொரு வீட்டிலும் கம்ப ராமாயண ஏட்டுப்பிரதி இருந்து வந்திருப்பதுண்டு.

வேனிற் காலமான பங்குனி சித்திரை மாதத்து இராக் காலங்களில் ஊர் நடுவேயுள்ள அம்பலங்களிலோ, கோவில் களிலோ வைத்துக் கம்ப ராமாயணம் படித்துப் பொருள் விரித்துரைக்கும் வழக்கம் தொன்று தொட்டே நடந்து வருவதொன்றாகும். இதனால் எல்லா நூல்களிலும் கம்ப ராமாயணமே இனிமையும் தலைமையுமுடைய சிறந்த நூலாகத் தமிழர்களால் கருதப்பட்டு வந்தமை தெள்ளத்தெளிய உணரப்படும்.

இங்ஙனமாகவும் கம்ப ராமாயணத்தை எரிக்க வேண்டும் என்ற கிளர்ச்சி தமிழ் நாட்டில் தோன்றி யிருப்பதைப் பலரும் அறிவர். அதுவும் ஒரு நன்மைக்கே தான். ஏனென்றால் கம்ப ராமாயணத்தைப் படியாதவர்களும், எரிக்கும் படியாக அதில் என்ன இருக்கிறதென்று அறிய ஆவல் கொண்டு படிப்பார்களல்லவா? படித்து அதன் சுவையில் ஊறிவிட்ட பிறகு அதை எரிக்க வேண்டுமென்று அவர்களே சொல்ல மாட்டார்கள் என்பது துணிபு. அக்கிளர்ச்சி வரவர அருகி வருவதே அதற்குப் போதிய சான்றாகும். தமிழ்ப் பெரியார்கள் இவ்வளவோடு அமையாது கம்ப ராமாயணச் சுவை தமிழ் நாடெங்கும் பரவுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

கம்ப ராமாயணப் பாடல்களை நல்ல முறையில் பதிப்பிக்க வேண்டுவது மிக இன்றியமையாததாகும். பல ஏட்டுப் பிரதிகளையும் பார்வையிட்டுப் பல அறிஞர்கள் கூடியிருந்து பிழையின்றி ஒரு பதிப்பு வெளியிட்டால் படிப்போருக்கு அது பெரும் பயன் தருவதாக அமையும். இதற்கு அறிஞர்கள் மட்டும் மனம் வைத்தால் போதாது; செல்வர்களும் ஒத்துழைக்க முன்வர வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் இதற்குத் துணைபுரிவாராக.

**அம்புவிக்கு வாய்த்த அருட் கவி ஐயமின்றி**
**உம்பரமு தொத்த உயிர்க்கவி—கம்பனும் தன்**
**மந்திரச் சொல்லால் வனைந்தகவி என்றேனும்**
**வெந்திடுமோ தீயால் விளம்பு?**

ஓலை எரியும் தாள் எரியும்
   உள்ளத் தெழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதுகவி
   கனலில் வெந்து கரிந்திடுமோ?
சிந்தை மகிழ விழாக்கண்டு
   தேர்ந்த புலவர் முன்வந்து
சந்த மெழவே பாடுகவி
   தழலில் வெந்து நீருமோ?
உள்ளத் துவகை பொங்கியெழ
   உரைகள் சொல்லப் பொருளேறித்
தெள்ளத் தெளிந்த கவியமுதம்
   தீயில் வெந்து பொடியாமோ?

# 5. தமிழிசை

**வெந்தழல் நீராகும் வெள்ளெலும்பு பெண்ணாகும்**
**வந்தமத வேழம் வணங்கிடுமே—சந்தமெழப்**
**பாடுவா ருள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு**
**நீடுலகி லுண்டோ நிகர்?**

தமிழ் வகை மூன்றனுள் இசையை நடுவில் வைத்துச் சொல்லக் காரணம், அது முதலில் நிற்கும் இயலுக்கும் இறுதியில் நிற்கும் நாடகத்துக்கும் இன்றியமையாச் சிறப்புடையது என்பதைக் காட்டுவதற்காக என்பர். தமிழ் முழுமையிலும் இசை கலந்து நிற்கிறதென்பது இதன் கருத்து. எந்த ஒரு பாடலையும் இசையின்றிப் படித்தால் கேட்க மனம் செல்வதில்லை. பண்ணொடு பாடினால் அப்படியே ஆனந்தமாகக் கேட்டு நிற்கின்றோம். கடவுள் திருமுன் நின்று ஓரன்பர் தேவார திருவாசகங்களைப் பண்ணிற் குழைத்துக் கசிந்துருகிப் பாடி நிற்கின்றாரென்றால் கேட்பவர் அனைவரும் சிந்தை கட்டுண்டு குவித்த கை குவித்தபடியே சித்திரப் பதுமை போல் அசைவற்று நிற்கின்றார்கள். இதனையும் பார்க்கின்றோம். அந்தப் பாடலை இன்னொருவர் பண்ணின்றிச் சொல்வாரானால் அதை அவர்கள் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாது ஒதுங்கிச் செல்வதையும் காண்கின்றோம்.

இது ஏன்? பாடல்களைப் பண்ணோடு பாடும் போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது; பொருள் விளக்கம் ஏற்படுகிறது; பூரணமாகிறது. ஒருவனது மனக்கருத்து முழுமையும் அலுங்காத குலுங்காத வெறும் வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்திவிட முடியாது. வெறும்

சொற்களுக்கு அந்தச் சக்தி இல்லை. அவற்றோடு எடுத்தல், படுத்தல், நலித்தல், நீட்டல், குறுக்கல் முதலான உச்சரிப்பு வேறுபாடுகள் கலக்க வேண்டும். அதாவது, பாவத்தை வெளிப்படுத்தும் இசை கலக்க வேண்டும். இசையும் வார்த்தையும் கலந்தால் தான் இதயம் பூர்ண மாய்த் திறந்ததாகிறது:

**ஐயா நீ அருள் செய்ய வேண்டும்—உன்றன்**
**அடியிணை யன்றிவே றொருதுணை அறியேன்**

என்ற அடிகளைப் பண்ணோடு இசைப்பதனால் உண்டா கின்ற பொருள் வெறும் வாசிப்பினால் மட்டும் உண்டா குமா? ஒருநாளு மில்லை.

கீர்த்தனங்களுக்கு மட்டுமல்ல; இயற்றமிழ்ப் பாக்க ளுக்குக் கூட இசை பெய்து பாடினால் தான் கருத்துத் தெளிவும் கவர்ச்சியும் ஏற்படும். 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்பது ஒளவை மொழி. இதனாலேயே தமிழர்கள் எந்த ஒரு பாடலையும் பண்ணோடு பாடும் வழக் கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களிடம் இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமல்ல. பாட்டுக்கள் அமைக் கத் தொடங்கிய காலத்திலேயே இவ்வழக்கம் ஏற்பட் டிருக்க வேண்டும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை இன்னின்ன ஓசைகளைப் பெறுமென் றும் இன்னின்ன பொருள்களை ஏற்று வரு மென்றும் இலக்கணமே அமைத்து விட்டார்கள்.

பண்டைப் பனுவல்களான பரிபாடல், தேவாரம், திருவாய் மொழி முதலியவற்றிற்குப் பண்ணும் தாளமும் அமைத்துப் பாடி வந்த வழக்கம் மிக்க புராதனமானது. சிலப்பதிகாரத்தில் வருகின்ற வரிப்பாட்டும் ஒரு வகை இசைப்பாட்டே யல்லவா? பாடல்களுக்கு இசையமைத் துப் பண்டையோர் பெருகக் கையாண்டு வந்தமை இவற்

ருல் அறிந்தோம். ஆகவே, இசையானது ஒருவன் மனக் கருத்தை வெளிப் படுத்துவதற்குத் துணையாக இருக்கும் வார்த்கைளோடு ஒப்ப இன்றியமையாத தென்பதும், அது கலந்தன்றி இதயம் நன்கு திறக்கப்பட்டதாகா தென் பதும், இதனை நன்கறிந்திருந்த பண்டைப் பெரியோர்கள் இசையமையவே பாக்களை யாத்தார்க ளென்பதும், பாடல் களை இசையோடு பாடுவதென்பது ஆதிகாலம் தொட்டு இன்று வரை தமிழரிடம் நிலவிவரும் வழக்கமேயாம் என் பதும் நன்கு உணரப்படும்.

இனி, இந்த இசையைப் பாட்டுக்களில் எந்த அளவுக் குக் கலக்கலாம் என்பதைத் தெரிந்து கலப்பதே முறையா னது. பிட்டு அல்லது கொழுக்கட்டைகள் இருக்கின்றன. முக்கால் பங்குக்கு மேல் மாச்சத்து உடையவை இவை. இவற்ருேடு சிறிது சீனி கலந்தாலல்லாமல் சுவையிராது; சாப்பிட முடியாது. கம்ப ராமாயணப் பாடல் முதலி யவைகளை இசைக்கலப்பில்லாமல் சொன்னுல் இனிமை தோன்ருது. இசை கலந்தால் தான் தெளிவும், இனிமை யும் ஏற்படும். ஆனுல் இசையை அளவுக்கு மிஞ்சி ஏற்றி விடவும் கூடாது. இயற்றமிழ்ப் பாட்டுக்கள் கொழுக்கட் டைக்குச் சமமானவை.

அல்வா அல்லது லட்டு என்பவைகளோ முக்கால் பங்குக்கு மேல் இனிப்புக் கலந்தவை. அவற்றுக்குப் பின் னும் சீனி தேவையில்லை. கீர்த்தனங்கள் அல்வா போன் றவை. சில பாகவதர்கள் கீர்த்தனை பாடத் தொடங்கி இராக ஆலாபனையும் ஸ்வர வரிசையுமாக வார்த்தைகள் தோறும் நிறைத்துப் பொருளையே உருத்தெரியாமலாக்கி விடுகிருர்கள். கீர்த்தனைகள் இசை வெள்ளத்துக்குள் அழுந்துமாறு முக்கிக் கொல்லப் படுகின்றன. இது முறையல்ல. அல்வா என்ற பெயரைச் சொல்லி வெறும்

சர்க்கரைப் பாகை உருட்டித் திரட்டிக்கொடுத்தால் உண்ண முடியுமா? பயன் தருமா?

கீர்த்தனைகளைப் பாடும் பாகவதர்கள் கவனிக்கவேண்டியவை நிறைய உண்டு. முதலாவது, சங்கீதத்தைப் போலவே அவர்கள் சாகித்தியத்தையும் மதிக்க வேண்டும். இரண்டாவது, பாட்டின்பொருளை அவர்கள் நன்கு தெரிந்து அப்பொருள் விளங்குமாறு தெளிவுபட உச்சரிக்க வேண்டும். இசை ஒன்றையே கவனித்து நெடிலைக் குறுக்கியும், குறிலை நீட்டியும் சில எழுத்துக்களை விழுங்கியும் தேய்த்தும் உச்சரித்துப் பொருட் பிழை உண்டாக்கக் கூடாது. மூன்றாவது, சொற்களைப் பிரிக்கும்போது பொருளற்ற முறையில் பிரிக்காமல் ஏற்றவாறு பிரித்தும் இசைத்தும் பாடவேண்டும். எல்லாவற்றுக்கும் பாவம் நன்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது பாடல் இயற்றின ஆசிரியனின் பாவம் வெளிப்படுமாறுள்ள இராக தாளங்களை அமைத்து, அந்த உணர்ச்சிவசத்தனாக நின்று கேட்போரும் அதே நிலை யடையுமாறு சுவைத்து ரசித்துப் பாட வேண்டும். இதுதான் மிக மிக முக்கியமானது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். அதாவது சாகித்தியம் செய்வார் ஒருவரும், இராகதாளங்களை அமைத்துப் பாடுபவர் வேறனவர்களுமாக இருந்தால் பாட்டு சோபிக்குமா ? சாகித்திய கர்த்தாவின் பாவம் வெளிப்படுமா? என்பது. ஆம். இது ஒரு பெரும் பிரச்சினை. சாகித்திய கர்த்தாவும், இராக தாளமமைப்பவரும், பாடுபவரும் ஒருவராகவே இருந்துவிட்டால் மிக மேலானதுதான்; அதற்குச் சந்தேகமில்லை. இம்மூவகைத் தன்மைகளும் ஒருவரிடமே அமைவது என்பது மிக அருமை. ஸ்ரீ தியாகையர், இசைக்கவியரசு இலட்சுமண பிள்ளை போன்றவர்கள் அநேகர் இல்லை.

இரண்டாவது, சாகித்திய கர்த்தாவே இராக தாளங்களையும் அமைப்பவராயிருப்பது. இவரும் முன்னவருக்கு அடுத்தபடியாகச் சிறப்புடையவர்தான். ஆனால் இவ்விரு வகையாரையும் தவிர, இன்னொருவர் இராக தாளங்களமைக்க ஒருவர் சாகித்தியம் செய்பவராயிருத்தல் கூடாதா? அப்படி இருந்ததில்லையா? அதனால் வரும் நன்மை தீமை என்ன? என்பவை சிந்திக்கத் தக்கவை.

பாடும் கவிஞர் உள்ளம் பக்குவ நிலையை அடையும் போதுதான் பாடல்கள் வெளிப்படுகின்றன. அவர் மனம் முழுமையும் கவர்ந்த உணர்ச்சி அதனை நெகிழச் செய்து செஞ்சொற்களோடும் உருப்பெறாத ஒருவகை ஊமை இசையோடும் கலந்து ஊறி நிற்கின்றது. அது தக்க நிலையடைந்ததும் மரத்தினின்று கனி பழுத்து விழுகின்றாற்போலப் பாடலாக வெளிக்கிளம்பும். ஆகவே, பாடல்கள் பக்தி, சோகம், அன்பு, காதல், வீரம்முதலான உணர்ச்சி விசேஷங்களினடியாகத் தோன்றிக் குழைவு, கனிவு, இரக்கம், விண்ணப்பம், வெறுப்பு, ஒறுப்பு முதலான பாவங்களோடு வெளிப்படுகின்றன என்றறிகின்றோம். இந்த பாவங்களைச் சிறிதளவு சங்கீதப் பயிற்சியுடையவர்களுக்கும் படித்துப் பார்த்த மாத்திரத்திலே உணர்ந்து கொள்வது கடினமல்ல. அந்த பாவம் வெளிப்படுமாறு இராக தாளங்களமைப்பதும், பாடிக்காட்டுவதும் இயலக்கூடியவைகளே. இப்படித் தான் பெரும்பான்மையான பாட்டுக்களும் பாடப்படுகின்றன.

பாட்டுக்கள் இயற்றுவோன் ஒருவனும், இராகதாளங்கள் அமைப்போன் இன்னொருவனும், பாடுவோர் வேறு பலருமாக அமைந்துள்ள வழக்கம் பண்டைக் காலத்திலும் இருந்தது தான். கடைச்சங்க நூற்றொகையைச் சேர்ந்த பரிபாடல் என்னும் நூலைப் பார்த்தால் இது

தெரியவரும். பாடல்தோறும் பாடல் இயற்றினர் பெயரும் இசையமைத்தார் பெயரும் வேறு வேருகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்று நமக்குப் பழங்காலத்திலிருந்த கூத்து இசை என்பவற்றின் இயல்பையும் வரலாற்றையும் ஒருவாறு உணரச் செய்யும் ஒளி விளக்காயிருப்பது சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையும்,அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையும் ஆகும். அக்காதையிலும் **ஆடலாசிரியன் அமைதி, இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி** என்றின்ன பல ஆசிரியர்களின் இலக்கணம் கூறிச் செல்கின்றமையைப் பார்த்தால் இசையாசிரியனும் இயற்றமிழாசிரியனும் வேறு வேருயிருந்தார்கள் எனத் தெளிய உணரலாம்.

அநேக பெரியார்களுடைய கீர்த்தனங்களுக்குப் பழைய மெட்டு, புதிய மெட்டு என இருவகை மெட்டுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. மகாகவி அருணசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகத்துக்கு ஆசிரியர் காலத்தில் அமைக்கப்பட்ட இராக தாளங்கள் ஒருவகையாயிருந்தன. பின்னர், அவற்றை மாற்றி அமைத்துப் பாடினவர்களும் உண்டு. திருவனந்தபுரத்தில் அஞ்சல்புரை இராமையர் என்றெருவர் இருந்தார். அவர் இராமநாடகக் கீர்த்தனையில் பலவற்றுக்கும் வேறுவகை மெட்டு அமைத்துப் பாடி வந்தார். உணர்ச்சி பாவத்தோடு கேட்பதற்கு இனிமையாகவே இருந்தது.

இன்று சுவாதித் திருநாள் கீர்த்தனங்களெல்லாம் அவர் அமைத்த மெட்டுப்படித்தான பாடப்படுகின்றன? இல்லை. சில மாற்றிப் பாடப்படுவதாகவும் அறிகின்றேம். ஆகவே ஒருவர் பாட்டுக்கு இன்னெருவர் இராகதாளங்கள் அமைத்துப் பாட முடியாதென்பது வெறும் பேச்சு. சிறந்த முறையில் அமைந்த பாடலாயிருந்தால் அது இராக தாளங்கள் அமைக்கப் பெருத வெறும் பாடலாக

இருந்தாலுங்கூட ஆசிரியனுடைய பாவத்தைப் புலப் படுத்தி விடும். அதனை ஊன்றி உணர்ந்து இராக தாளங் களை அமைக்க வேண்டும். அது ஒரு வகையாகத் தான் இருக்க வேண்டும் என்பது கூட இல்லை. ஒரு பாவத்தை வெளிப்படுத்துவதற்குப் பல மெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஏற்றதைத் தெரிந்து அமைப்பதே முக்கியம். இதில்தான் பாடகர்களின் கவனம் நன்கு பதிய வேண்டும்.

கீர்த்தனங்கள் அமைப்போர் கவனிக்க வேண்டியவை பல உண்டு. பாட்டு என்பது வெறும் வார்த்தைகளின் தொடுப்பல்ல. நீளம் வீதிகளைக் கணக்காக்கி முழக்கோல் கொண்டு மட்டப்படுத்திக் கற்களை அடுக்கிக் கொண்டு போகிற கொத்தனல்லன் கவிஞன். அவன் நாவினின்று வரும் சொற்கள், அடித்துப் பெயர்த்தெடுத்த கரடு முர டான கருங்கற்கள் போன்றில்லாமல் உயிர்த்தன்மை யுடை யவையாய் இனிமையில் தோய்ந்து பண்பட்டு வருகின்ற செஞ்சொற்களா யிருக்க வேண்டும். அவை அடுத்துவரும் சொற்களின் கூட்டுறவினால் புத்துயிர் பெற்று இலங்க வேண்டும். பாட்டு முழுமையினும் ஓர் உயிர்த்துடிப்பு இருக்க வேண்டும். பாட்டினை இசையோடன்றி வெறு மனே படித்தாலும் இசையோடு பாடினாலும் இன்பம் தர வேண்டும். ஆகவே, அது இலக்கியச் சுவை பெற்றுத் திகழ வேண்டுமென்றாகிறது. இத்தகைய பாட்டுக்கள் தான் நிலையானவை; பயன் தருபவை. அல்லாதவையெல் லாம் காலவெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப் பட்டு இருந்த விடம் தெரியாமலாகி விடும்.

இனி, தமிழிசை முன்னேற்றம் பற்றிக் கவனிக்க வேண்டிய சில காரியங்களைக் கூற ஆசைப்படுகிறேன். சிலர் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையைப் படித்துவிட்டுத் தமிழில் பெருநாரை இருந்தது; பெருங்

குருகு இருந்தது என்று பேசிப் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாரையும் குருகும் நம்மை விட்டுப் பறந்து போய் வெகு காலமாகிவிட்டன. இனி அவை வரப்போவதில்லை. கரையிலிருந்து அழுது கொண்டிருந்தால் கடல் கொண்டுபோன நூல்கள் வந்து கரையேறப் போவதுமில்லை. ஆகவே பழமைபாராட்டி வீண் காலம் போக்குவதல்ல நாம் இப்பொழுது மேற்கொள்ள வேண்டும் காரியம். இழந்தவற்றை ஈடு செய்ய வேண்டும். 'யாழ் நூல்' என்னும் ஒப்பற்ற நூலை அரிதின் முயன்று ஆக்கித்தந்த விபுலானந்த அடிகளைப் போலப் பல புதுப் புது நூல்களை ஆக்க வேண்டும். பழைய நூல்கள் தலை மறைவாகக் கிடக்குமானால் அவற்றைத்துருவி ஆராய்ந்து வெளிக்குக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் மொழி பெயர்ப்புக்கள் மூலம் தமிழிசைக் கலையை வளம் படுத்தலாம். தமிழிசைச் சங்கம் இத்துறையில் உழைப் பார்க்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவுமாக !

கீர்த்தனங்கள் புதிது புதிதாக எழுதப் படவேண்டும். பற்பல துறைகளிலும் கீர்த்தனங்கள் எழுதலாம். முன் சொன்னது போல அவை இலக்கிய நயம் செறிந்தவையாய் இருக்க வேண்டும். அருணசலக் கவிராயர் கீர்த்தனைகளும் முத்துத் தாண்டவர் கீர்த்தனைகளும் இதற்கேற்ற முன்மாதிரிகள் ஆகும். தற்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார் இவ்விஷயத்தில் செய்துவரும் தொண்டு போற்றற் குரியதாம்.

தமிழிசைக்கெனத் தனிப் பத்திரிகை வேண்டும். அது புதுப் புது வெளியீடுகளையும், புதிய கீர்த்தனங்களையும், சாகித்தியகர்த்தாக்கள் சங்கீத வித்வான்கள் என்போரின் வரலாறுகளையும் தாங்கி வரலாம். அதோடு பாடகர்கள் பாட்டுக்களைக் கொலைபண்ணும விருப்பதற்கான வழி

வகைகளை எடுத்துக்காட்டி அறிவுறுத்திக்கொண்டுமிருக்கலாம். இத்தொண்டு இசை முன்னேற்றத்துக்கு ஓர் இன்றியமையாத தொண்டு ஆகும்.

சமீபத்தில் கர்னாடக சங்கீதக் கலாசாலை ஒன்று சென்னையில் நிறுவப் போவதாக அறிந்தேன். அது மிகவும் பாராட்டத் தகுந்த ஒரு நல்ல காரியமாகும். அதனால் தமிழிசை பல வழிகளிலும் வளர்ந்து வருமென்று நம்புகிறேன்.

**தமிழ் வாழ்க!**
**தமிழிசை வாழ்க!**
**தமிழர் வாழ்க!**

# 6. நாடகமே உலகம்

'இந்த உலகம் ஒரு நாடகசாலை' என்று ஷேக்ஸ்பீயர் முதலிய பல அறிஞர்களும் கூறியுள்ளனர். இது நாடகசாலைக்கு வெளியிலிருந்து பேசும் பேச்சு. நாடக சாலைக்கு உள்ளிருந்து சொல்வதானுல் 'இந்த நாடக சாலையே உலகம்' என்று சொல்ல வேண்டும். ஏனென்ருல், உலக அனுபவங்களனைத்தையும் இங்கே நாம் பார்க்கிருேம்.

நாடகமென்பது நீண்டகாலமாகப் பல இடங்களிலும் நடைபெறும் சிதறுண்ட காரியங்களையெல்லாம் திரட்டிக் கோவைப்படுத்திச் சுருங்கிய காலத்தில், சுருங்கிய இடத்தில் ரஸம் ததும்ப நடத்திக் காட்டுவதாகும். உதாரணமாக இராம நாடகத்தை எடுத்துக் கொள்வோம். அறுபதினுயிரம் ஆண்டு அரசாட்சிசெய்த தசரதன் காலம் முதல் இராம பட்டாபிஷேகம் வரை நடைபெறும் அதில், எத்தனையோ அனுபவங்கள், காரியங்கள். அனைத்தையும் நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்குள் காட்டிவிடுகிருர்கள். இவற்றைப் பார்க்கையில் நாடகம் பார்ப்பது போன்ற உணர்ச்சியே நமக்கு உண்டாகிறதில்லை. அந்தக் காலத்தில் நாமும் உடனிருந்து பார்ப்பதாகவே ஆகிவிடுகிருேம். ஆதலால் இந்த நாடகசாலையே உலகமென்று சொல்வது மிகப் பொருத்தமான தென்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆராய்ந்து பார்த்தால் இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நடிகனுகவே வாழ்க்கை நடத்துகிருன். ஒரு பிச்சைக்காரன் வந்து எவ்வித வளைவும், குழைவும், தாழ்வுமின்றி 'அம்மா! பிச்சை' என்ருல் யார்

இரங்குவார்கள்? அதற்காக அவன் தன் முகபாவத்தை மாற்றிக்கொள்கிருன். குரலில் குழைவு காட்டுகிருன். இரக்கம் தோன்றுமாறு அபிநயிக்கிருன். இது அவனுக்கு இன்றியமையாததாயிருக்கிறது.

ஓர் உத்தியோகஸ்தரை எடுத்துக் கொள்வோம். அவர் தம் மேலதிகாரிமுன் நிற்கும்போது உள்ள நிலை என்ன? ஆடையணிகள் எப்படியிருக்கும்? முகபாவம் எப்படியிருக்கும? ஸ்வரம் எப்படியிருக்கும்? அவரே தம்மை விடத் தாழ்ந்த உத்தியோகஸ்தனிடத்தில் எப்படி நடந்து கொள்வார்? அப்பொழுது அவர் முன்னைய உத்தியோகஸ்தரா? இல்லவே இல்லை. எடுப்பான தோற்றமும், முறுக்கான பேச்சும், அதட்டலும் உருட்டலும் மிரட்டலும் எங்கிருந்தோ வந்துவிடும். இவை எதனைக் காட்டுகின்றன? அவர் இந்த உலகத்தில் அடிக்கடி வேஷம் மாறி மாறி நடிக்கிருர் என்பதைத்தானே் காட்டுகின்றன. அவரென்ன, நாமும் அப்படித்தான்.

மக்களின் அறிவை அபிவிருத்தி செய்வதற்கு நாடகத்தைப் போன்று ஒரு சிறந்த கருவி வேறெதுமில்லை. அதனுலேயே காலஞ்சென்ற சரோஜினி தேவியார் 'நாடகத்தைப் பாமர மக்களின் பல்கலைக் கழகம்' என்று கூறியிருக்கிருர்கள். ஒரு நடிகன் ஒரு பார்வையினுல், ஒரு முகபாவத்தால், ஒரு ஸ்வரபேதத்தால், ஒரு வளைவினுல், ஒரு குழைவினுல், ஒரு தலையசைப்பினுல், ஒரு கை வீச்சினுல் விளக்குகிற கருத்தை ஒரு எழுத்தாளன் ஒன்பது பக்கம் எழுதுவதானுலும், ஒரு பிரசங்கி ஒன்பது மணிநேரம் பேசுவதானுலும் நம்முடைய மனத்தில் அவ்வளவு நன்ருகப் பதியச் செய்ய முடியாது என்பது உறுதி.

ஒரு காலத்தில் ஒரு நாடகத்தைச் சபையில் அரங்கேற்றினுர்கள். அப்பொழுது நாடகம் எழுதின ஆசிரிய

னையும் பார்ப்பதற்கு அழைத்திருந்தார்கள். நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியனுக்குப் பெரும் திகைப்பு ஏற்பட்டு விட்டது. இது நாம் எழுதின நாடகம்தானே என்ற சந்தேகம்கூடத் தோன்றியதாம். ஏன்? அவன் நினைத்தேயிராத அபூர்வ கருத்துக்களெல்லாம் நடிப்பில் வெளிப்பட்டன. இதிலிருந்து நாடகத்தில் நடிப்பு எவ்வளவு முக்கியமான தென்பதை நன்கு அறியலாம்.

ஒவ்வொரு காலேஜ்களிலும், ஹைஸ்கூல்களிலும் நாடக அரங்கு ஏற்பட்டிருக்க வேண்டியது அவசியம். சரித்திரம், புராணம் ஆகியவற்றை நாடகம் மூலமாகக் கற்பிப்பது சிறந்த முறையாகும். காதால் கேட்டறிவதைவிடக் கண்ணால் பார்த்தறிவது மனத்தில் நன்ருகப் பதியும். *

தமிழ் மொழியில் ஆதிகாலந்தொட்டே நல்ல நாடகங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. இதைப்பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறேன். முன் காலத்தில் இருந்து கடல் கொண்டு போனதோ அல்லது இல்லாமலே இருந்ததோ அதைப்பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது நமக்கு வேண்டியதில்லை. ஆங்கிலம், பிரஞ்சு, சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளிலிருப்பதுபோலச் சிறந்த நாடகங்கள் தமிழில் இல்லாமலிருப்பது ஒரு பெருங்குறையேயாம். அக்குறையை நீக்க இப்பொழுது அநேக அறிஞர்கள் முன்வந்திருப்பது பாராட்டற்குரியது. நாடகங்களில் அறையிலிருந்து படிக்கத் தகுந்தவையும், அரங்கில் ஆடத் தகுந்தவையும் உண்டு. இரண்டிலும் பின்னதே மிக முக்கியமானது. சரித்திர சம்பந்தமாகவும் புராண சம்பந்தமாகவும், சமூகச் சீர்திருத்த சம்பந்தமாகவும் பல நாடகங்கள் தமிழி

* **One eye is worth two ears**- என்பது இந்த உண்மையை உணர்த்தும் ஓர் ஆங்கிலப் பழமொழி.

லெழுதி நடிக்கப் படவேண்டும். இந்த விஷயத்தில் ஸ்ரீமான்கள் ராஜமாணிக்கம் பிள்ளை, டி. கே. எஸ். சகோதரர்கள் ஆகியோர் நல்ல தொண்டு செய்துவருகிறார்கள். இன்னும் பலர் இத்துறையில் ஈடுபட்டுத் தமிழ் நாடகக் கலையை முன்னேற்ற வேண்டியது மிக்க அவசியம்.

**கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்துநமக்கு**
**எண்ணரிய போதனைகள் ஈவதற்கு—நண்ணுமிந்த**
**நாடக சாலையொத்த நற்கலா சாலையொன்று**
**நீடுலகி லுண்டோ நிகழ்த்து?**

# 7. எண்பதாண்டான இளைஞர்*

**வ**ருஷங்களை ஒன்று இரண்டு என்றெண்ணி வயதைக் கணக்கிட்டு மனிதரைக் கிழவரென்றும் குமரரென்றும் மதிப்பது ஒரு சரியான முறையன்று. எண்பது வயதான இளைஞருமுண்டு; இருபது வயதான கிழவருமுண்டு. இதற்கு முக்கிய காரணம் அவரவருடைய சித்த விருத்தி அல்லது மனப்போக்கேயாம்; வயதன்று. ஓய்ந்து சோம்பி உறங்கிக் கிடப்பவரே கிழவர்; ஊக்கம் பெருக உழைத்து முன் நிற்பவரே குமரர்.

வெள்ளகால் திருவாளர் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களை நெருங்கிப் பழகினவர் ஒருவரேனும் அவரை ஒரு குடுகுடு கிழவரென்று கூறத்துணியாரென்பது உறுதி. அவரது சுறுசுறுப்பைக் கண்ட எந்த இளைஞனும் அவர் முன் நாணித் தலைகுனிந்து விடுவான். ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்து முதலியாரவர்களோடு வாதப் பிரதிவாதம் செய்யத் தொடங்கினல் போதும்; அவருக்கு ஊக்கம் எப்படியோ உண்டாகிறது; விருத்தர் குமரராகி விடுகிறார்.

இப் பெரியாரைக் காணும் பொழுது புலவர் பிசிராந்தையாரை நினைக்க நேரிடுகிறது.

> **“ யாண்டு பலவாக இளமை யொடிருத்தல்**
> **யாங்காகியர் ?”**

என வினவும்படி ஆசையும் எழுகிறது.

---

* *1937*-ம் ஆண்டு வெளிவந்த வெ. ப. சுப்பிரமணிய முதலியார் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா நினைவு மலரில் இப் பாராட்டுரை வெளிவந்துள்ளது.

முதலியாரவர்கள் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்திருக்கும் தொண்டுகள் மிகவும் போற்றற் குரியனவாம். இவரது நெல்லைச் சிலேடை வெண்பா மூலமாகத்தான் நான் இவரை முதன் முதல் அறியலானேன். அந்நூலை எனக்குப் பாடம் கற்பித்த திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சாந்த லிங்கத் தம்பிரானவர்கள் நூலாசிரியரின் கல்வி யறிவொழுக்கங்களைக் குறித்துப் பாராட்டிப் பேசி யிருக்கின்றனர். முதலியாரவர்கள் இனிய எளிய நடையில் அழகிய கவிகள் எழுதும் திறமை வாய்ந்தவர். இது ஓர் உபசார மொழியன்று; உண்மை மொழியேயாம் என்பதை அவர்கள் பாடிய அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம் முதலிய நூல்கள் நன்கு வலியுறுத்தும்.

'கம்ப ராமாயண சாரம்' என்ற நூலை நம் முதலியாரவர்கள் சமீப காலத்தில் வெளியிட்டிருக்கின்றனர். அத் தமிழ்ப் பாக்கடலிலுள்ள இனிய கவிகளைத் தெரிந்தெடுப்பதற்கு,

"சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள்போல்"

தமிழ்ச்சுவை அறிந்த நம் நாட்டுத் தாதாவவர்களே பெரிதும் தகுதியுடையார் என்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

இப்பெரியாருக்கு எல்லா நலமும் பெருகி வருமாறு இறைவனை இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்.

**எண்பதாண் டான இளைஞனே! இன்னமுதின்**
**பண்பெலாங் காட்டுதமிழ்ப் பாவலனே!—நண்பனே!**
**வெள்ளகாற் செல்வனே! வேள்சுப் பிரமணிய**
**வள்ளலே! வாழ்க மகிழ்ந்து.**

# 8. வ. உ. சிதம்பரம்பிள்ளை

சுமார் இருநூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த நாம் இப்போது சுதந்திரம் பெற்றுவிட்டோம். இந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்கு நம்நாட்டு மக்கள்பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. வெள்ளையர்களுடைய கை ஓங்கி நின்ற காலத்தில் சுதந்திர இயக்கத்தை நசுக்க அவர்கள் செய்த கொடுமைகள் சொல்லுந்தரமன்று. எவ்வளவோ உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் நம்மவர்க்கு ஏற்பட்டதுண்டு. அந்தக் கொடுமையை எதிர்த்து நின்று போராடி இன்னுயிர் நீத்த ஒப்பற்ற தியாகமூர்த்திகளின் முதல் வரிசையில் இடம் பெறத் தக்கவர் நம் **வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்** என்றால் அது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

சுதந்திரப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அடக்கு முறைக்கு ஆளாகி அல்லல் அனுபவித்திருக்கிறார்கள். ஆனால், பிள்ளை அவர்கள் பட்ட கஷ்டத்தை—அவருக்கு அரசாங்கம் இழைத்த கொடுமையை—சித்திரவதையை நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும். சிறைச் சாலையில் செக்கு மாட்டினும் கேவலமாக நடத்தப்பட்டார். சிதம்பரம் பிள்ளையின் ஜீவிய சரிதத்தைப் படித்தாலே போதும்; ஒருவனுக்குச் சுதந்திர உணர்ச்சியும், வீரமும் தியாக சிந்தையும் தானாகவே ஏற்பட்டுவிடும்.

வடநாட்டிலே திலகர் பெருமான் இந்திய மக்கள் இதயத்தில் எப்படிப் பூசிக்கப்படுகிறாரோ அப்படி வ. உ. சி. யும் பூசிக்கப்பட வேண்டியவர். வ. உ. சி.யை அறியாத தமிழர் இல்லை என்று சொல்லலாம். அது போதாது. வ.உ.சி.யை

அறியாத இந்தியர்கள் இல்லை. ஏன்? அவரை அறியாத மக்களே இல்லை என்று சொல்லும் நிலைமைக்கு நாம் அவரது பெருமையை உலகுக்குப் பரப்ப வேண்டும். அப்படிச் செய்தால்தான் பிள்ளை அவர்கள் நமக்காகச் செய்த தியாகத்திற்குத் தமிழர்களாகிய நாம் சரியான கைம்மாறு செய்தவர்களாவோம். உலகத்தில் வழங்கும் பல மொழிகளிலும் அவரது, வாழ்க்கை வரலாற்றை மொழிபெயர்த்து எல்லோரும் அறியச் செய்ய வேண்டும். இதனால் அவரது வாழ்க்கையிலிருந்து மனிதன் அறிய வேண்டிய லட்சிய வாழ்வை உணரமுடியும். இதுவே அந்தத் தியாக மூர்த்திக்கு நாம் அன்புடன் அளிக்கும் காணிக்கையாகும்.

**கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி**
**உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாத்**
**தென்னாட்டு வீரர் திலகன் சிதம்பரத்தின்**
**நன்னாமம் போற்றுகவென் நா.**

**கண்ணருவி யாயொழுகக் கல்லுடைத்தும் செக்கிழுத்தும்**
**உண்ண உண வின்றி உடல்மெலிந்த—அண்ணல்**
**சிதம்பரம் கண்ட சிறைவாசம் இன்று**
**சுதந்திரம் தந்ததெனச் சொல்.**

**அஞ்சுவனே வெள்ளையரின் ஆட்சியொழிப் பேனென்று**
**வஞ்சினம் கூறிநின்ற மாவீரன்—விஞ்சுபுகழ்ச்**
**செந்தமிழ் நாட்டுத் திலகன் சிதம்பரத்தைச்**
**சிந்தையில் கொள்வோம் தினம்.**

# 9. சுதந்திரமும் நமது வாழ்க்கையும்

நாம் இப்பொழுது சுதந்திர இந்தியாவில் இருக்கிறோம். சுதந்திரத்தின் சுவையை உணரத் தொடங்கி அதிக நாள் ஆகவில்லை. இதற்குள் பலருக்கு அதிருப்தி; சுதந்திரம் சோறு போடவில்லையே என்ற ஏமாற்றம். இது பெரிய எதிர்பார்ப் பல்லவா? பசுங்கன்று பால் சுரக்க வில்லையே என்று கவலைப்படு வாருண்டோ? இன்று ஆட்சி நிலை என்னவோ மாறினது உண்மை; நம்மை நாமே ஆளுவதும் உண்மை. ஆட்சி கைக்கு வந்தவுடன் ஒரே யடியாகத் தலை கீழ் மாற்றம் வந்து விடுமா? பாலும் தேனும் வழிந்தோடுமா? பகலும் இரவும் நிலவெறிக்குமா? பருத்தி புடவையாகக் காய்க்குமா?

பின், சுதந்திரம் எதற்கு உதவியா யிருக்கிறது? உழைக்க, உழைத்துப்பயன்பெற, உழைப்புக் கேற்ற உயர்வைப்பெற, நம்மை நாமே ஆளச் சுதந்திரம் உதவியா யிருக்கிறது. நம்முள் பலர் சுதந்திரத்தின் உண்மைத் தன்மையையும் பயனையும் நன்றாக உணரவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்ல வேண்டி யிருக்கிறது.

பூர்ண சுதந்திரம் என்பது கடவுள் ஒருவருக்குத்தான் உண்டு. ஏனையோ ரெல்லாம் சில நியதிகளுக்குக் கட்டுப் பட்டவர்களே. உண்பதில், உடுப்பதில், பேசுவதில், நடப்பதில்: யாவற்றிலும் கட்டுப்பாடு நமக்கு உண்டு; வேண்டும்.

ஓர் ஊரம்பலம். அதை அவ்வூரார் யாவருக்கும் அனுபவிக்க உரிமையுண்டு; ஒரு நாள் ஒருவன் அதில் படுத்திருக்கிறான். அப்போது இன்னொருவன் அங்கே வருகிறான். வந்தவனுக்கு இடங் கொடுத்தாக வேண்டும்.

எனவே படுத்திருப்பவன் எழுந்து உட்கார வேண்டியவனாகிறான். எனது சுதந்திரம் பறிபோகிறதே என்று அவன் கூச்சல் போட்டால் முடியுமா ?

ரஸ்தாவில் நடக்க யாருக்கும் தான் உரிமையுண்டு. ஒருவன் கார் (car) ஓட்டிச் செல்கின்றான், ரஸ்தா வழியே. எதிரே வருபவனும் இவன் நேரே மோட்டார் ஓட்டி வருகின்றான். கட்டுப்பாடு இல்லாவிட்டால் இருவர் சுதந்திரமும் என்னாவது? இதற்காகத்தான் போவோரெல்லாம் ஒரே பக்கமாகப் போக வேண்டும் என்னும் நியதி எழுந்தது. இதனைச் சுதந்திரத்துக்குப் போடப்பட்ட முட்டுக்கட்டை என்று முனகுவாருண்டா? ஒவ்வொரு துறையிலும் இப்படியே நமக்குக் கட்டுப்பாடு வேண்டியிருக்கிறது. கட்டுப் பாடற்ற வாழ்க்கை பாழ்பட்ட வாழ்க்கையாகி விடும்.

சுதந்திரம் பெற்ற பிறகு நமக்குப் பொறுப்புக் கூடுதல். இப்பொழுது நம்மை நாமே ஆளுகிறோம். இவ்வெண்ணம் நம்மனைவருக்கும் வேண்டும். அதிலும் கிராம மக்களாகிய நமக்கு நன்கு வேண்டும்.

நானும் ஒரு கிராம வாசி தான் என்பதை இச்சமயத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாட்டின் முன்னேற்றம் நம் கையில் இருக்கிறது. நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவு கொடுப்பவர் நாம்; உடை கொடுப்பவர் நாம். இதனை நகர மக்கள் உணர்ந்தாலும் சரி; உணராவிட்டாலும்சரி. அதனால் நம்மை மதித்தாலும் சரி; மதிக்கா விட்டாலும் சரி, நமது தொண்டு மகத்தானது; மதிக்கத் தகுந்தது என்பதற்குச் சந்தேகமில்லை இதனை உணர்ந்து உழைப்போம்; முன்னிலும் அதிகமாக உழைப்போம்.

**ஆக்கம் வேண்டுமெனில் — நன்மை**
**அடைய வேண்டுமெனில்**
**ஊக்கம் வேண்டுமப்பா — ஓயாது**
**உழைக்க வேண்டுமப்பா!**

**நெற்றியில் வேர்வை — நித்தம்**
**நிலத்தில் வீழ்ந்திடவே**
**வற்றி வாடாது — சுதந்திரம்**
**வளர்ந்து வருமப்பா!**

## 10. காந்தியண்ணலுக்குக் கைம்மாறு

**வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவன் வானுறையும்**
**தெய்வத்தோ டொத்த திருவுடையான்-பொய்யற்ற**
**காந்திமகான் கற்பனைகள் கற்றுக் கடைப்பிடித்த**
**மாந்தரென்றும் வாழ்வர் மகிழ்ந்து.**

இந்த யுகத்திலே பிறந்த ஒரு சிறந்த புண்ணிய புருஷர் காந்திஜி. அவர் பேரறிஞர்; தீர்க்கதரிசி; சீர்திருத்தவாதி; உலக நன்மையை நாடும் உத்தமர். அஹிம்சையும் சத்தியமும் அவருக்கு இரு கண்கள். அன்பே அவருக்கு உயிர். மக்களை அடிமைத் தளையினின்று அகற்றி நல்வாழ்வு வாழச் செய்வதே அவர் வாழ்வின் குறிக்கோள்.

விஞ்ஞான வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி என்று உலகிலே பெரிதாகப் பேசப்படுகிறது. அவ்வளர்ச்சியினால் வானம் கனக மழை பொழிந்தாலும் சரி; வயல்கள் கதிருமுக்கு நெல் விளைந்தாலும் சரி; மனிதர் உள்ளம் பண்பாடு அற்றதாக இருக்குமானால் இவற்றால் ஏதும் பயனில்லை.

ஒவ்வோர் உயிரினத்துக்கும் ஒவ்வொரு வகையான குணம்தான் உண்டு. ஆனால் மனிதன் எல்லாக் குணங்களும் நிறைந்தவன். அவனிடம் பேய்க் குணமும் உண்டு; மிருக குணமும் உண்டு; அதே சமயம் தெய்வ குணமும் உண்டு. முன்னையவற்றை ஒடுக்கி மக்களுக்குரிய நல்ல பண்புகளை வளர்க்க வேண்டியதே மனிதன் அறிவு படைத்ததன் பயன். ஒரு நாட்டிலுள்ள மக்களனைவரும் நன் மக்கட்குரிய பண்புகள் வாய்க்கப்பெறாத வரையில் அந்நாடு எந்தவிதமான அரசியல் சுதந்திரம் பெற்றும்

பயனில்லை; விஞ்ஞான வளர்ச்சி அடைந்தும் பயனில்லை. இது உண்மை.

இதனை யுணர்ந்த தீர்க்கதரிசியான காந்தி மகான் பாரத மக்கள் பண்புள்ளம் வாய்க்கப் பெற்றவர்களாய்த் திகழ வேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்; உபதேச மழை பொழிந்தார்; அருந்தொண்டு புரிந்தார். இச்சேவையின் நடுவே இதே காரணத்துக்காக அவர் தம் பூதவுடலையும் போக்கினர்.

காந்திஜி நம்மைவிட்டுப் பிரிந்து ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது.* அவர் புகழ் பாரதநாடு உள்ள அளவும் அழியாது. அவர் போதித்த போதனைகள் நம் காதில் ரீங்காரம் செய்கின்றன. தம் கடன் முடித்துத் தரணிவிட்ட அண்ணலுக்கு நாம் செய்யவேண்டும் கடமையென்ன?

அவருக்கு நினைவு நிலையங்கள் கட்டுவதும், கோபுரம் எழுப்புவதும், சிலைகள் அமைப்பதுமல்ல நாம் இப்போது செய்ய வேண்டுவது. இவற்றால் நம் பணக் கொழுப்புத் தான் புலனாகுமே ஒழிய வேறல்ல. அந்த மகான் என்னென்ன போதனைகளைப் போதித்தாரோ அவற்றை நாம் கற்றுக் கடைப்பிடிக்க வேண்டும். எந்தத் தத்துவங்கள் நம் நாட்டை அடிமை வாழ்வில் இருந்து அமர வாழ்வுக்கு உயர்த்துகின்றனவோ, அவை நம் உயிர்த் தத்துவங்கள் என்று கருதவேண்டும். அவற்றின்படி என்றும் நடக்க வேண்டும்; பிறருக்கும் போதித்து நல்வழிப் படுத்த வேண்டும். இதுவே காந்தி அண்ணலுக்கு நாம் புரியும்

* *1949*-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 'நெல்லைச் செய்தி'யின் சுதந்திர மலரில் வெளிவந்தது இக்கட்டுரை.

கைம்மாறு, வழிபாடு. இதனை மறவாமல் நடத்திக்காட்டி நன்மை அடைவோமாக.

**பக்தியொடு தெய்வம் பணிந்திடுவோம் பாரதத்தாய்**
**சித்தம் களிப்படையச் செய்திடுவோம்—**
**ஒத்துழைத்துப்**
**பெற்ற சுதந்திரத்தைப் பேணிடுவோம் பேருகில்**
**நற்றவம் ஈதால் நமக்கு.**

# 11. எனது லட்சியம் *

**நிருபர் :** நாகர் கோவிலுக்கு வடக்கே இரண்டு மைலில் இருக்கிறது இந்தப் புத்தேரிக் கிராமம். நாகர் கோவி லில் இருந்து வரும்பொழுது பாதையின் இரண்டு பக் கமும் பசுமையான வயல்கள். புத்தேரிக்கு அருகில் பாதையின் மேற்புறம் பெரிய ஏரி—குளம். இதற்கு அப்பால் மலைகள். மலையும், குளமும், வயல்களுமாக உள்ள இந்த அழகிய புத்தேரிக் கிராமத்தில் குளத்தில் மலரும் மலரைப்போல் கவிதை மலர்கிறது. இதோ கவிமணி அவர்களைச் சந்திக்கிறோம். நமஸ்காரம்......

**கவிமணி :** வாருங்கள், வாருங்கள் நமஸ்காரம்......

**நி :** தங்களுடைய உடம்பு அசௌகரியத்தைப் பொருட்படுத்தாமல் இந்தச் சந்திப்புக்கு இணங்கிய தற்கு முதலில் நன்றி செலுத்துகிறேன்......

**க :** தங்களைப் பார்த்ததும் எனக்கு க்ஷீணமெல் லாம் அடியோடு பறந்துவிட்டது......

**நி :** மிக்க மகிழ்ச்சி. புத்தேரி என்ற இந்தக் கிராமத்தின் பெயர் மனதைக் கவர்கிறது. இந்தப் பெயரின் கார ணம் என்ன ?......

**க :** யோகீச்சுவரர் என்ற ஒரு பெரியாருடைய சமாதி இங்கே இருக்கிறது. அந்தச் சமாதியின்மீது ஒரு பெரிய புத்து வளர்ந்திருப்பதை வழியில் பார்த்திருப் பீர்களே......

---

* **1951-ம் வருடம் ஏப்ரில் மாதம் கவிமணியவர்கள் திருச்சி ரேடியோ நிருபருக்கு அளித்த பேட்டி.**

நி : ஆமாம்...பார்த்தேன்...

க : அந்தப் புத்து இருக்கிற காரணத்தாலும் அதன் அருகில் ஏரி இருப்பதாலும் புத்தேரி என்று பெயர் வந்தது. "புத்தர் சேரி" "புத்தர் தேரி" என்ற பதங்கள் மாறி, புத்தேரி என்று வந்ததாகச் சிலர் சொல்கிறார்கள்......

நி : தாங்கள் பிறந்த ஊரே புத்தேரிதான் என்று நினைக்கிறேன்......

க : இல்லை, இது என் மனைவியின் ஊர். நான் பிறந்த ஊர் தேரூர். சுசீந்திரத்திற்கு ஒரு மைல் வடக்கே உள்ளது.

நி : ஓஹோ அப்படியா. தாங்கள் முதன் முதல் பாடிய கவிதை எது?......

க : சிறு பிராயத்தில் பலவிதமான கவிதைகள் பாடியதுண்டு. ஆனால் ஒரு சிறு நூல் என்று சொல்லத் தக்க விதத்தில் பாடியது தேரூர் அழகம்மன் விருத்தம்.

நி : அப்பொழுது தங்களுடைய வயது என்ன இருக்குமோ?......

க : பதினெட்டுக்குமேல் இருபதுக்கு அகமாய் இருக்கலாம்.

நி : தமிழ் இலக்கண இலக்கியங்களை விசேஷமாகத் தாங்கள் யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்?

க : தேரூரின் சமீபம் வாணன்திட்டு என்ற ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அதில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஒரு மடம் உண்டு. அந்த மடத்தில் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க ஸ்வாமிகள் என்ற ஒரு பெரி

யார் இருந்தார். அவர் தமிழ் நூல்களை முறையாகக் கற்றுத் தெரிந்தவர். அவரிடத்தில்தான் நான் தமிழ் கற்றேன். அவருடைய தூண்டுதலின் பேரிலே தான் அழகம்மன் விருத்தம் பாடினேன்.

நி : அந்த நூலிலிருந்து தங்கள் வாய் மொழியாக ஒரு விருத்தம் கேட்கலாமா?

க : ஆஹா, சொல்கிறேனே......

**ஆற்றுப் பெருக்கையொத் தழிகின்ற செல்வத்தை**
**அடைவதில் விருப்பு மில்லேன்**
**ஆண்டியாய் வேண்டிப் புசித்துண்டு நாடோறும்**
**அலைவதில் வெறுப்பு மில்லேன்;**

**காற்றுப் பெயர்ந்திடிற் காயமோ சூத்திரக்**
**கயிறற்ற பாவை, அதனால்**
**காரியம் சிறிதேனுமுளதோ? உன் இருபதக்**
**கஞ்சமே தஞ்ச மென்று**

**போற்றிப் பெரும்பேறு பெறுதற்கென் உள்ளம் எப்**
**போதுந் தவிக்குது, அம்மா!**
**பொங்கிடுங் குரவையிட்டெங்குமோ ரொலி செய்து**
**பொலிவாக மள்ளரெல்லாம்,**

**சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற**
**செய்யகஞ் சூழும் ஊராம்**
**தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே!**
**தேவியழ கம்மை உமையே!**

நி : மிகவும் நன்றி. இந்த நூலுக்குப் பிறகு தாங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் பாடல்கள் அவ்வப்போது எழுதிவந்தீர்கள். அப்படித்தானே?

க : ஆமாம். ஆனால் அவை பெரும்பாலும் புனைபெயரில் தோன்றின. பிறகுதான் "மலரும் மாலையும்" என்ற புஸ்தக ரூபத்தில் வெளிப்படையாக என் பெயரில் வந்தன.

நி: உண்மையான கவிதையின் பண்பு பற்றித் தங்களுடைய கருத்தை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

க: கவிதை, கடவுள், திருவிதாங்கூர் முழு ரூபாய்* இந்த மூன்றையும் இல்லை என்று சொல்ல முடியாது. திருவிதாங்கூர் முழு ரூபாய் என்னும் நாணயம் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. ஆனால் அப்படி ஒரு நாணயம் இருப்பதாக எண்ணித்தான் வரவு செலவுக் கணக்குக்களை எழுதி வந்தார்கள். நாணயத்தைக் கண்முன் காட்டு என்றால் எப்படிக் காட்டுவது. காட்ட இயலுமா? கடவுள், கவிதை இரண்டும் அப்படித்தான்.

நி: என்றாலும் தங்கள் அனுபவத்தைக் கொண்டு கவிதையின் முக்கிய பண்பு, இன்னதென்று விளக்கக் கூடுமல்லவா......

க: கவிதை, இன்னதென்பதைப் பற்றி நான் ஒரு சிறு கவிதை எழுதியிருக்கிறேன்.

**உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்**
**உருவெடுப்பது கவிதை;**

**தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை**
**தெரிந் துரைப்பது கவிதை**

என்று வருகிறது. இதிலிருந்து இன்பம், உண்மை, தெளிவு இந்த மூன்றும் ஒரு கவியில் இருக்க வேண்டும் என்பது விளங்குகிற தல்லவா? ஒரு பெண் பத்தாயிர ரூபாய் நகை போட்டிருக்கிறாள். புடவையோ ஆயிரம் ரூபாய் இருக்கும். ஆனால் அழகு தான்

---

* திருவிதாங்கூரில் மட்டும் தனிப்பட வழங்கிய நாணயச் செலாவணி இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது.

இல்லை. இன்னொரு பெண் சாதாரண புடவை. காதில் ஒரு குச்சு. கூந்தலில் ஒரே ஒரு ரோஜா. ஆனால் முகத்தில் நல்லதேஜஸ். முதலாவது பெண் பணக்காரி என்று தெரிகிறது. இரண்டாவது பெண் முகத்தில் அழகு இருக்கிறது. பணம் இல்லை. ஆனால் இருவரில் லக்ஷ்மி யார்? தெய்வத் தன்மை யாரிடத்தில் இருக்கிறது? கவிஞர்களுக்குள் பல நூல்களைக் கற்றறிந்த பெரும் புலவர்கள் இருக்கிறார்கள். பாடல்களிலும் அந்தப் புலமையைக் காட்டலாம். ஆனால் கவிதா சக்தி மட்டுந்தான் காண முடியாது. வெறும் அடைமொழிகளையும், அணிகளையும் அடுக்கிவைத்திருக்கிற செய்யுட்களெல்லாம் ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பிணங்களேயாம். உயிருள்ள கவிகள் அல்ல. உண்மைக்கவிதையின் உயிர் நாடி அதன் ஒலியிலேயே பேசும்.

நி: இன்றையத் தமிழின் புதிய இலக்கிய வளர்ச்சிபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

க: தமிழுக்கு ஒரு நல்ல காலம். இளைஞர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் தமிழ் வளர்ச்சிக்காக உழைத்து வருகிறார்கள். கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எல்லாம் பல பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வெளி வருகின்றன. "கண்டவர்கள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு எழுதத் தொடங்கி விடுகிறார்கள்; இது நல்லதல்ல" என்று சிலர் கண்டிப்பதுண்டு. ஆனால் இப்படிக் கண்டிப்பதில் அர்த்தமில்லை. இதற்குத் தடை உத்திரவு அவசியமா? சாத்தியமா? இவைகளில் வலுவுள்ளது தான் நிற்கும், மற்றவை மறைந்து விடும் என்ற உண்மையை மறந்து விடுகிறார்கள். நாடகத்தைப் பற்றி இதோடு ஒரு வார்த்தை. "நாடகத் தமிழ், நாடகத் தமிழ்"

என்று சொல்லிப் பெருமை பாராட்டுகிறோமே தவிர பழைய காலத்தில் இருந்த ஒரு நாடகத்தையாவது எடுத்துக்காட்ட முடியாது. பாட்டன் கப்பலோட்டி யாக இருந்திருக்கலாம். இப்பொழுது தரித்திரமா யிருக்கிறோம். நம்முடைய கடமை என்ன? இந்தத் தரித்திர நிலைமையை நீக்கி ஏராளமாகப் பொருள் சம்பாதிக்க வேண்டுவது தான். நல்ல நாடகங்கள் நமக்கு மிக்க அவசியம். இப்பொழுது சிலர் எழுத முன் வந்திருக்கிறார்கள். அம்முயற்சியைப் பாராட்ட வேண்டும். இசைத் தமிழைப் பற்றியும் சில சொல்ல விரும்புகிறேன். சிலர், சாகித்தியகர்த்தாக்களும் ராக தாளம் அமைப்பவரும் ஒருவராகவே இருக்க வேண்டு மென்று நினைக்கிறார்கள். அப்படி இருப்பது நல்லது தான். ஆனால் எல்லா இசையாசிரியர்களும கீர்த்தனை ஆசிரியர்களாகவும், கீர்த்தனை ஆசிரியர்கள் இசையாசிரியர்களாகவும், இருக்கிறார்களா? இருக்க முடியுமா? பரிபாடல் என்னும் பழந்தமிழ் இலக்கியத் தைப் பார்த்தரல் இயற்றமிழ் ஆசிரியரும் இசையை அமைத்தவரும் வேறு வேறானவராய் இருப்பதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் இசையா சிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமையோன் அமைதி முதலியவற்றைப் பார்க்கிறோம். ஆதலால் இருவரும் ஒருவராகத்தான் இருக்க வேண்டு மென்ப தில்லை, எனத்தெரிகிறது.

நி: தமிழ் வளர்ச்சிக்குத் தாங்கள் கூறக்கூடிய வேறு யோசனைகள் ஏதாவது உண்டா?

க: தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கலா சாலைகளில் தமிழின் மூலமே எல்லாப் பாடங்களும் கற்பிக்க வேண்டும். காரியாலயங்கள் அனைத்திலும் கடிதப் போக்கு வரத்துக்குத் தமிழையே உபயோகப்

படுத்த வேண்டும், அப்பொழுது தான் அவசியமும் ஆர்வமும் உண்டாகும். பல புஸ்தகங்கள் வெளி வரும். மொழி வளரும். இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளிலுள்ளதுபோல் பல துறைகளி லுள்ள நூல்கள் தமிழ் மொழியில் நமக்கு வேண்டும். மொழி பெயர்ப்பு முக்கியமானது. அநேக நூல்களை வேறு பாஷைகளிலிருந்து மொழி பெயர்க்க வேண் டும். முதல் நூல்களைத் தமிழ் மொழியிலேயே எழுத வேண்டும் என்பது சொல்லவே வேண்டியதில்லை. கற்றவர்கள் தாங்கள் எழுதும் முதல் நூல்களைத் தாய் மொழியிலேயே எழுத வேண்டியது அவசியம்.

**நி:** சொல்லாக்கம் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர் கள்?

**க:** விஞ்ஞானப் பதங்கள், தமிழில் ஏற்கனவே கிடைப் பதைத் தவிர அந்தந்த பாஷைச் சொற்களை அப்படி அப்படியே உபயோகித்துக்கொள்வதில் ஆக்ஷேபணை யில்லை.

**நி:** மொழி வளர்வதற்குவிமர்சனக்கலையும்வளரவேண்டும் என்று சொல்வதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக் கிறீர்கள்?

**க:** விமர்சனம் அவசியந்தான், சிலர் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவரா யிருக்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பயிற்சி அவர்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. வேறு சிலர் தமிழில் தேர்ச்சி யுடையவராய் இருக்கி றார்கள். ஆங்கிலப் படிப்பு அவர்களுக்கு இல்லை. இரண்டிலும் தேர்ச்சி உடையவர்கள் மிகச் சிலரே. இந்த நிலையில் தகுதியான விமர்சனம் வெளி வருவது எளிதான காரியமா?

**நி:** இலக்கியத்தைத் தவிர தாங்கள் விரும்பிக் கற்கும் விஷயங்கள் எவை என்று தெரிய விரும்புகிறேன்.

க: *கவிகளைத் தவிர நான் விரும்பிக் கற்கும் விஷயம் தென்னிந்தியக் கல் வெட்டுக்களும், தென்னிந்தியச் சரித்திரமும். தமிழோடு இணைந்திருப்பதால், இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளும் எழுதி யிருக்கிறேன். தமிழுக்கு இத்தகைய ஆராய்ச்சி மிக்க அவசியம் என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். அது போலவே, தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சிக்கும் தமிழ் மொழியில் நல்ல பயிற்சி அவசியம் என்பதில் யாதும் ஐயமில்லை.*

**செந்தில் முருகா! திருமால் மருகா! என்**
**சிந்தை குடிகொண்ட தேசிகா!-வந்தினிய**
**பைந்தமிழ்ச் சோலையிலே பாடும் கவிக்குயில்கள்**
**சந்ததம் வாழவரம் தா.**

நி: *தங்கள் பரிவுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.*

வணக்கம்.

# iii. சாசன ஆராய்ச்சி

## 1. சாசன ஆராய்ச்சி

பழங்கால வரலாறுகளை நாமறியத் துணைநிற்பன இலக்கியங்கள் சாசனங்கள் என்பவையாகும். இவற்றுள் இலக்கியங்கள் தொடர்ச்சியான வரலாற்றை நமக்கு உதவவில்லை. சாசனங்கள் ஏற்பட்டது சற்றுப் பிற்பட்டுத்தான். இச்சாசன காலம் முதற்கொண்டே ஒரு நாட்டின் ஆட்சிப் பரம்பரையை நம்மால் அறிய முடிகிறது. இவைகளில்லா விட்டால் பழமையைப் பொறுத்த அளவில் நாம் குருடர்களாக அன்றோ இருப்போம்? ஆகவே சாசனங்களை, இருண்டு கிடந்த பழங்கால வரலாற்றை விளக்கிக் காட்டும் ஒளி விளக்குக்கள் என்று சொன்னால் குற்றமாகாது.

நாம் இங்கே சாசனம் என்று குறிப்பிடுவது கல்லெழுத்து, செப்பேடு, ஓலைப்பிரமாணம் முதலியவற்றையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இச்சாசனங்களைப் படித்தறிந்து, அக்கால வரலாறுகளையும் வழக்கங்களையும் அறிந்து கொள்வதென்பது எளிதல்ல. இதற்கு முதலாவது, அக்கால வரிவடிவங்களான வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாண்மை, கிரந்தலிபி போன்றவற்றில் நல்ல பயிற்சியும் பாண்டித்தியமும் வேண்டும். இரண்டாவது, தமிழிலக்கியத்தில் தேர்ச்சியும், சுற்றுப்புற மொழிகளில் ஓரளவு அறிவும் வேண்டும். மூன்றாவது, ஒருகாலத்தைப்பற்றி ஆராயப் புகும்போது அக்காலப் பழக்கவழக்கங்கள் இவையாயிருக்கலாம் என்றுணர்தற்கேற்ற பரந்து பட்ட அறிவு அமைந்திருத்தல் வேண்டும். நான்காவது,

நாடோடிப் பேச்சு வழக்கைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வளவுக்கும் மேலாகத் தன்னபிமானம் என்ற மாசு நீங்கி, உண்மை காண வேண்டுமென்ற ஆசை சுரக்கின்ற மனநிலை அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவும் பொருந்தப் பெற்றோரே சாசன ஆராய்ச்சிக்குத் தகுதியுடையோராவர்.

இன்னோரும் சாசனங்களைப் படித்தறிவதிலும், பொருளுணர்வதிலும் தவறி விடுதல் கூடும். 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பார்களே, அது சாசன ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு நூறு உண்மை. அதனால் ஒருவர் தவறியதை இன்னொருவர் எடுத்துக் காட்டி உண்மையைப் புலப்படுத்த வேண்டுவது மிக்க அவசியம். திருவிதாங்கூர்ச் சாசன ஆராய்ச்சி இலாகாவில் தலைமை வகித்து வந்த திரு. கோபிநாதராயர் ஒரு சிறந்த அறிஞர்; ஆராய்ச்சி வல்லுநர்; அரிய காரியங்களைச் சாதித்தவர். எனினும், அவர் தவறிய இடங்கள் இல்லாமலில்லை. அவற்றுள் ஒன்றைக் கீழே எடுத்துக் காட்டுகின்றேன். முதன்முதல் அதற்கு இடமாக இருந்த சாசனம் தரப்படுகின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்ரமாதித்ய வரகுணர்க்கு யாண்டு எட்டு பங்குனித் திங்கள் திருநந்திக்கரை இருந்து அடிகள்..................(ர்தெ)

2. **ங்க நாடு கிழவன் மகள் ஆய்குலமாதேவியா யின முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த இவ ளுக்குக் குடியாக அட்டிக் குடுத்த பூ(மிவ)**

3. ள்ளுவ நாட்டு மேற்கோட்டுப் பழங்கோப் பற்று செங்கணா வந்தடி பல விதை பதினைங்கல வித் துப் பாடும் சாண்டன் தடி பலவிதை(நா)

4. ற்கல வித்துப் பாடும் குதாளங்கோடு தடிபல விதை ஐங்கல வித்துப் பாடும் இதனொடு செல்வன புல்லேல் படுவன தடிபல (விதை)

5. முக்கல வித்துப் பாடும் பெருமண்ணும் இடைமண்ணுந் தடிபல விதை ஐங்கல வித்துப் பாடும் ஏற்றித் தடிபலவிதை ப(தி)

6. ழிக் காலால் முப்பத்திரு கல வித்துப் பாடும் இவற்றின் றலைக்கரையும் புலையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க இ(றயி)

7. லிகோநீக்கி செம்மருதர் குடியாக பார்த்திப சேகரபுரத்து பெருமக்கள் காத்தூட்டுவதாக அட்டிக் குடுத்தது இத(னு)க்கு ரக்ஷாபே(ாக)

8. மாக இவை யிற்றுளேய் பெருமக்களுக்கு அட்டிக் குடுத்த பூமி குதாளங் கோட்டில் விதை நாற்கலம்........................

இதில் குறிப்பிடப்படும் வரகுணன் கி. பி. 9-ம் நூற்றாண்டில் வேணாட்டை ஆண்டு வந்த ஆய் அரசனாவான். ஆய் வேந்தருள்ளே கோக்கருநந்தடக்கன் என்பவன் பிரசித்தி பெற்றவன். ஏனென்றால் முன்சிறையின்* பக்கத்திலுள்ள பார்த்திப சேகரபுரம் கோவிலையும், அங்கிருந்த வேத பாடசாலையையும் நிறுவியவன் இவனே. அக்கோவில் பற்றி யெழுந்த செப்பேட்டினால் இது தெரியவருகின்றது. மேலே காட்டிய வரகுணதேவன் சாசனத்திலும் பார்த்திப சேகரபுரம் குறிப்பிடப்படுகின்றமை காணலாம். அன்றியும் இச்சாசனத்து இரண்டாவது வரியில் 'தெங்கநாடு கிழவன் மகள் ஆய் குல மாதேவியாயின

---

*** இது தென் திருவிதாங்கூரில் விளவங்கோட்டுத் தாலுகாவில் உள்ள ஓரூர்.**

முருகஞ் சேந்தி' என வருவதுபோல, கோக்கரு நந்தடக்கன் சாசனத்திலும் 'தெங்கநாடு கிழவன் ஆயின சாத்த முருகன் ஆணத்தி'* என்னும் தொடர் வந்துள்ளது. இதனால் தெங்கநாடு கிழவனான முருகன் என்பவன் காலத்தில் வாழ்ந்தவர்கள் இவ்விரண்டு அரசர்களும் என்று துணியலாம். ஆகவே இவ்விருவரும் தந்தையும் மகனுமாயிருக்க வேண்டும் என்று பலரும் கருதுகிறார்கள். பார்த்திப சேகரபுரம் கோவிலைப் பற்றிக் குறிப்பிடுகின்ற வரகுணன், அக்கோவிலை நிறுவின கோக்கரு நந்தடக்கனுக்குப் பிந்தியவன் என்பது மட்டும்தான் இதனால் கொள்ளக்கூடுமே ஒழிய, மகன் தந்தை முறைமையைத் துணிய இவ்வாதாரம்போதுமென்று தோன்றவில்லை.

மேலே குறிப்பிட்ட சாசனம் இவனது ஆட்சி வருடம் எட்டாவது பங்குனி மாதத்தில் இவன் திருநந்திக் கரையில் இருக்கும்பொழுது கொடுக்கப் பட்டதாகும். இது ஒரு செப்பேடு. திருவனந்தபுரம் ஹுஸூர் ஆபீஸில் இருந்தமையால் 'ஹுஸூர் ஆபீஸ் செப்பேடு' எனப்படும். திருவிதாங்கூர் சாசன வரிசை முதல் தொகுதி இரண்டாவது எண்ணில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது இது.

சாசனத்தின் பொதுப் பொருள்:—'தெங்கநாடு கிழவன் மகள் ஆய்குல மாதேவியாயின முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த அவளுக்கு விட்டுக் கொடுத்த 32 கலவித்துப்பாடு கொண்ட நிலத்தைப் பார்த்திப சேகர புரத்துப் பெருமக்கள் மேற்பார்வை செய்து கொள்வார்களாக' என்பது.

இதில் 'திருவடி சார்த்த' என்றால் என்ன என்பது எளிதில் விள்ள முடியாத ஒரு கேள்வி. இதற்குக் கூறப்

* Travancore Archaeological Series Vol. I. P. 9.

படும் விடையைப் பொறுத்தே முருகஞ் சேந்திக்கும் வரகுண தேவர்க்குமுள்ள தொடர்பும், சாசனத்தின் நோக்கமும் தெளிவுபடும். திரு. கோபிநாதராயரவர்கள் 'திருவடி சார்த்தல்' என்பதற்குத் 'திருமணம் செய்து கொடுத்தல்' எனக் கருத்துக் கொண்டு, 'வரகுணனுக்கு முருகஞ் சேந்தி மணமுடிக்கப்பட்டாள்' எனக் கூறுகின்றார். இது பெரும் பிழையான பொருளாகும். அதற்குரிய காரணங்களை ஒவ்வொன்றாகக் கூறுகின்றேன்.

முதலாவது, செப்பேட்டின் அமைப்பையும் சிதைந்த எழுத்துக்களையும் சற்றுக் கவனிக்க வேண்டும். பட்டயத்தின் வலது ஓரம்சிறிது சிதைந்து போனமையால் இரண்டு எழுத்துக்கள் வீதம் அடிவரையும் மாய்ந்து விட்டன. மாய்ந்த எழுத்துக்கள் இவையாகத்தான் இருக்க வேண்டுமென்பதை ஏனைய பல சாசனங்களின் ஆதாரங் கொண்டு ஊகித்து அடைப்புக் குறிக்குள் இட்டிருக்கின்றேன்.

முதல் வரியில் 'அடிகள்' என்பதன்பின் செப்பேட்டில் 'கோவிக்ர மாதித்ய வரகுண' என்னும் சொற்கள் காணப்படவும் யாது காரணத்தாலோ ராயரவர்கள் அவற்றைப் பதிப்பிக்காமல் விட்டு விட்டார்கள். இது தவிர, அவ்வரியில் இரண்டு எழுத்துக்கள் சிதைந்திருக்க வேண்டும். அவ்வளவுக்குத்தான் இடமுண்டு. ஆகவே சிதைந்த எழுத்துக்கள் 'ர்தே' என்பவையா யிருக்கலாம். அன்றி, 'ர்க்குதே' என இத்தனை எழுத்துக்களுக்கு இடமில்லை. இதனை ஏனைய வரிகளை நோக்கியும் உணர முடியும். அப்படியாயின் 'கோவிக்ரமாதித்ய வரகுணதேவர், தெங்கநாடு......முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த' என்று தொடர்வது அறியப்படும், 'மகள்' என்னும் சொல்லாலும் 'ஆய்குல மாதேவி'* என்னும் தொடராலும் முருகஞ்

*மாதேவியார் என்னும் வழக்குண்மை 'சந்திரகுல மாதேவியார்'—(South Indian Inscriptions : Vol. IV. P. 193) என வருவதனால் அறிக.

சேந்தி ஒரு பெண்மணி யெனவும், அவள் ஆய்குலத்தைச் சேர்ந்தவள் எனவும் அறிகின்ரும்.

இரண்டாவது 'திருவடி சார்த்தல்' என்ருல் பொருளென்ன? 'வரகுண தேவர் திருவடி சார்த்த' என்பது அவனுக்கு மணம் செய்து கொடுப்பதைக் குறிப்பிடுமா? ஒரு நாளுமில்லை. பின், உண்மைப் பொருள் என்ன என்பது சிந்திக்கத் தக்கது. வைணவர்கள் 'திருவடி சேர்தல்' என்னும் தொடருக்குத் 'திருமாலின் திருவடிகளில் சேர்தல் (இவ்வுலக வாழ்வை நீத்தல்)' எனப்பொருள் கொள்வார்கள்.

"**கூரத்தாழ்வார்** நங்கையார் **திருவடி சார்ந்தவாறே** பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டது கூடுகிறவளவில் தம்முடைய புத்ரரான **ஆழ்வானுடைய** ஸ்ரீவைஷ்ணவத்தைக் கண்டு இதினுடைய எடுப்பிருந்தமை கண்டோமுக்கு **ஆழ்வானுக்கு** அந்ய சேஷத்வம் வரவொண்ணுது என்று ஆவர்த்திகை தவிர்ந்தாரிறே. அன்றிக்கே ஸாபிப்ராயமாக வல்லார்க்குச் சொல்லவேண்டாதிறே"—என மேற்கோள் காண்க.

இதில் 'கூரத்தாழ்வார்' என வந்தது தந்தையையும், 'ஆழ்வான்' என வந்தது மகனையும் குறிக்கும். வைணவ பரிபாஷையில் திருவடி சார்தல் என்ருல் மரண மடைந்து திருமாலின் திருவடியைச் சார்தல் என்றே பொருள். சைவர்களும் உயிர் நீத்தலைச் 'சிவபதம் சேர்தல்' என்னும் தொடரால் குறிக்கின்றமை காண்கிரும்.

செப்பேட்டில் **சார்தல்** என இல்லாமல் **சார்த்தல்** என வருகின்றது. முருகஞ் சேந்தி உயிரோடு இருக்கின்ருள்; மேலும் அவளது நல்வாழ்வுக்கு வேண்டிய நிலங்களும் விட்டுக் கொடுக்கப்படுகின்றன. அப்படி யிருக்கத் திருவடி சார்த்துவது எப்படியென்று ஐயுறலாம். மண வாழ்க்

கையை வெறுத்துக் கன்னிகையராகவே யிருந்து கடவுள் வழிபாட்டில் தம் காலத்தைக் கழிக்க விருமபிய பெண்கள், தம்மைக் கடவுள் திருவடிகளில் சமர்ப்பணம் செய்துவிடு கின்ற வழக்கம் பண்டை நாளில் இருந்துவந்தது. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் காட்டமுடியும். இவ்விதமே ஆய்குலத்தைச் சேர்ந்தவளும், அரசன் உறவினளுமான முருகஞ் சேந்தி என்பாள் கடவுள் வழிபாட்டில் தன்னை ஈடு படுத்தத் துணிந்தபோது அரசன் அவளைக் கடவுள் திரு வடிகளில் காணிக்கை வைத்து, அவள் செலவுக்காக நில மும் விட்டுக் கொடுத்திருக்க வேண்டும். இது தான் பொருத்தமாகப் படுகின்றது.

மூன்ருவது, அரசனே முருகஞ் சேந்தியை மணம் செய்து கொள்ளுகின்ருனென்று வைத்துக்கொண்டாலும் தான் மணக்கப் போகும் பெண்ணுக்கு நிலம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியமென்ன? அதுவும் 32 கல வித்துப்பாடு நிலமா கொடுப்பான்? கொடுத்த நிலத்தை யும் பார்த்திப சேகர புரத்துப் பெருமக்கள் காத்து ஊட்டு வதாக விடக் காரண மென்ன? என்பன போன்ற பல கேள்விகள் கிளைக்கும். இவற்றுக்கு விடையிறுத்தல் எளிதல்ல. முன்னைய பொருளுக்காளுல் கோவிலுக்கு உரிமைப்படுத்திய பெண்ணின் பொருட்டுக் கொடுக்கப் பட்ட நிலங்களை ஓர் அறநிலையத்தாரின் பாதுகாப்பில் விடுவது பொருத்தமாகும் என்னும் சமாதானம் உண்டு.

இக்காரணங்களால் விக்கிரமாதித்திய வரகுண தேவர்க்கு முருகஞ் சேந்தியைத் திருமணம் செய்விக்க அம்மன்னனுல் நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுவ தல்ல இச்சாசனம் என்பதும், வரகுணன் தன் குலத்தில் பிறந்த முருகஞ் சேந்தி என்னும் பெண்மணியை அவள் விருப்பப்படி கடவுளுக்குக் காணிக்கை வைத்தபோது அவள் செலவுக்காக நிலம் விட்டு, அதனைப் பார்த்திப சேகரபுரத்து அறநிலையத்தாரிடம் மேற்பார்வைக்கு ஏற் பாடு செய்ததனையே இதுகுறிக்குமென்பதும் தெள்ளத் தெளிய உணரலாம்.

# 2. தெலுங்கு நாட்டுச் சாசனம்

தமிழ் வளம் சுருங்கிய இடைக் காலத்திலுங்கூடத் தமிழர்கள் இந்தியாவின் பல்வேறிடங்கவிலும் பரவிச் செழித்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் மட்டுமல்ல ; வெளிநாடான ஸயாம் முதலிய இடங்களிலும் தமிழர்கள் அளித்த சாசனங்கள், தமிழ் லிபியில் பொறிக்கப்பட்ட சாசனங்கள், கிடைக்கின்றன. சென்னையினின்று ஏறக்குறைய ஐந்நூறு கல் தொலைவிலிருக்கும் தூய தெலுங்கு நாட்டுப் பகுதியான விசாகப்பட்டணத்திலுள்ள ஒரு தமிழ்ச் சாசனம் பற்றிய செய்திகளை இப்போது பார்க்கலாம்.

இதிலுள்ள ஒரு விசேஷம் என்னவென்றால் தெலுங்கு நாட்டிலுள்ள இத்தமிழ்ச் சாசனத்தைத் தோற்றுவித்தவன், இன்று மலையாள நாடாகத் திகழும் மலபாரிலுள்ள ஒருவனுவன். சங்கரச் செட்டி என்பது அவன் பெயர். பந்தளாயினிக் கொல்லம் இவன் ஊர். மேலைக் கடற்கரையிலே கொல்லம் என்ற பெயரோடு இரண்டு ஊர்கள் இருக்கின்றன. பந்தளாயினிக் கொல்லம் வட மலபாரில் இருக்கின்றது. இது கொயிலாண்டி (Quilandi) என இப்பொழுது வழங்குகிறது. ஏனையது திருவிதாங்கூரின் நடுப் பகுதியில் இருக்கும் கொல்லம். இது சாசனங்களில் குரக்கேணிக் கொல்லம் என வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். இதனை ஆங்கிலேயர் கொயிலோன் (Quilon) எனத் திரித்து வழங்குகின்றனர்.

பந்தளாயினிக் கொல்லம் என்றும் குரக்கேணிக் கொல்லம் என்றும் இருவிதமாக வழங்கப்படுவதன் கார

ணம் என்னவென்பது தெரியவில்லை. ஒரே பெயருடைய இரண்டு ஊர்கள் இருந்தால் ஒவ்வொன்றுக்கும் தனித் தனிச் சிறப்பான அடைமொழிகள் கொடுப்பது வழக்கம். இவ்வடைமொழிகள் பெரும்பாலும் அடுத்திருக்கும் ஊர்ப் பெயர்களாக இருப்பதுண்டு. இரவிபுதூர் என்ற பெய ரோடு நாஞ்சில் நாட்டில் இரண்டு ஊர்கள் இருக்கின்றன. இவற்றைப் பிரித்தறிவதற்கு அடுத்திருக்கும் ஊர்களான கடுக்கரை, மருங்கூர் என்பவற்றோடு சார்த்திக் 'கடுக்கரை இரவிபுதூர்', 'மருங்கூர் இரவிபுதூர்' என்று குறிப்பிட்டு ரைக்கும் வழக்கத்தைப் பார்க்கிறோம். இதுபோலவே பந் தளாயினி, குரக்கேணி என்பவை இவ்விரு கொல்லங்களை யும் அடுத்துப் பண்டை நாளில் இருந்த ஊர்களாயிருந்து, இவற்றின் அடை மொழிக்குப் பயன்பட் டிருக்கலாம் என்று ஊகிக்க இடமிருக்கிறது. சாசனத்தில் குறிப்பிட் டிருக்கும் சங்கரச் செட்டி ஒரு தமிழன். இல்லாவிட்டால் தெலுங்கு நாட்டில் சென்று தமிழ் மொழியில் தமிழ் வரி வடிவில் சாசனம் பொறித்திருக்க மாட்டான். விசாகப் பட்டணத்துக்குக் குலோத்துங்க சோழ பட்டணம் என்று ஒரு பெயருண்டு. அங்குள்ள கருமாணிக்க ஆழ்வார் கோவிலில் சனிவார மண்டபம் ஒன்று கட்டிவைத்தான் இவன். சிவன் கோவிலுக்குத் திங்கட்கிழமை போல, விஷ்ணு கோவிலுக்குச் சனிக்கிழமை விசேஷ நாள். அந் நாளில் நடத்த வேண்டிய சிறப்புக்கு இடமான மண்டப மாக இருக்க வேண்டும் இது. இதுபற்றிய சாசனத்தைக் கீழே தருகிறோம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு ஆயிரத்

2, தொருநூற்றெழுபத் திரண்டாவதில் வீரநார

3. சிங்க தேவ கிம் யாண்டு 15 ஆவதில் பனகலா யின (?)

4. கொல்லத்து கண்டன் சங்கரைய செட்டியார் தர்மம்
5. விசாகபட்டணமான குலோத்துங்க சோழ பட்டணத்தில்க்கு
6. ......ற்கு சனிவார மண்டபம் கட்டி விச்சார் சங்கர செட்டியார்

சகம் ஆயிரத்தொரு நூற்றெழுபத்திரண்டு என்பது கி. பி. 1250. இங்கே குறிப்பிடப்படும் அரசன் 13-ம் நூற்றுண்டில் ஒரிஸாவை ஆண்டு வந்த கங்க வமிசத்தைச் சேர்ந்த முதல் வீர நரசிம்மனுக இருக்கவேண்டும். இவன் ஆட்சி வருஷம் 15-ல் இச்சாசனம் எழுதுகிறது. * 'பனகலாயின' என்றிருப்பதைப் 'பந்தளாயினி' என்று படிக்க வேண்டும். இதைப் பதிப்பித்த விசாகப்பட்டணம் திரு. எஸ். பி. எல். நரசிம்மசுவாமி அவர்கள், தம்மூரில் தமிழ் அச்சுக் கிடையாமையால் நாகர லிபியில் பதிப்பித்துள்ளார். அவர் வாசித்தறிந்ததில் உள்ள தவறு கொஞ்சம், நாகர லிபிக்கு இயல்பாக அமைந்த குறை கொஞ்சம், இவ்வளவுங் கூடி இதனைப் 'பனகலாயின' என்று படிக்குமாறு ஆக்கிவிட்டன. இச்சொல்லில் மூன்றுவது எழுத்து 'த' ஆக இருக்க வேண்டும். தகரத்தின் கீழ்வரை சற்று மாய்ந்திருக்கலாம். அதனுல் அதனைக் 'க' எனக் கருதி விட்டார் பதிப்பாசிரியர். அவ்வெழுத்து 'த' ஆனுல் அதற்குமுன் எழுத்து 'ங'தான் என்பதற்குச் சந்தேகம் இராது. ஒற்றெழுத்தும் அகரமேறிய உயிர் மெய்யும் இடவேற்றுமையால் உணரப் படுவதன்றி, பெரும்பாலும் வரிவடிவில் வேற்றுமை காட்டுதல் நாகர லிபிக்கு இல்லை, ஆகவே 'ங' என்பது 'ன' என்று வாசிக்குமாறு உள்ளது.

* Inscriptions of the Madras Presidency, Vol. 3. p. 1674, by V. Rangacharya.

வடமொழியில் லகர ளகர பேதமில்லை என்பதும் யாவரும் அறிந்த ஒன்று. இறுதியிலுள்ள 'ளி'யின் இகர அடையாளத்தைக் கவனிக்காமல் 'ன' என்று எழுதியிருக்க வேண்டும். இப்படியாக இச்சொல் வாசித்தறியப்பட்டு, நாகர லிபிக்குப் போய்த் திரும்பத் தமிழுக்கு வரும்போது இத்துணை மாற்றங்கள் அடைந்து உருக் குலைந்துவிட்டது. இச் சாசனத்தைச் சார்ந்திருக்கும் மற்றொரு கல்லில் உள்ள எழுத்துக்கள் மாய்ந்திருக்கும் தன்மையைப் பார்த்தால் நாம் இதில் வியப்படைய மாட்டோம். இச் சொல் ஒழிய ஏனைய சொற்களில் தடுமாற்றமில்லையே என்று கேட்கலாம். ஆம்; அவை பெரும்பாலும் பயின்று வரும் சொற்கள். ஆகவே சிதைந்திருப்பினும் அவற்றை ஊகித்தறிவது எளிது.

இது அன்னதன்று. ஆதலால் இப்பிழை நேர்ந்திருக்க வேண்டும். ஆயினும் அச் சொல் கொல்லத்துக்கு அடைமொழியான 'பந்தளாயினி' ஆகும் என்பதை ஐயமறத் தெரிந்துகொள்வோம்.

இச் சாசனத்தால் பதின்மூன்றும் நூற்றாண்டில் மலபாரில் தமிழர்கள் குடியிருந்தார்கள் என்பதும், அவர்களில் சிலர் விசாகபட்டணம் வரையிலும் சென்று தங்கினார்கள் என்பதும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இச்சாசனம் இப்பொழுது விசாகப்பட்டணத்துப் பரவஸ்து ரங்காசாரியார் அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் இருக்கிறது. இவ்வூரின் தென்பாலுள்ள துர்க்க மலைச்சாரலில் ஓர் எழுத்துக் கல் காணப்பட்டது. அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபொழுது வேறு நான்கு எழுத்துக் கற்கள் காணப்பட்டன. ஆராய்ந்ததில் ஒரு கல்லில் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு சாசனங்களும், ஏனைய நான்கு கற்களில் நான்கு சாசனங்களும் பொறிக்

கப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது. அவற்றுள் மூன்று தெலுங்கு; இரண்டு தமிழ்; ஆருவது சாசனம் இன்ன மொழியில் எழுதப் பட்டிருக்கிற தென்பது கூட அறிய முடியாதபடி மாய்ந்து போயிற்று. இன்னொரு தமிழ்ச் சாசனமும் பெரும்பாலும் மாய்ந்தே காணப்படுகிறது. இவ்விவரங்களெல்லாம் காட்டி, சாசனங்களேயும் பெயர்த் தெழுதி, சில ஆண்டுகளுக்கு முன்னுல் திரு எஸ். பி. எல். நரசிங்கசுவாமி அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு சிறு புத்தகம் வெளியிட்டார்கள். நான் அப்புத்தகத்தின் படி ஒன்றை அரிதின் முயன்று பெற்றேன். அதன் துணை கொண்டு இக் குறிப்பு இங்கே எழுதப்படுகிறது.

# 3. புலைப்பேடி

சாதி வேறுபாடும் தீண்டாமையும் இடைக் காலத்தில் தமிழ் நாடு எங்கும் தலை விரித்தாடின என்றாலும் அவை தம் கொடுமையைத் திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில்போல வேறெங்குமே காட்டியதில்லை என்னலாம். அந் நாட்டில் புலையர் என்னும் வகுப்பார், மேலின மக்களாய நம்பூதிரி, நாயர் என்பாரின் கண்ணெதிரில் படுவது கூடக் குற்றமாயிருந்தது. அவர்கள் தமக்கென வகுக்கப்பட்ட ஒதுக்குப் புறங்கள் வழியாகத்தான் போக்குவரவு வைத்துக் கொள்ளலாம். எதிரே மேலினத்தார் வந்துவிடக் கூடும் என்ற ஐயமிருந்தால் தம் வருகையைப் புலையர்கள் உரத்த குரலில் கூவித் தெரிவித்துக்கொண்டே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் மேலினத்தாரைத் தீண்டலுக்குட் படுத்தின பாவமும் பழியும் வந்து சேரும். சுருங்கச் சொன்னால் விலங்கு, புழு, பூச்சிகளுக்குள்ள சுதந்திரம் கூட இல்லாது, இவற்றினும் தாழ்ந்த ஒரு தனிப் பிறவியாய்ப் புலையர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்றுதான் கூற வேண்டும்.

ஆனால் இந்த நிரந்தர நரக வாழ்க்கையிலும் விசேடமான ஒருவகைச் சுதந்திரம் இவர்களுக்கு இருந்துவந்தது. ஆண்டுக்கொருமுறை இவர்கள் அனுபவிக்கின்ற இந்தச் சுதந்திரத்தைக் கேட்டால் எவரும் திகைத்துப் போவர். ஆண்டின் இறுதி மாதமான கற்கடக (ஆடி) மாதம்தான் அந்தக் காலம். அம்மாதத்தில் சூரிய அஸ்தமனத்துக்குப் பின் வெளிப்பட்டுலவும் பெண்களை விரும்பினால் புலையர்

கள் உரிமையாக்கிக் கொள்ளலாம். அவர்கள் மீது ஒரு சிறு கல்லை எடுத்துத் தீண்டினுற் போதும். அவன் பின்னுல் அவள் சென்றுவிட வேண்டியது. இங்ஙனம் உரிமைப்படுத்துவது புலையர்களின் பிறப்புரிமை.

ஆனுல், இதற்குச் சில விதி விலக்குக்களும் இருந்தன. ஒரு பெண் ஓர் ஆண் குழந்தையைக் கையில் பிடித்துச் சென்ருல் அவள் இதற்கு விலக்காகிருள். புலையனுல் கல்லிட்டுத் தீண்டப்பட்டவள் கருத்தரித்தவளா யிருந்தால் கருவுயிர்க்கு மளவும் காத்திருக்க வேண்டும். ஆண் மகவு பிறந்தால் போக வேண்டாம். பெண் பிறந்தால் அவனுக்கு உரிமையாக வேண்டும். இப்படி ஒரு வழக்கம். இது நடைபெறப் போகும் காலத்தை முன்னரே முரசறைந்து தெரிவிப்பர். மன மில்லாதவர் வெளியி லிறங்க மாட்டார்கள். வெளிப்படுபவர் இதற்குத் துணிந்தவர்களென்பது பொருள்.

இவ்வழக்கம் யாரால் ஏற்படுத்தப்பட்ட தென்றும் எதற்காக ஏற்படுத்தப்பட்ட தென்றும் தெரிய வில்லை. நாஞ்சில் நாட்டின் மேல்பாலிடங்களில்தான் இவ்வழக்கம் நடைபெற்று வந்திருக்கிறது. ஆனுல், நாஞ்சில் நாட்டிலும் இது தெரியப்பட்டிருந்தது என்பது வயது முதிர்ந்த பெண்கள் பேசும் பேச்சுக்களால் தெரிகிருேம். வெளியில் இறங்க அஞ்சும் சிறு பெண்களைப் பார்த்து "வெளியே செல்ல என்ன பயம்? புல பிடிகாலமா இது?" என்பார்கள். மலையாளத்தில் புலைப் பேடி என்பதையே இவர் புலபிடி என்கின்றனர். பேடி=அச்சம்; புலையர்களா லுண்டாகும் அச்சம் என்பது அதற்குப் பொருள். புலபிடி=புலையர் பிடிக்க வருவது.

திருவிதாங்கூர் அரசாங்கத்தில் சாசனப் பரிசோதகரா யிருந்த **A. S.** இராமநாத ஐயர் அவர்கள், டாக்டர் குண்

டர்ட் என்பார் இத்தொடர்பற்றி கூறும் பொருளை* எடுத்துக் காட்டுகிறார்.

கேரளத்தில் காளி பூஜை (**Kali-worship in Kerala**) என்னும் நூல் எழுதிய டாக்டர் அச்சுத மேனனும் தமது நூல் 43-ம் பக்கத்தில் இது பற்றிக் கூறுகின்றார்.

இது ஒரு அநாரிக வழக்க மென்றும், அடியோடு நிறுத்தப்பட வேண்டிய தென்றும் பிற்கால மக்கள் கருதியிருக்க வேண்டும். கொல்லம் 871-ல் திருவிதாங்கோட்டையாண்ட மன்னரான வீரகேரள வர்மர் இதனை நிறுத்துவதற்கான ஆணை பிறப்பித்தார். இன்று பத்மனாபபுரம் என்றழைக்கப்படும் ஊரான கற்குளத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்டது, அத்திருவெழுத்து விளம்பரம். அதனைக் கல்லில் பொறித்துத் திருவிதாங்கோடு என்ற ஊரின் அண்மையிலுள்ள நடைபாதையில் நட்டிருக்கிறார்கள். அது வருமாறு:—

**முதல் பக்கம்**

கன்னி வியாழம்
நின்ற கொல்ல
ம் ௮௱௭௰௧ ௵
தை மீ ௨௰௫வ
சனியாட் செ
யும் சதயவும்
பூரபக்கிழத்து
பிறதிபதவும் சிங்
ஙக் கரணவும் ப
ரிகம் நாம யொக
வும் இந் நாளா

ல் வீர கெரளவ
றம் சிறவமூத்த
தம்பிரான் கல்க்
குளத்து எழுந்த
ருளி இருந்நருளி
கல்ப்பித்தபடி
க்கு ரண்டுவக
மகாசனவும் கூ
டி கல்பித்த மொ
ளியாவத [1*]தொ
வாளைக்கு மெக்

கு கண்ணெற்றி
க்கு கிழக்கு கட
லினும் மலைக்கு
ம்அகத்து அகப்
பட்டநாட்டில்பிலப்
பெடியும் மண்ணா
ப் பெடியும் இல்ல
[எ]ந்ந[தம்] தம்புர
ான் திருவுள்ளம்

---

*Dr. Gundert has explained Pulappedi-Yullakalam as the 'month of Karkadaka' during which high-caste women may lose caste if a slave happen to throw a stone at them after sunset.

**2-ம் பக்கம்**

பற்றி கல்ப்
பிச்சப
டிக்கு ரண்
டுவக மாச
னங் கூடி
கல்ப்பிச்சு
கல்லுவெ
ட்டி நாட்டி
ய கல்பன
மறுத்து பி
லப்பெடியும்
மண்ணுப்
பெடியும் உ
ண்டாம் க
ாலத்து பில
யரி டெயும்
மண்ணரி
டெயும் வகி
ற்றிப் பிள்ள
ஆதியா ெ
தாண்டி ெ
வட்டு மாறு
ம் இந்த க
ல்பன மறு
த்து பிலப்
பெடி எந்
ந வகை ெ
பண்ணு
ம் பிள்ள

**3-ம் பக்கம்**

க்கு உண்ட
ரயால்—
ப் பெண்ணு
ம் பிள்ள
குளிச்சு
கர ஏறிக்
கொண்—
டால் தெ
ாழ மல்ல
எந்நும் க
ல்ப்பிச்சி
த [11*] இவண்
ணம் புல்
லும் பூமி
யும் கல்லு
ம் காவெ—
ரியும் ஒள்
ள காலத்
து நடக்கு
மாறும் க—
ல்ப்பிச்—
சித [11*] இப்படி
[க்கு

**4-ம் பக்கம்**

திருவயித்தும்
[நாட்டி] குண்டுவ—
த்திக் கரிக்கு-
ம் திருவுள்ளம்ப—
பற்றி கல்பிச்சி—
த[1*]திருவிதாங்ெ
காட்டு கெண்ட—
ப்படை வீட்டில்
வடக்கு வாசல்
கல்வெட்டி நாட்
டியித[1*]இந்தக்
கல்லுக்குள் ெ
ளாடு ஒரு கால
ம் யாதாம் ஒரு
வர்...வெறு—
ச் செய்தார் அ-
வர்கள் கெங்கை-
கக் கரையில் காரா
ம் பசுவை கொ
ன்ற தொசத்
த்தில் பொவா
ராகவும்[11*]*

---

* Travancore Archeological Series, Vol. VII PP 27, 28.

இதில் வரும் இரண்டுவகை மகாஜனங்கள் மேல் வகுப்பாரும் கீழ்வகுப்பாருமா யிருக்கலாமோ என்னவோ? தோவாளை என்பது நாஞ்சில் நாட்டிலுள்ள ஓரூர். கண்ணெற்றி கொல்லத்தி லிருந்து பதினறு கல்லுக்கப்பாலுள்ள ஒரு சிற்றூர். அயித்து-அயித்தம் (தீண்டாமை) என்னும் சொல்லாயிருக்க வேண்டும். அடுத்த அடிக்குப் பொருள் விளங்கவில்லை.

இக்கல் வெட்டினல் புலைப்பேடி, மண்ணார் பேடி என்ற இருவகை வழக்கங்களும் தம் நாட்டகத்து இது முதல் இருத்தலாகா தென்றும், யாரேனும் மீறிக் கைக்கொள்வதாயிருந்தால் அவர்களை மட்டுமல்ல, அவர்களின் பெண்டு பிள்ளைகளை — வயிற்றுப்பிள்ளை முதலாகத் தோண்டியெடுத்து வெட்டி வீழ்த்த வேண்டு மென்றும், தீண்டப்பட்ட பெண் குளித்துக் கரையேறித் தீட்டைப் போக்கிக் கொள்ளலா மென்றும் ஆணை பிறப்பித்துள்ளமை விளங்கும். இந்நாட்டி லிருந்தது போல் தீண்டாமையும் மூடப் பழக்க வழக்கங்களும் வேறு நாடுகளில் இருக்கவில்லை தான். ஆனல், அவை ஒழிக்கப்பட வேண்டும் என்ற தேவை ஏற்பட்ட காலங்களில் தம் திருக்கை யெழுத்துக்களால் நாட்டைப்பற்றி யிருந்த கறையைக் கழுவிப் பொன்றாப் புகழ் தேடிக்கொண்ட வீர மன்னர்களும் இந்நாட்டிற் போல வேறெந்த நாட்டிலும் இருக்கவில்லை. முற்போக்குத் துறைகளி லெல்லாம் முதலிடம் இவர்களுக்குத் தான். கோவில்களில் தேவதாசி ஒழிப்பு, உயிர்ப்பலி நிறுத்தல், தீண்டாதார்க்கு ஆலயநுழைவளித்தல் முதலியவை இதற்குத் தகுந்த சான்றுகள்.

நிற்க, நாஞ்சில் நாட்டில் மேற்கூறிய தீய வழக்கம் இருந்ததில்லை யென்றாலும் கேட்டறியப் பட்டிருந்த காரணத்தால் மண்ணார் எனப்படும் புறத்து வண்ணாரைப்பற்

றிய அச்சம் சிறிது இருந்து வந்தது. அச்சத்தை உண்டு பண்ணும் உயிரினங்கள் மறைந்து வாழ்வதுபோல இவர்களும் மறைந்தே வாழ்ந்து வந்தார்கள். பகல் வேளைகளில் மேல் வகுப்பார் கண்ணில் இவர்கள் படுவதேயில்லை. ஆயினும் இவர்களில் சிலருக்கு ஒருவகைப் படித்தரம் இருந்து வந்தது. அறுவடையின் முடிவில் இராக்காலத்தில்—நடு யாமத்தில் இவர்கள் உடுக்கை கொட்டிப்பாடி வருவர். இப்பாட்டு ஏர்க்கள வாழ்த்தாக இருக்கும். இராப்பாடிகள் எனப்படும் இவர்களின் பாட்டோசை கேட்டு விழித்து சுளகில் படிநெல்லுடனே வேப்பிலை மஞ்சள் கரித்துண்டு முதலியன இட்டு ஓசைப்படாமல்கதவைத்திறந்து புறத்தே வைத்துத் தாளிட்டுக் கொள்வார்கள் பெண்கள். இராப்பாடியின் கண்ணில் விழிக்கலாகா தென்பது அவர் கொள்கை. ஆண்களை விடவும் பெண்கள் தாம் இதில் கண்டிப்போ டிருப்பவர். இது மலையாள நாட்டில் சுழன்று வீசிய மண்ணர் பேடிப் புயலின் ஓய்ந்த அலையோசையா யிருக்கலா மென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது.

# 4. சாசனங்களும் விநோத வியாக்கியானங்களும்

இருண்டு கிடக்கும் பண்டைக்கால வரலாறுகளைத் துலங்க வைக்கும் தீபங்களா யிருப்பவை சாசனங்கள் என் பதற்கு ஐயம் இல்லை. பழக்க வழக்கங்கள், பண்பாடு, சொற்கள் பொருளேற்று நிற்கும் நிலை முதலிய பலவும் சாசனங்களால் விளங்கக்கூடியனவாம். அவற்றை அறிந்து கொள்ள வேண்டு மென்ற விருப்பத்தால் அத்துறையில் இறங்கியவர்கள், நாளடைவில் தம்மை மறந்த நிலையில் ஒருவகைப் புத்தின்பம் துய்ப்போராகி விடுவர். சாசன ஆராய்ச்சி அவ்வளவுக்கு இன்பம் தருவதெனினும் அதனைப் படிப்பதும் உணர்வதும் நேர் எதிராக அந்த அளவுக்குத் துன்பம் தருவனவாம். எத்துணைப் பழக்க முடையோரையும் ஏமாற்றிவிட வல்லவை சாசனங்கள். வாசித்து அறிவதிலும் பொருள் கொள்வதிலும் எத் தனையோ பதிப்பாசிரியர்கள் வழி தவறிப் போயிருக்கிறார் கள்.

இதற்காக அவர்களுடைய அறிவில் களங்கம் காண் பது நேர்மையாகாது. என்றாலும் தவறு தவறுதானே? இந்த அரிய வேலையில் ஈடுபட்டு உழைத்த அன்னார்மீது நாம் மதிப்புக் குறைவு காட்டாமல் இருக்கலாம்; வேண்டு மானால் அநுதாபம் காட்டலாம். அவ்வளவு தான் செய்ய லாமே ஒழிய அவர் போட்ட தப்பிதங்களையும் தாங்கிக் கொள்ள முடியுமா? அவற்றைக் கண்டறிந்து ஒதுக்கி, திருந்திய பதிப்பு வெளிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும். பதிப்பாசிரியர்கள் செய்திருக்கும்

விநோத வியாக்கியானங்களுள் மாதிரிக்குச் சிலவற்றை இங்கே காட்டுகின்றேன்.

I. தென்னிந்திய சாசன வரிசையுள், "பூமாலை மிடைந்து பொன்மாலை..." என்று தொடங்கும் சாசனத்தில்[1] '**ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி**' என ஒரு தொடர் வருகின்றது. ஐம்படைப் பருவம் என்பதற்கு, 'மன்மதன் காதல் எழுப்புகின்ற பருவம்' எனக் கொள்கின்றார் பதிப்பாசிரியர்.[2]

இங்ஙனம் 'நல்ல கட்டிளமைப் பருவம்' எனப்பொருள் கொள்வதை அத் தொடர் ஏற்குமா? அதில் பொருட்சிறப்பு உண்டா என்பவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மை என்ன? ஐம்படைப் பருவம் என்பது ஐம்படைத் தாலி பூட்டுகின்ற குழவிப் பருவத்தைக் குறிப்பிடுவதாகும்.[3]

காத்தற் கடவுளான திருமாலின் படைக்கலங்களாகிய சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு என்னும் ஐம்படைகள் அமையச்செய்யப்பட்ட தாலியை, அக்கடவுள் மகனைக் காப்பாளுக என்று மகப்பிறந்த பத்தாநாள் அதற்கு அணியும் வழக்கம் பண்டை நாளில் உள்ளது. அத்தகைய குழவிப் பருவத்திலேயே வெம்படை தாங்கினன் வேந்தன்

---

1. South Indian Inscriptions, Vol. II, Part III, pp. 310-11.

2. At the time of love (i.e., in his youth) (he) grasped the cruel weapon. (S. I. I. Vol. II, Part III, P. 311.)

ஐம்படை is synonymous with ஐங்கணை which is a translation of the Sanskrit பஞ்சபாண. (S. I. I. Vol. II, Part III, P. 311)

3. See Tamil Lexion.

என அவன் வீரமிகுதியைச் சிறப்பிக்க இத்தொடர் வந்ததாகக் கொள்வதே பொருத்தமும் கவிநயமும் உடையதாம்.

**II.** இன்னொன்று, நாஞ்சில் நாட்டு நாகர் கோவிலை அடுத்துள்ள கரியமாணிக்க விண்ணகராழ்வார் கோவில் சாசனத்தில் உள்ளது. சாசனம் வருமாறு:—

*1.* ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௬௱அ௰௫ ஆவணி மீ அபர பக்கத்து திறையொதெசியும் திங்கள் கிழமையும் பெற்ற பூசத்து நாள் செய்த தானப் பிறமாணம் ஆவிது இடலாய்க் குடியான இராசநாராயணச்

2. சதுர்வெதிமங்கலத்து நயினார் கரிய மாணிக்க விண்ணகர் எம்பெருமான் சீபண்டாரத்துக்கு செம்பிநாட்டுத் தத்தை பட்டினத்து பட்டாரியரில் அரங்கன் பெருமானென் தானப் பிறமாணஞ் செய்து குடுத்த பரி—

*3.* சாவிது இன்நயினார் பூசைக்கு நாள் ஒன்றுக்கு அமுதுபடி இரு நாழியும் நடத்தித் திருமாலை யிரணையும் கட்டக் கற்பித்து இக்கோவிலில் சீவயிட்டினவரில் கூமூர் நாராயணன் **பறவைக்காசுக்கு** பிறசாதச் செலவி

4. ரு நாழியும் கற்பித்து நடந்து போகிற வகைக்கு

..........................................................................

*8.* ப் **பறவைக்காசு** பற்றிக்கொண்டு இவ்வகைப்படி நடத்திப் போதும்படி கற்பித்து ஆசந்திரதாரவற் சந்திப் பிறவெசமே நடக்க கற்பித்து கல்லும் வெட்டிக் குடுத்தென் இப்படிக்கு அரங்கன் பெருமாள் எழுத்து*.

இதில் 'பறவைக்காசு' என்னும் தொடர் இரண்டு இடங்களில் வருகின்றது. இதனை ஒரு நாணயமென்றே

---

* **Travancore Archaeological Series, Vol. VI, P. 45.**

கருதிவிட்டார் பதிப்பாசிரியர். அதன் மதிப்பு என்னவென்றும் அவருக்குத் தெரியவில்லையாம்.*

இந்தத் தவருன கொள்கை காரணமாக முந்தியதற்கு 'ஒரு பறவைக்காசுக்கு இரு நாழி வீதம்' என்றும், பிந்தியதற்கு, 'பறவைக் காசு பற்றிக் கொண்டு நிபந்தம் முட்டாமல் நடத்தி வருமாறு விதிக்கப் பட்டுள்ளது' என்றும் பொருள் விளக்கம் செய்கின்ருர்.

இவர் கூற்றுச் சரியா? உண்மை என்னவென்று சற்றுச் சிந்திக்க வேண்டும். அரங்கன் பெருமாள் என்பவன், நயினுர் பூசைக்கு இரு நாழி அமுதுபடியும் பிரசாதச் செலவு இரு நாழியும் கற்பத்து நடந்து வரும் வகைக்கு வஸ்து விடுகிருன். பிரசாதச் செலவு இரு நாழி பறவைக் காசுக்குக் கெடுத்தான்' என்பதிலிருந்து அத்தொடர் நாணயத்தை யன்றி, ஓர் ஆளின் பெயரைக் குறிப்பிடுகின்றதெனை உணரலாமல்லவா? ஆம்; அத்தொடர் 'பறவைக்காசு' அல்ல; **'பறவைக்கரசு'** ஆக இருக்க வேண்டும். வடமொழியில் இப்பெயர் 'பக்ஷிராஜன்' எனப்படும். இவ்விருவகைப் பெயர்களும் மனிதர் பெயர்களாக அமைந்து வழங்கப் பெறுவதை இன்றும் காணலாம். 'நாராயணன் பறவைக்கரசு' என்பது ஒருவனது தந்தை பெயரோடு தொடர்ந்து வரும் அவன் இயற்பெயர் என்பதை உணராத காரணத்தால் உண்டான வியாக்கியானம் எவ்வளவு விநோதமாகிவிட்டது!

III. மூன்ருவது, திருவிதாங்கூர்ச் சாசன வரிசையில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் இன்னொரு சாசனம்.

---

* "A coin called Paravaik kasu is mentioned, but its value is not known." (Travancore Archaeological Series, Vol. VI P. 44. Note)

'ஸ்வஸ்தி ஸ்ரீ தொண்டை நாடு **பாவின** சோழன் பல் யானைக் கோக்கண்டனாயின ராஜ கேசரி வர்மன்[1]' என்று தொடங்குகின்றது அது. முதல் வரிக்கு, 'தொண்டை நாடு பாவின'[2] என்றே யாதோர் இயைபுமின்றிப் பொருள் கொள்கின்றார் பதிப்பாசிரியர். 'பாவின' என்னும் சொல் தவறான தென்பதும் '**பரவின**' என்றே இருக்க வேண்டு மென்பதும் இங்கே அறியத்தக்கனவாம். தென்னிந்திய சாசன வரிசைத் தொகுதி III, பாகம் 3-ன் 221-வது பக்கத்து அடிக் குறிப்பு எண் 3 இதனை வலியுறுத்தும். 'பரவின' என்றிருக்க வேண்டுமென்று அங்கே குறிப்பிடப் படுகின்றது. இதன்படி திருத்திக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததல்லவா?

IV. நான்காவது, இதுவும் திருவிதாங்கூர்ச் சாசன வரிசையில் பதிப்பிக்கப்பட் டிருப்பதுதான். நாஞ்சில் நாட்டை அடுத்த கற்குளம் தாலுகாவில் தலைக்குளம் என்ற பழமையான ஊரை அடுத்திருக்கும் திருநயினார் குறிச்சியிலுள்ள கறைக்கண்டேசுவரம் கோயிலில் பொறிக் கப்பட்டிருக்கும் சாசனம். கொல்லம் 882 ஆவணி 13-ம் நாள் கொடுக்கப்பட்டது இது. இதன்கண் அமைந்துள்ள கருத்து வேறுபாட்டுக்குக் காரணமான பகுதி கீழே வருவது.

2. "இன்னாளால் இராசராச தென்னாட்டுக் குறு நாட்டுக் கடிகை பட்டணமுடைய நாயனார் கறைக்கண்டீசு வரமுடைய நாய

3. னாற்கு பெரும்பற்றப் புலியூர் சிவனுக்கினி[யார்] [கடிகை] மகாதேவர் திருக்கோவில்ச் சன்னதி சொபன

1. T. A. S. Vol. II, P. 75.

2. 'Tondai-Nadu pavina Rajakesarivarman' என்பது அவர் பதிப்பித்தது.

**மண்டபமுசித்து கலசமு [மாடி] மண்டபத்தில் திருவடிச் சொதிக்கு எழுந்தருளிவிச்சு.''**

இறுதியிலுள்ள தொடர் 'திருவடிச்சோதி' எனப் படிக்குமாறு அமைந்துள்ளது. அது படிப்போரை 'இறைவன் திருவடியாகிய சோதிக்கு எழுந்தருளல்' எனப் பொருள் கொள்ளத் தூண்டும். அது எவ்வளவு பிழையான பொருள் என்பதைச் சாசனத்தை ஊன்றி உணர்வார் தெரிவர். அப்படியாயின், அத் தொடர் எவ்வாறிருக்க வேண்டும் என்பது கேள்வி. 'திருவடிச் சோதி' என்றில்லாமல் **'திருவாடிச்சோதி'** என்றிருக்க வேண்டும். கோவில் சந்நிதி முன் மண்டப மொன்று கட்டி இறைவர்க்குக் கலச்மாட்டி, திருவாடிச் சோதிக்கு எருந்தருளுவித்துச் சிறப்புச் செய்ததையும், மேல் நடந்து வர வேண்டும் முறைகளையும் குறிப்பிடுகின்றது சாசனம். இன்றும் ஆடி மாதத்துச் சுவாதி நாளில் அங்கே சிறப்புக்கள் நடந்தேறி வருவதை நேரில் காணலாம். இவ்வுண்மை சாசனப் பதிப்புரையில் தெளிவு படுத்தப்படாத காரணத்தால் எவ்வளவு தவருன கருத்துக் கொள்ள இடமாகின்றது, பாருங்கள்.

**V.** ஐந்தாவதாகச் சொல்லப்பட வேண்டியது 'மாறன் சடையன் காலத்துக் கல்வெட்டி'லுள்ள ஒரு சொல். சாசனப்பகுதி வருமாறு:—

ஸ்ரீ கோமாறஞ் சடையற்கி
ருபத்தேழா மாண்டு சேரமா
ஞர்படை விழுஞத்து புறத்து
**விட்டுழக்கக் கரைக்கோட்டை** அழி
ப்பான் வர பெருமானடிகளுள
ன்புமிக்குள இரணகீர்த்தியு
ம் அமர்க்கழியும் உள்வீ

ட்டி ஞெற்றைச் சேவகர் கோட்
டை அழியாமை காத்தெறி
ந்து.......................................................
...............................................................
குத்திப்பட்டான்...........''*

ஒரு வீரக்கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துப் பகுதி இது. அவ்வீரக்கல், சேரன் படையானது கோட்டையை அழிக்கவர, பாண்டியனுடைய படைவீரனை இரணகீர்த்தி என்பான் பலரையும் கொன்று இறுதியில் தாதம் பெருந்திணை என்பவனுடைய அம்பு பட்டு இறந்த தற்காக நடப்பட்டதாகும். இதனுல் இக்கல்லை இரணகீர்த்தி வீரக்கல் என்று சொல்லலாம். இது நாஞ்சில் நாட்டின் கிழக்கு எல்லையில், திருநெல்வேலிப் பக்கங்களில் நின்று வருவாருக்குத் தலைவாசலா யிருக்கும் ஆரல்வாய் மொழிக் கோட்டைக் கரையிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன் கண்டெடுக்கப்பட்டது. போரில் வீரச்செயல் காட்டி வீரன் ஒருவன் இறந்தால் அவன் பட்டு வீழ்ந்த இடத்திலே கல் நட்டுச் சிறப்புச் செய்வதுதான் பண்டைக்கால வழக்கம். கல் இங்கே காணப்படுவதனுலும், அதில் கரைக் கோட்டை என்னும் இடம் குறிப்பிடப்படுவதனுலும், அக் கரைக்கோட்டை இன்று 'கோட்டைக்கரை' என வழங்கப் பெறுவதும் ஆரல்வாய் மொழிக் கணவாயின் வடக்கும் தெற்குமாகப் பிற்காலத்தில் டிலனுயிஞல் கட்டப்பட்டு இன்று அழிந்து கிடப்பதுமான இடத்தையே குறிப்பிடு மெனக் கொள்வது தவருகாது. இன்றும் அவ்விடம் 'கோட்டைக்கரை' என அழைக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர்.

இதற்கு மாருய்க் கரைக்கோட்டை யென்னுஞ் சொல் திருவிதாங்கூர்ச் சரித்திரப் புத்தகங்களில் வேறுவிதமாக

* T. A.S. Vol. I, P. 158.

ஏறிக் கிடக்கின்றது. சேரமன்னர்களுக்குச் சிறப்புக் கொடுக்க வேண்டுமென்ற பேரார்வமும் தன்னபிமானமும் முன் நிறுத்தி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட திருவிதாங்கூர்ச் சரித்திரம் 'கரைகோட்டை'யைக் காரைக்குடி யாக்கியிருக்கிறது! அதைப் பின்பற்றி அரசாங்கத்தாரால் மாணவர் பொருட்டு எழுதப்பட்ட பாடப்புத்தகமும் இப்படியே திருப்பிப் பாடுகின்றது.

"வேணாட்டரசனுடைய போர் வீரர்கள் பாண்டியர் சேனையைக் 'காரைக்குடி' வரையிலும் ஓட்டினார்கள்."*

இது மாணவர்களை எவ்வளவு விபரீத அபிப்பிராயத்தில் கொண்டுவிடும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. இத்தகைய பிழைகள் எத்தனையோ பல. அவை அறிந்து ஒதுக்கப்பட வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். சாசன இலாகா இத்துறையில் முனைந்து ஈடுபட வேண்டுமென்பது என் ஆசை.

---

* திருவிதாங்கூர்ச் சரித்திரம், பக். 24.

# 5. திரிபுவனதேவி சாசனம்

"கொல்லமாண்டு 337 ஐ ஒட்டி மாறவர்மன் ஸ்ரீ வல்லபன் என்ற பாண்டிய மன்னன் கேரள வேந்தனை ஸ்ரீ வீர உதயமார்த்தாண்ட வர்மனுடைய மகளை மணஞ் செய்தான். இப்பாண்டியனுக்குத் திரிபுவன சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயருண்டு. அதனால் அவன் மனைவி திரிபுவன தேவி என அழைக்கப்பட்டாள். சேரபாண்டிய வம்சங்களை இணைத்து நின்ற திரிபுவனதேவிக்குக் கொல்லம் 341-ல் ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் ஜடாவர்மன் குலசேகரப் பெருமாள் என்பது. இவனுக்குப் பின்னர் இளையபெருமாள் என்னும் பெயருடைய வேறோர் மைந்தன் பிறந்தான். இளைய மகன் பிறந்ததும் திரிபுவன தேவி இவ்வுலக வாழ்வை நீத்தாள். இளையபெருமாள் தகுந்த பருவ மடைந்து தன் தாய் பேரால் மண்டப மொன்று கட்டி அதில் அவள் உருவச் சிலையையும் நிறுவினன்."

இச்செய்தி, திரு. நாகமையா அவர்களால் எழுதப்பட்ட திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவல் முதல் வரிசை பக்கம் 253, 254-ல் காணப்படுவதன் சுருக்கம். பலவாண்டுகளுக்கு முன் இதனை நான் படித்தபோது இதற்கு ஆதாரமான கல்வெட்டு எங்கே இருக்கிறது என்று ஆராய்ந்தேன். திருவிதாங்கூர்ச் சாசன வரிசைகளையும், தென்னிந்தியச் சாசன வரிசைகளையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். ஏமாற்றம் உண்டானதைத் தவிர, கருதிய பயன் கிட்டவில்லை. இங்ஙன மிருக்கும்போது ஒரு நாள் கோட்டாறு தமிழறிஞர் சுவாமிநாத ஆச்சாரி சில காகிதங்களுடன் வந்தார். 'இவை ஒரு மனிதரால் தூர எறிவதற்

கென வைக்கப்பட்டிருந்தவை; தங்களுக்கு ஒருக்கால் பயன்படலாமென்று கருதி வாங்கிக்கொண்டு வந்தேன்' என்று கூறி என் கையில் தந்தார்.

கட்டை யவிழ்த்துக் காகிதங்களைத் திருப்பிப் பார்த்தேன். அவற்றுள் ஒன்று என் கண்ணையும் மனத்தையும் கவர்ந்தது. கூர்ந்து பார்த்தேன். ஆம்; அது தான், நான் வெகு நாட்களாகத் தேடித் தேடி அலைந்த அதே சாசனம்; அகப்பட்டு விட்டது. நிதிபெற்ற வறிஞனுக்கு உண்டாவது போன்ற ஒரே மகிழ்ச்சி. அவருக்கு வந்தனங் கூறினேன்.

திருவிதாங்கூர்ச் சாசன பரிசோதனை இலாகாவில் உதவியாளரா யிருந்த பண்டித கணேச பிள்ளையவர்களின் கைப்பட எழுதப்பட்ட சாசனம் அது. நடுவில் ஓர் பெண்ணின் அழகிய உருவமும் மேலும் கீழுமாகப் பதினன்கு வரிகளில் எழுத்துக்களும் தீட்டப்பட்டிருந்தன. சாசனம் முழுமையாக இருக்கவில்லை. ஆயினும் என்ன? காரிருளைப் போக்கக் கைவிளக்கேனும் கிடைத்ததல்லவா?

இக்கல்லெழுத்து, சுசீந்திரத்தை யடுத்திருக்கும் இரவிபுதூர் காடவன் குளத்தைச்சார்ந்த நாவலடிப்பற்றில் நிற்கும் ஒரு கல்லிலிருந்து பெயர்த் தெழுதப்பட்டதாகப் பிள்ளையவர்கள் கொடுத்திருந்த குறிப்பு, மிக்கஉபயோகமா யிருந்தது. உடனே, தேரூர் வித்வான் எஸ். உமைதாணு பிள்ளையை அனுப்பிப் பார்த்துவரச் செய்தேன். குளத்தின் புறமடை யொன்றில் அக்கல் பொருத்தப் பெற்றிருப்பதாக அவர் கண்டறிந்து சொன்னர். அதனை நன்குகத் துருவிப் பார்த்துச்சிலவாண்டுகளுக்கு முன் ஆங்கில மலையாளப் பத்திரிகை ஒன்றில் ஒரு சிறு குறிப்புடன் வெளிப்படுத்தினேன். இதனைப் பார்த்த பின்தான் சாசன இலாகாக்காரர்களின் கண் திறந்தது. ஓடோடியும் வந்து

கல்லையே பெயர்த்தெடுத்துச் சென்றுவிட்டார்கள். இப்போது அது பத்மநாபபுரம் பழமைப் பொருட்காட்சி சாலையில் இருக்கிறது.

அச்சாசனம் வருமாறு:—

ஸ்வஸ்தி ஸ்ரீ சேர திருவ
ம்சம் விளங்க திருவவதார
ம் செய்தருளிய உதய மார்
த்தாண்ட மண்ட
பமும் ஸ்ரீ வல்லவ பெருமாளுடை
டய நம்பிரானர் திருவம்
சம் விளங்க எழுந்த
ருளு மிளைய பெருமாளும் பிர
சாதம்......... . ச்ரமு
டைய நயினர் திருக்
கோயில் ஆவணமும்
உதய மார்த்தாண்
ட திரு புவன தேவி
யு மாசந்திரா......வா.

சாசனம் பழங்காலத் தமிழெழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. கல்லின் நடுவில் ஓர் அழகிய பெண்ணுருவம் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு காலை மடக்கி ஒரு காலைத் தொங்க விட்டுக்கொண்டும், இரு கைகளிலும் இரு தாமரைப் பூக்களை ஏந்திக்கொண்டும், ஒரு தாமரை மலர் மீது வீற்றிருப்பதாகவுள்ள அத்தோற்றம் கண்ணுக்கினிய காட்சியாகும். அவ்வுருவத்தின் மீது மூன்று வரி எழுத்துக்களும், கீழே பதினொரு வரிகளும் காணப்படுகின்றன. திரிபுவன தேவியின் பேரால் ஒரு மண்டபம் கட்டப் பட்டது பற்றி எழுந்த சாசனமாக இது இருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். இதுவன்றி வேறெதுவும் தெரிவதற்கில்லை. சாசனம் முழுமையும் கிடைக்காமற்போனது வருந்தத் தக்கது.

# 6. சோழபுரம் சாசனம்

**சா**சனங்கள் எவரையும் ஏமாற்றிவிட வல்லவை. அவற்றின் உண்மைப் பொருளை அறிந்துணர்வது சற்று அருமை. ஒருகால் உணரக் கூடுமாயினும் அவற்றுள் சில முழு உருவத்தோடும் கிடைப்பதில்லை. அப்போது அதில் ஈடுபட்டிருப்பவர் அடையும் வருத்தம் கொஞ்சமல்ல. ஒரு சாசனம் இன்ன அரசன் காலத்தது, இன்ன ஆண்டிலுள்ளது என்று தெரிய வேண்டாமா? அதுதான் போகட்டும். இன்ன குலத்தைச் சேர்ந்த அரசன் கல்வெட்டு என்றுவது தெரிய வேண்டாமா? பாண்டியனுடையதா? சோழனுடையதா? எனத் துணிவதில்கூடச் சந்தேகமென்றுல் பின் என் செய்வது? இதனுல் ஒருவனுடையதை இன்னொருவனுடையதாகக் கருதிப் பதிப்பிக்கப்பட்ட இடங்கள் பல.

அத்தகையவற்றுள் ஒன்று நாகர்கோவிலைச் சேர்ந்த சோழபுரம் இராஜேந்திர சோழீசுவரம் கோவிலிலுள்ள கல்வெட்டு. இது கோவில் சுற்று மண்டபத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. மண்டபம் இப்போது இல்லை. அது பழுதுபட்டிருந்த காலத்தில் எடுத்துப் பதிப்பித்தார்கள். அப்போதும் அதன் முற்பகுதி கிடைக்கவில்லை. எஞ்சிய பகுதி பின்வருமாறு:

1. லை இராமன் குளத்தில் வடவெல்லைக்கும் முள்ளிப்
பள்ளத்தில் உள்மதிளுக்கும் வடக்கும் மெலெல்
லை குடவர் குடியிருப்புக்கும் குடவர் பள்ளிக்கும்
சிவல்லவன் பெருவாய் [க் காலுக்குக்]

2. கிழக்கும் வட வெல்லை கருங்குளத்தில் உள்மதிலுக்
குத் தெற்கும் இந்நான் கெல்லைக் குட்பட்ட

நன்செ புன்செயும் நத்தமும் தொட்டமும்
குளமும் குளப்பரப்பும் மற்றும் எப்பெ[ர்ப்பட்]

3. டினவும் உட்படப் பழந் தெவதானம் பள்ளிசந்தம்
நீக்கி உள்ள நிலம் முன்னிடை ஊரும் பழம்...
புழுதியுந் தவிர்த்து ஊரில் அளந்து வழி முதலாக்
கி காராண்மை மெய்யா......

4. டிமையும் கற்பூர விலையும் காரிய வாராட்சியும்
வெட்டிப் பாட்டமும் பைஞ்சிபிலி சந்திவிக்
கிரகப் பெறும்.........ல்லிறைப் பழுதானதும்
..................

5. ம் அரிசித்துள் பத்தறை பெறும் பொன் வரியும்
மற்று மெப்பெர்ப் பட்டினவும் உட்பட மூன்ருவ
தின் னெதி ரெழாவது முதல் காராண்மை மெய்
யாட்சி
உட்பட தெவதான இறையிலியாக

6. **இடம்பெற வெணு மென்று அய்யன் மழவராயன்
னமக்குச் சொன்னமையில்** இவ் வாண்டு முதல்
காராண்மை மெய்யாட்சி உட்பட தெவதான
இறையிலியாக

7. நம் கெழ்வியும் வரியிலார் எழுதின உள் வரியும்
தரச் சொன்னெம் இப்படி சந்திராதித்ய
வற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும்
வெட்டி எல்லைகளில் திரிச்சூல—

8. க் கல்லு நாட்டிக் கொள்க—இவை செவ்விருக்கை
நாட்டுக் களத்தாவ்வூர் திருவிராமிச்சரம் உடை
யான் ஆட்கொண்ட வில்லியான கச்சியராயன் எழு
த்து 1௨

இக்கல்வெட்டு, திருவிதாங்கூர்ச் சாசன வரிசை ஆரு
வது தொகுதியில் ஐந்து ஆரும் பக்கங்களில் பதிப்பிக்கப்

பட்டிருக்கிறது. அரசர் பெயரும் காலமும் பொதுவாகச் சாசனங்களின் முதலிலேதான் சொல்லப்படுவது வழக்கம். இதிலோ முற்பகுதி இல்லை. கல்லெழுத்திருந்த மண்டபம் அழிந்து போனது மட்டுமல்ல, கற்களுங்கூடத் துண்டுப்படுத்தப்பட்டு எப்படி எப்படியோ போய் விட்டன. ஆகவே, கிடைத்த சாசனப் பகுதியை வைத்துக் கொண்டுதான் அரசரையோ காலத்தையோ தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.

இதனைப் பதிப்பித்த ஆசிரியர், இது முதல் இராஜேந்திர சோழ தேவன் காலத்துச் சாசனம் என்று குறிப்பிடுகின்றார். இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறதென்று தெரியவில்லை. அவ்வாலயம் இராஜேந்திரனால் கட்டப்பட்டது; இராஜேந்திர சோழீச்சுரம் என்ற பெயரையுடையது என்பது உண்மை. அதனால் இந்தச் சாசனம் அவனுடையது என்று கொள்ள முடியுமா? தொடக்கமில்லாமையால் இது சோழனுடைய சாசனமா? அன்றிப் பாண்டியனுடையதா? அல்லது வேறு எந்த வேந்தன் காலத்திலுமுள்ளதா? என்பது அறியக் கூடாமலிருக்கிறதாயினும் கல்லெழுத்தின் நடுப்பகுதியில் வரும் தொடரொன்று, ஒரு சிறு வெளிச்சத்தைத் தருகிறது. '**இடம் பெற வேணு மென்று ஐயன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்**' என்பது அது. இத் தொடர் வரும் சில ச்ாசனங்களைத் தென்னிந்திய சாசன வரிசையில் காணலாம். அவை வருமாறு :

> "**கொச்சடைய பன்மரான** திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ குலசேகர தெவர்க்கு யாண்டு இரண்டாவது நாள் முப்பத்தஞ்சினல்......பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீடம் மழவராயனில் எழுந்தருளி இருந்து......மடப்புற இறையிலியாகப்

பெற வேணு மென்று ஐயன் மழவராயர் நமக்குச் சொன்னமையில் "[1]

"ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சிகுலசேகர தெவர்க்கு யாண்டுமூன்ருவது......நாஞ்சி நாட்டு கொட்டாற்றுக் கொயிற் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப் பீட மழவராயனில் எழுந்தருளி யிருந்து...... செலுத்தக் கடவதாக இடப்பெற வெணுமென்று ஐயன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்"[2]

"ஸ்ரீ கொமாற பன்மரான திரிபுவனச் சக்ரவத்திகள்......ஸ்ரீ ஸுந்தர பாண்டிய தெவர்க்கு யாண்டு உ௰-வது நாள் ௩ாஎ௰ச ஞல்...... பள்ளிப்பீடம் மழவராயனில் எழுந்தருளியிருந்து ......தெவதான இறையிலியாய் இறுப்பதாக இடப்பெற வேணுமென்று இவர் (மழவராயர்) நமக்குச் சொன்ன மையில்"[3]

"கொமாற பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தெவற்கு யாண்டு அ-வது நாள் தொளாயிரத்தெண்பத்து எட்டிஞல்......மதுரைக் கொயில் பள்ளி அறைக் கூடத்து பள்ளிப்பீடம் மழவராயனில் எழுந்தருளியிருந்து......தெவ தான இறையிலியாக இடப்பெற வெணுமென்று அய்யன் மழவராயர் நமக்குச் சொன்னமையில்"[4]

---

1. South Indian Inscriptions Vol V. No. 301.
2. ,, ,, ,, Vol V, No. 428.
3. ,, ,, ,, Vol V, No. 431.
4. ,, ,, ,, Vol V, No. 440.

"கொமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்கு யாண்டு அ-ள்
உாயடு

ஞல்......மதுரைக் கொயில்......
மழவராயனில் எழுந்தருளியிருந்து......
இறுப்பதாக விறை கட்டப் பெற வேணுமென்
று ஐய்யன் மழவராயர் நமக்குச் சொன்ன
மையில்"[1]

"ஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனச்சக்ர
வத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்கு யாண்டு
எட்டுநாள் தொளாயிரத் தெட்டிஞல் மதுரைக்
கொயில்......பள்ளிப்பீடம் மழவராயனிலெ
ழுந்தருளியிருந்து......இறைகட்ட
ப் பெற வெணுமென்று மாமடி (மழவராயர்)
நமக்குச் சொன்னமையில்"[2]

"ஸ்ரீகொமாற பன்மரான திரிபுவனச் சக்கரவத்
திகள் சொணுடு வழங்கியருளிய ஸ்ரீ ஸுந்தர பாண்
டிய தெவற்க்கு யாண்டு ஏழாவதுனள் முன்னூற்றி
பத்தஞ்சிஞல் மதுரொதைய வளனுட்டு மாடக்குள
க்கீழ் மதுரைக் கொயில் பள்ளியறைக் கூடத்துப்
பள்ளிப் பீட மழவராயநில் எழுந்தருளி இருந்து......
......தெவதான இறையிலியாக இடப்பெற
வெணுமென்று மழவராயன் னமக்குச் சொன்னமை
யில்"[3]

"கொமாற பன்மரான திரிபுவனச் சக்கரவத்
திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்க்கு யாண்டு
எட்டா

1. South Indian Inscriptions Vol V, No. 446.
2. South Indian Ins. Vol V, No. 448.
3. ,, ,, ,, Vol IV, No. 372.

வது நாள் தொளாயிரத்து தொண்ணூற்று நாலினல்
......மதுரைக் கொயில் பள்ளியறைக் கூ
டத்துப் பள்ளிப்பீட மழவராயனில் எழுந்தருளி
யிருக்க......இறையிலியாக இறுப்பதாக
**இடப்பெற வேணுமென்று ஐயன் மழவராயர்
நமக்குச் சொன்னமையில்''**[1]

**''மாறபன்மரான** திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ **சுந்
தரபாண்டிய** தெவர்க்கு யாண்டு.....மாடக் குளக்கீழ்
மதுரைக் கொயில்ப் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப்பீட
ம் மழவராயனில் எழுந்தருளி யிருந்து......
தெவதான இறையிலியாக **இடப்பெறு வெணு
மென்று
ஐய்யன் மழவராய''**[2]

இவற்றுள் முதலிலுள்ள இரண்டு சாசனப் பகுதிகள், முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (*1190-1216*) காலத்திலுள்ளவை. எஞ்சிய ஏழும், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (*1216*-ல் பட்டம்) காலத்தன. இவற்றி லெல்லாம் 'இடப்பெற வேணுமென்று ஐயன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்' என்னும் தொடர் ஒரேமாதிரி வந்திருப்பதைப் பார்க்கிறோம். மழவராயன் என்பது ஒரு பள்ளிப் பீடத்தின் (சிம்மாசனத்தின்) பெயர். மந்திரிக்கும் அந்த ஸ்தானப் பெயர் உண்டு. இதுபோல, பல்லவராயன், கலிங்கராயன், முனையதரையன் முதலான ஸ்தானப் பேர்கள் கொண்ட பள்ளிப்பீடங்களும், மந்திரிப் பதவிகளும் இருந்தன. இவை யெல்லாம் பாண்டிய குலத்

---

1. South Indian Ins. Vol VIII, No 402.
2. ,, ,, Vol VIII, No. 404.

துக்கே உரியனவாம். அது மேலே காட்டிய இரு வேந்தர்களுடைய சாசனப் பகுதிகளாலும் நன்கு அறியப்படும். சோழர்களுடைய சாசனங்களில் இது வரையிலும் இவற்றை நான் கண்டிருப்பதில்லை. ஆகவே, 'அய்யன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்' என்ற தொடரையுடைய இராஜேந்திர சோழீச்சுரத்துச் சாசனம் சோழருடைய தல்லவென்றும் பாண்டியருடையதுதான் என்றும் ஐயமறத் துணியலாம் அல்லவா? ஆனால் பாண்டியருள் எந்தப் பாண்டியன் காலத்தது என்று தீர்மானிக்க முடியவில்லை. ஒருகால் குலசேகர பாண்டியனுடைய காலத்ததாகவோ, சுந்தர பாண்டியனுடைய காலத்ததாகவோ இருக்கக்கூடும்.

# 7. உலக முழுதுடையாள் சாசனம்

தெய்விகப் பெருமையும் கலைச்சிறப்பும் வாய்ந்த சுசீந்திரம் கோவிலில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனங்கள் நூற்றுக் கணக்கானவை. அவற்றுள் பலவும் வரலாற்றுச் சிறப்புடையவையாம். சாசனங்களில் ஒன்று, மேற்குப் பிராகாரத்தில் உள்ள வாகனப் புரைச் சுவரில் தீட்டப்பட்டிருக்கின்றது. இரண்டு வரிசையாக அமைந்த இக்கல்லெழுத்தின் அடிப்பகுதி தரையிலும், இரண்டாவது வரிசையின் வலது ஓரம் ஒரு சுவருக்குள்ளும் மறைந்து கிடக்கின்றன. ஏனைய பகுதிகளும் அவ்வளவு தெளிவாக இல்லையாதலால் படித்தறிவது சற்று அருமையாகவே இருக்கிறது. இது ஓர் தமிழ்ச் சாசனம்; தமிழ் எழுத்தால் இயன்றது. அருகிக் காணப்படும் சில வடமொழிச் சொற்கள்மட்டும் கிரந்த லிபியில் எழுதப்பட்டிருக்கின்றன.

இது, உலக முழுதுடையாளான சொக்கத்தாண்டாளால் சுசீந்திரம் கோவிலில் பிராமண போஜனத்துக்கு விடப்பட்ட நிபந்தத்தைக் குறிப்பிடுவதாம். உலக முழுதுடையாள், ஸ்ரீ வீரபாண்டியதேவன் என்னும் பாண்டிய மன்னனுடைய மனைவியாவாள். பொதுவாகச் சாசனங்கள் அரசருடைய ஆட்சி ஆண்டைக் குறிப்பிடுவதுதான் வழக்கம். இச் சாசனம் அவ்வாறன்றி, சாசனம் எழுந்த ஆண்டுமாதங்களைத் தெளிவாகச் சொல்கின்றது. அதிலும் ஒரு பாண்டிய மன்னனுடைய மனைவியின் சாசனத்தில் கொல்லமாண்டு குறிப்பிட்டிருப்பது ஓர் புதுமையாகும். அதனோடு வீரபாண்டியனுடைய மனைவி இன்னார் என்று சொல்லியிருக்கும் முதற் சாசனம் இதுவே.

திருநெல்வேலி ஜில்லா வள்ளியூரில் உள்ள மூன்று யுகம் கண்ட அம்மன் கோவிலில் ஒரு சாசனம் இருக்கிறது. அது ஜடாவர்மன் வீரபாண்டியனுடைய ஆட்சி ஆண்டு 4-ல் எழுந்ததாகும். கோவில் கட்டியவள் உலக முழுதுடையாளான சொக்கத்தாண்டாள் என்பதும்,

அவள் ராஜகம்பீர வளநாட்டைச் சார்ந்த திருவானைக் காவில் உள்ள ஒரு சாந்திக் கூத்தியாவள் என்பதும் அச் சாசனத்திலிருந்து அறியப்படும் செய்திகள். இதனைப் படிப்பார் எவரும் சுசீந்திரம் சாசனத்திலும் வள்ளியூர்ச் சாசனத்திலும் வரும் சொக்கத் தாண்டாள் ஒருத்தியே என்பதில் ஐயப்பாடு கொள்ள மாட்டார்கள். ஆனல், "தேவதாசி வகுப்பிற் பிறந்த பெண்ணை ஒரு மன்னன் மணந்திருப்பானு? அவளை ஓர் அரசியின் ஸ்தானத்தில் வைத்திருப்பானு?" என்ற கேள்விகள் அவர்களுள்ளத்தில் எழக்கூடும்.

இக்கேள்விகளுக்குத் தென்னிந்திய வரலாறு தகுந்த விடை அளிக்கின்றது. எத்தனையோ அரசர்கள் தேவ தாசிகளை மணந்து அரசியராக ஏற்றிருப்பது மட்டுமன்றி அவர் மக்களை அரசாட்சிக்கு உரிமைப்பட்டவர்களாகவும் செய்திருக்கின்றூர்கள் என்பதைப் பண்டை வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன. அதுபோலவே திருவானைக்கா வில் தேவதாசியர் குடியில் பிறந்து ஆடல் பாடல்களில் தேர்ந்திருந்த சாந்திக் கூத்தியான சொக்கத்தாண்டாள் என்பவள் ஸ்ரீ வீரபாண்டியதேவர் என்ற பாண்டிய மன்ன னுக்கு மனைவியா யமைந்தாளென்பதும், அம்மன்னனை மணந்த காரணத்தால் உலக முழுதுடையாள் என்னும் சிறப்புப் பெயர் பெற்ருள் என்பதும் வள்ளியூர், சுசீந்திரம் கல்லெழுத்துக்களால் அறியப்படுவனவாம். அன்றியும் அவள்கடவுள் வழிபாட்டில் கருத்துடைய பக்தையாயிருந் தாளென்பதைச் சாசனங்கள் தெரிவிக்கின்றதோடு அவள் வாழ்ந்த காலம், அதாவது ஸ்ரீ வீரபாண்டியன் காலம் இது என்பதையும் அவை தெளிவுபடுத்துகின்றன. சாசனங்கள் வருமாறு:—

## பத்தி 1

1. கொல்லம் சாருயஉ மாண்டை(த்) தனு ஞாயிறு யகூ
சென்ற வி (யாழ) வாட்டையும்வி–
2. சாகமும் ஏகாதெஸியும் பெற்ற இந்நாளால் நாஞ்சி
நாட்டு ஸ்ரீநாரா (னசுந்தர சோழச்சதுர்வேதி)
3. திமங்கலமுடையார் ஸ்ரீநாம் உடைய நயினர்
சீகோயிலில் திருச்சுற்று மண்டபத்திலிருந்து
4. ஸபையும் ஸ்ரீகாரியஞ் செய்வாரும் இருநதெழுதின
செய்கட ஓலை (க்) கரணமாவது உடையார் ஸ்ரீ
5. நா முடையாரார்க்குபெருமாள் ஸ்ரீ வீரபாண்டியதேவர்
நம்பிராட்டியார் சொக்கத்தாண்டாளான
6. உலக முழுதுடையார் நித்தல் செல்வதாக திரு
வமுதுக்கு கற்பிச்ச அரிகுறுணி இருநாழிக்கும்
அஞ்சிரண்டால்
7. நெல் முக்குறுணி ஒரு நாழியும் வைஜாகாலத்து
அமுது செய்யும்ப்ராஹ்மணர் மூவர்க்கு வெஞ்ச
8. நமுட்பட நெல் முக்குறுணியுங்கூட........க்குங்
கல்பிச்ச புதுப்பொன் அச்சு இருநூறு
9. இவ்வச்சு இருநூற்றிலும் இவ்வூர் தேவரடியாள் குன்
றுண்டி திருவாண்டிகெக்கொ
10. ண்ட அச்சு ாநியடு-க்கும நாளொன்றுக்குச் செலுத்
தும் அரிகுறுணி யிதில் பெரிய நாயனர் (க்) கு திரு
11. வமுதுக்கு அரி அஞ்ஞாழியும் திருவேங்கடத்துக்கு
திருவமுது செய்
விச்சு சோறுதான் கொண்டுவரும்

12. அரி முந்நாழியும் ப்ராஹ்மணஹோஜனத்துக்கு
ஓராண்டில் இவள் செலுத்தும் மாசம் ஒன்பது

13. ம் இப்படி செலுத்துவாளாகவும் செலுத்துமிடத்து
முட்டுகில் இவள் கைக்கொண்ட அச்சு ா௫

14. ௰௫-க்கும் ஒன்றொன்றே காலாக வரக்கண்ட
அச்சு ந௰கூங்கூட அச்சு ாகூ௰சக்குஞ் செலுத்
தின நில

15. ங்கள் வேட்கைக் குளத்தின் கீழ் அமரபுயங்க
வாய்க்காலுக்கு வடக்கு......................

16. கீழ் மருதறை தடி க நில............பள்ள மடை தடி
.........யும் இந்திர வீரவாய்க்காலுக்கு தெற்கு.........

17. ............யும் ஆகத்தடி மூன்று.........ன்
மேல் அச்சு...........மேல்படியாள் அ............

18. ............அமரபுயங்க வாய்க்காலுக்கு தெக்கு.........
............கேசவநாராய..................

19. .................பணையறைதடி ஒன்று நிலம்
வாய்க்கால்...............கு வடக்கு

20. றைதடி க நில..........ஆக...............யின் மேலும்
ஓ.............................

21. ..................யின் மேலும் ஒள்ள..............
.........................

22. அச்சு.................ஸ்ரீவழ சுவமில் ௫ கண்ணாற்
றில் குளத்தில் பெரு..................

23. அச்சு கூ௰ கொடுத்து விலைகொண்டுடைய...........
..................றொன்றாலும் ஆன இந்நில...........

24. தொண்ணூற்று நாலும் மேல்படியில் செல்லாண்டி
சேகராண்டாள் கைக்கொண்ட..........................

## பத்தி 2

1. காலுக்கு தெற்கு நாலுக.........தடிகநில சம்
அமரபுயங்க வாய்க்காலுக்கு
2. வடக்கு..........கண்ட மாடத்தி........றொடு ஒற்றி
யொள்ள சூலத்தறை தடி...............
3. மேல் ஒற்றிமாவில் ஒள்ள அச்சில் கூட்டிய அச்சு
சம் ஆக அச்சூரும் இவ்வூர் சோமாசிமங்கல
4. சங்கரன் இராமன கைக் கொண்ட அச்சு
ஊருக்கும் ஸ்ராஹண போஜனம் ஓராண்டில்
மூன்று.........................
5. ம் மூவரை ஊட்டுமிடத்து முட்டுகில் அச்சு
ஊருக்கும் ஒன்றொன்றே காலாக வாசிகண்ட
அச்சி...............................
6. செலுத்தின நில வேட்கைய் குளத்தின்கீழ்
பழங்கிடப்பு...........ளவறை............
7. சலுத்தின அச்சு ஊருய இப்படி செலுத்து
மிடத்து பூஜயும் ஸ்ராஹ ண போஜனமும்
ஒ................................
8. ல முட்டிாட்டி செலுத்துவாராகவும். இரண்டு
மாசம் முட்டுகில் தெண்டமும் முட்டிாட்டி
செலு........................
9. ச்வு இப்படி செலுத்து மடத்து..............
செலுத்துவாராகவும்................
10. ............நித்ய வல்லவஸ் ஜையும் ஸ்ராஹ ண
ஹோஜனமும் முட்டாமல் செலுத்துவாராகவும்
........................
11. திருவாண்டிகைக் கொண்ட அச்சு நூற்
றைப்ப.............க்கும் செல்வாண்டி
சேகராண்டி.........................

12. ருபதும சங்கரன் இராமன் கைய்கொண்ட
அச்சு இருபத்துஞ்சும் ஆக அச்சு இரு
நூற்று.............................
13. தூடத்து முட்டுகில் ஒன்றுக்கு ஒன்றே
காலாக அச்சு ஊருயம் இட்டு கொண்ட
நிலங்களில்..........................
14. டாரத்தில் கைக்கொண்டு வநூர் ஷிதுவல்
................வஷிஜையும்ஷூராவறுண ஹொஜனமும்...
.....................
15. லுஞ் செமபிலும் வெட்டுவிச்சுக் கொளளு
மாறு கற்பிச்சு இச்செய் கட ஒலை............
16. ருண்டி திருவாண்டியுஞ் செல்வாண்டி
சேகராண்டானும் சங்கரன் இராமனும்
உடையார் ஸ்ரீ ஶாஷீநூ..................................
17. யனுர் தேவகன்மிகளுக்கு இப்படிக்கிவை
குன்ருண்டி திருவாண்டி எழுத்து செல்வாண்டி
சேகராண்டாள் (எழு)
18. த்து இவை சங்கரன் இராமன் எழுத்து
ஸஹெய்ப் பெருமக்கள் குறைவற இருந்து
அருளி.........................
19. யெ இவ்வெழுத்து வெட்டினேன் இக்கோயில்
தச்சாசாரியன் சிங்கன் சடையனுனஉ............
20. ..........வாயஉன் எழுத்து அருளிச் செயல்
படி............த்தி முகம் கைக்கொண்டு
இவ்வெழுத்து.................
21. இக்கோயிலில்ஶியூாவாயஉ குலமாணிக்
வ
கன் தாணுவான ஸ்ரீ பத்மனுஹூவாயஉ

**No 364, P 37. A.R.E. 1929—30. (Madras)**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரி
2. புவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ வீர பாண்டிய
3. யதேவர் (க்)கு யாண்டு ச வது (ராஜகம்பீ
4. ரவளநாட்டு திருவானைக்காவில்
5. திருப்பதியில் சாந்திக் கூத்திகளில்
6. சொக்கத்தாண்டாரான உலகமு
7. ழுதுடையார் வள்ளியூர் வடக்குவ
8. ாசலில் தேவி கோயிலுக்கு உபான (ஜெ
9. கதி குமுதோபரி பட்டிகையந்த மாகம)
10. தவியையும்வடிஷிச்சுத்தங்கள் பேத்தி (ய
11. ாரா) சிறிய பிள்ளை (யை உலகத்தாண்டாழுக்)
12. க்கும்..................லஅவ..................யு
13. ருளு..............கொயில்...................
14. ஞ்செ.....................உலகமுழுதுடையா
15. ாத.......................க்கு..................

# 8. பராந்தக பாண்டியன் சாசனம்

அடியில் வருவது ஸ்ரீ கோச்சடையபன்மனான திரிபுவன சக்ரவர்த்தி ஸ்ரீ **பராந்தக பாண்டியனது** சாசனமாம். இது கன்னியாகுமரியில் பகவதி நாச்சியார் கோவில் இரண்டாவது பிராகாரத்தின் தெற்குச்சுவரில் பொறிக்கப் பெற்றுளது. பிற்காலத்திலே அச்சுவரின் பழைய கற்களிற் சில மாற்றப்படவே சாசனத்தின் பல பாகங்களும் எடுபட்டுப் போய்விட்டன. இவற்றுள் ஒரு சிறு பகுதி மட்டும் அக்கோவிலின் வெளிப்பிராகாரத்தில் படிகளாயமைந்து கிடக்கும் இரண்டு துண்டுக் கற்களில் காணப்படுகின்றது. சாசனம் அறைகுறையா யிருப்பது வருந்தத்தக்க விஷயமே.

பராந்தக பாண்டியனுடைய வேறொரு சிலாலிகிதம் மேற்கூறிய கோயிலின் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிவரும் மண்டபத்தில் செதுக்கப் பெற்றுளது. அதைக் காலஞ்சென்ற ஸ்ரீமான் **கோபிநாதராயரவர்கள்** திருவிதாங்கூர் ஆர்க்கியோலாஜிகல் ஸீரிஸில் பதிப்பித்திருக்கின்றனர். இவ்விரண்டையுந் தவிர இப்பாண்டியனது சாசனங்கள் வேறு எவ்விடங்களிலேனும் உள்ளனவாக இதுகாறும் அறிய வந்ததில்லை.

இவனது மெய்க்கீர்த்தியில் 'தெலிங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்க மடிப்படுத்து' என்று வரும் பகுதி, 'குளத்திடைத் தெலுங்கவீமன் விலங்கல் மிசை ஏறவும், கலிங்க பூமியைக் கனலெரிபருகவும், ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி, வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து, வடதிசை அடிபடுத்தருளி' என்று விக்கிரமசோழன் மெய்க்

கீர்த்தியில் வரும் பகுதியை எளிதில் ஞாபகப் படுத்துகின்றது. இவ் வொற்றுமையை ஆதாரமாகக் கொண்டே சிலாசாசன பரிசோதகர்கள் கலிங்கப்போர் நிகழ்ந்த காலத்தில் விக்கிரம சோழனுக்கு உதவியாகப் பராந்தக பாண்டியன் சென்றிருந்தானென்றும், ஆதலால் அவ்விரு வேந்தரும் சம காலத்தினராவா ரென்றும் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். விக்கிரம சோழனது காலம் கி. பி. 1118 முதல் கி. பி. 1136 வரையிலுமாம். ஆகவே பராந்தக பாண்டியனுடைய காலம் கி. பி. 12-வது நூற்றுண்டின் முற்பகுதி யென்று கொள்வதில் யாதும் தடையில்லை.

இவ்வுண்மை இன்னமொரு வழியாலும் உறுதிப்படுகின்றது. ஜடிலவர்ம குலசேகர பாண்டியனது கன்னியாகுமரிச் சாசனத்தைக் கவனிப்போமானுல் அதில், [1]'குமரிப் பிராட்டி கோவிலிலே நம்பேரால் மடமெடுத்துத் தேவி தைபூசத்திருநாளில் வந்த பரதேசிகளை ஊட்டுவதாக' என்று அப்புண்ணிய தலத்தில் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவை ஒட்டி அவன் செய்யும் அன்னதான தர்மம் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். தைப்பூசம் பராந்தக பாண்டியனது ஜன்ம நக்ஷத்திரம். இது அவனது இரண்டு கல் வெட்டுப் பிரமாணங்களிலும், "நாம் பிறந்த தைபூசத் திருநாளுக்குச் செல்வதாக' என்று வரும் பகுதியினுல் நன்கு விளங்கும். இத்தினத்தில் விசேஷ பூஜை, திருவிழா முதலியவை நடைபெறும் பொருட்டு அதிகமான நன்செய் புன்செய் நிலங்கள் அவனுல் நீர் வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இச் செய்தியை ஆராய்ந்து நோக்கும்பொழுது ஜடிலவர்ம குலசேகர பாண்டியன் நம் பராந்தக பாண்டியனுக்குப் பின்

1. Kerala Society papers, Trivandrum Series, No. 5. p. 272.

தென்னாட்டை ஆண்டு வந்த ஓர் அரசனே யாவான் என்பது எளிதில் புலப்படும். குலசேகரன் கி. பி. 1190-ல் பட்டம் எய்தியவன். ஆதலால் பராந்தக பாண்டிய னுடைய காலம் இதற்குச் சிறிது முந்தியதாக, அதாவது கி. பி. 12-வது நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலா மென்பது உறுதியாம். இவ்விரண்டாவது காரணமே முன்னதிலும் சிறந்ததென நடுநிலையுடையோர் ஒப்புக் கொள்வர். ஏனெனில், முன்னது மெய்க்கீர்த்தியில் வந்த பகுதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது; பின்னது சாச னத்தின் காரியாம்சமான பகுதியை ஆதாரமாகக்கொண் டுள்ளது. மெய்க்கீர்த்திகள் சாதாரணமாக அரசனின் சம்ஸ்தான வித்வான்களால் எழுதப்படுவைகள். இவர் கள் தம் மன்னரை எட்டின மட்டெல்லாம் ஏற்றிப் புகழ் வது இயல்பு. ஓர் அரசனது மெய்க்கீர்த்தியில் அவ னுடைய முன்னோர் பலர் பற்பல காலங்களில் செய்த அரும் பெருஞ் செயல்கள் யாவும் அவன் மீது ஏற்றப்பட்டு அவன் செயல்களாகவே கூறப்பட்டிருப்பதைநாம் பரக்கக் காண்பதுண்டு. தேவேந்திரனுடைனிருந்ததும், வடிம் பலம்ப நின்றருளியதும், மால்கடலை எறிந்தருளியதும் நம் பராந்தக பாண்டியனது வீரச்செயல்களென யார்தாம் கூறத் துணிவர்? காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய செய்தி பெரும்பாலும் சோழ மன்னர்களுடைய மெய்க் கீர்த்திகளில் மட்டும் காணப்படுவதொன்றாம். இப்பெரு மையைப்பாண்டிய அரசரின்மீது ஏற்றிக்கூறும் சாசனங் கள் மிக்க அருமையே. ஆதலால் ஓர் அரசனுடைய மெய்க்கீர்த்தியைப் படிக்கும்பொழுது அதில் கூறப்படும் விஷயங்களுள் அவ்வரசனுக்குரியவை எவை எவை யென் றும், அவன் முன்னோருக்குரியவை எவை எவை யென்றும் தக்க சான்றுகளைக் கொண்டு நிதானிக்க வேண்டுவது மிக்க அவசியமாம். தென்கலிங்கப் போர் நடத்திய காலத் தில் விக்கிரம சோழனுக்குதவியாகப் பராந்தக பாண்டி-

யனும் சென்றிருந்தான் என்பதற்கு, 'தெலுங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்க மடிப்படுத்து' என்று அவன் மெய்க்கீர்த்தியில் வந்திருக்கும் பகுதியைத் தவிர வேறு ஆதாரம் ஏதேனும் உண்டோ என்பது தெரியவில்லை. 'காந்தளூர்ச்சாலை கலமறுக்கச் சென்ற சோழ அரசரோடும் இவன் சென்றிருந்தானோ?' என்னும் வினாவெழுந்தால் என்ன விடை வருமோ அறியேன். இரண்டாவதாகக் காட்டிய காரணத்தில் இவ்வித ஆக்ஷேபணைகள் ஒன்றும் ஏற்படுவதற்கு வழியில்லை என்பது எடுத்தும் கூறுமலே அறியற்பாலதாம்.

## சாசனம்

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ திருவளரச்செ]யம் வளர தென்னவர் தங் குலம் வளர அருமறை [நான்கவை வளர வனைத் துலகுந் துயர் நீங்கத் தென் மதுராபுரித் தோன்றி தேவேந்திரனேடினி திரு]

2 ந்து மன்னர் பிரான் வழுதியர் கோன்வடிம்ப [லம்ப நின்றருளி மால்கடலை எறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்துச் சே]ரலனைச் செருவில் வென் றுதி [றை கொண்டு வாகைசூடிக் கூட]

3 கர்கோன் மகட்குடுப்பக் குலவிழினங்கைக் கொண்டு [கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து மன்னுபுகழ் மறையவர்தம் மணியம்] பலத்திருந்தருளி ஆங்கவர் களற

4 ம் வளர்ப்ப அமைத்த பேராயிரத் தெண்மர விரோதம் பணிப் பணியால் மறை [பேர்த்துக் கல்நாட்டிப் பண்டுள்ள பேர்த]வித்து அளப்பனவும் முகப் பனவுங்[றுப்பனவும் கயலெழுதி அனந்தபுரத் தெம்பிரார்]

5 கு நிலவியபொன் மணிவிளக்கு நின்றெரியப் பத்த மைத்து ஆங்கமைந்த தாயநல்லூர் [அடதென் னாட்டரையனென அறிவாகை] யால் அறிந் துணர்த்த தென்னவ[ர் தங்குல தெய்வம் தென் குமரிகன்........]

6 ன் திருநாள் விழாவதனில் தைப்பூசப் பிற்றை நான்று வந்திரந் தோ ரெல்லா [ற்கும் மாற்றாதே தியாகமிட அறத்தால்] விளங்கிய ஆழ்ந்த கேழ் விப் [புறத்தாய நாடு பூமகட்களித்துத் தெலிங்க வீமங்]

7 குளங்கொண்டு தென்கலிங்க மடிபடுத்துத் திசை யனைத்து முடனாண்ட ஸ்ரீ [கோற்சடைய பன்ம ரான திரிபுவனச்க்] கரவர்த்திகள் ஸ்ரீ பராந்தக தே[வற்கு........ராஜராஜப்ப]

8 ாண்டி நாட்டு உத்தம சோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரிக் கன்னியா [பகவதியார் தேவதா னத்து] க்கு இருப்பதாக உள்ளோலை ெ...

9 ட்டு மேல் வேம்பனாட்டுக் கல்லூர் பிடிசூழ்ந்து குடுத்த படிக்கு கீழெல்லை நெசச.........(மே)

10 லெல்லை நுணாவடி நங்கையார் கோயிலுக்குக் கிழக் கும் வட வெல்லை காளி.........

11 ன ராஜராஜப் பாண்டிநாட்டு மேல்வேம்ப நாட்டு ஊர்க்கும் கருணாகரபூ...

12 த்தினால் பெருமபாண்டியாற்றூர் நாட்டு நம் வீட்டில் உள்ளோலை மறைவாடக்கூடா......

13 முதல் தவிர்ந்து இவ்வூர் ரூ. ாடுாடு மாவுக்கும் பூவழி முதல வீரபாண்டியனால் உ௩......

14 டுக்குமரிக்கன்னியார் பிடாரியாற்கு வேண்டுந் நித்தல் நிவந்தங் களுக்குந் நாம் பிற [ந்த தைப்பூசத் திருநாளுக்குஞ் செல்வதாக இறையிலிதேவதா]

15 னமாக வரியிலிட்டுக் குமரிச்சட்டர்கள் கையில் நாஞ் சொல்ல நீர் வார்த்து நம......

16 [உ] த்தம சோழ வளநாட்டுத் தாயநல்லூர் அரையன் சோறனுன் தென்னவ......

## குறிப்புக்கள்

1. தேவேந்திரனேடினிதிருந்து — திருவிளையாடற் புராணம் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் 34-வது பாடலில் இச் செய்தி கூறப்பட்டுள்ளது. பாடல் வருமாறு:

**மைக்கடல் வறப்ப வென்ற**
**வாகைவேற் செழியன் மௌலிச்**
**செக்கர்மா மணிவிற் காலத்**
**தேவர்கோன் தவிசி லேறி**
**ஒக்கவீற் றிருந்தா னாக**
**உம்பர்கோன் அழுக்கா றெய்திப்**
**பக்கமே யிருந்த, ஏனைப்**
**பார்த்திவர் முகத்தைப் பாரா.**

2. வடிம்பலம்ப நின்றருளி—'வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வழியில் வந்தவனே!' (மதுரைக் காஞ்சி, வரி, 61 உரை)

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடல் சுவறவேலெறிந்த திருவிளையாடல், ஆறுவது ஏழாவது பாடல்களில் இவ்வரலாற்றைக் காணலாம்.

**வென்றிபடச் சிவந்தெறியக்**
**கருங்கடல்வெவ் வலிதொலைந்து**
**முன்றெறும்பு புடைந்து பங்கப்**
**பட்டலறி மோதிவிழா**

நின்றபடி வடிம்பலம்ப
நின்றதுகண்டு ஏனோரும்
இன்றிதுகண் டஞ்சும்புதுமை
யெனப்பயம் விட் டெழுத்துதித்தார்.

மாலைமுடி யோன்வேலை
வடிம்பலம்ப நின்றதனால்
வேலைவடிம் பலம்பநின்றான்
என்றெங்கும் விளங்கியதால்;
ஆலவாய் நகரான்போல்
அருளுடைய கடவுளர்யார்
ஞாலமிசை வானமிசை
எனத்துதித்தார் நாவலர்கள்.

*3. மால்கடலை எறிந்தருளி—திருவிளையாடற் புராணம், கடல் சுவறவேல் விட்ட படலம், 14-வது பாடலில் இச் செய்தியைக் காணலாம். பாடல் வருமாறு:*

எடுத்தவேல் வலந்திரித்து
எறிந்தவேலை வேல்முனை
மடுத்தவேலை சுஃஃறென
வறந்துமான வலிகெட
அடுத்தவேரி வாகையின்றி
அடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலான்கணைக்
காலின்மட்ட தானதே.

*4. மலையத்துக் கயல் பொறித்து—'வடவரையிற் கயல் பொறித்து'* (T. A. S. Vol. II, p. 18.)

கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்......

*எனவரும் சிலப்பதிகார அடிகள் (ஆய்ச்சியர்குரவை, 1—5) இங்கு நினைவுகூரத்தக்கன.*

*5. சேரலனைச் செருவில் வென்று—இதன் விவரங்கள் அறியமுடியவில்லை.*

*6. கூபகர்கோன்—திருவிதாங்கூர் அரசன்* **(Tr. State Manual, Vol. I, p. 251.)**

*கூபதேசம் அல்லது கூபகதேசம்—திருவிதாங்கூர் சிறையின் கீழ்த் தாலுகாவிலுள்ள ஆற்றங்கல் என்னும் ஊரின் பக்கப் பிரதேசங்களுக்கு ஏற்பட்டிருந்த பண்டை நாட்பெயர்.* **(Tr. State Manual, Vol. I. p. 254.)**

*'மலைநாட்டிலுள்ள நான்கு பெரும் பகுதிகளிலொன்று'*— **(T. A. S. Vol. II, p. 106.)**

**எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் தோன்றி**
**இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டா மாண்டில்**
**வெற்றிசெயும் கும்பத்தில் வியாழன் நிற்க**
**விளங்குபுகழ் ஆவணிபன் னிரண்டாந் தேதி**
**தத்திவிழும் பறளியாற் றணையும் தள்ளி**
**தமிழ்ப்பாண்டி ராஜசிங்கம் தனையும் வென்று**
**கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சி நாடும்**
**கோட்டாறும் கூபகர்கோன் கொண்ட நாளே.**

**(விடுகவி)**

*7. விழிஞம்—திருவனந்தபுரத்தின் பக்கத்தில் கடற்கரை யோரமாகவுள்ள ஓரூர். இது பண்டைக்காலத்தில் மிகவும் பெயர் பெற்ற ஒரு துறைமுகப் பட்டினமாயிருந்தது. குலோத்துங்க சோழ பட்டணம், இராஜேந்திர சோழ பட்டணம் என்பவை இதன் வேறு பெயர்களாம். தற்காலம் இது ஒரு சிற்றூராகவே காணப்படுகின்றது.*

*8. காந்தளூர்ச்சாலை கலமறுத்து*—**(Kerala Society Papers, Trivandrum Series 2, pp. 100-106** *நோக்குக.)*

*9. மன்னுபுகழ் மறையவர்தம் மணியம்பலத்திருந் தருளி*

*...............மறைபேர்த்துக் கல்நாட்டி—*

*இப்பகுதியிலடங்கிய விஷயங்கள் இன்ன இன்னவை என இதுவரையில் யாரும் வெளிப்படுத்தியதில்லை. மணி*

யம்பலம் எங்குள்ளது? காந்தளூர்ச்சாலையிலுள்ளதா அல்லது வேறெங்கேனுமுள்ளதா? 'அறம வளர்ப்ப' என்பது எதைக் குறிக்கின்றது? ஆயிரத்தெண்மர் எவர்? அச்சாலையில் தங்கியிருந்தவர் மறையவரா? அந்நியரா? 'மறைப்பேர்த்துக் கல்நாட்டி' என்பதிலிருந்து அறிய வேண்டுவதென்னை? இவையாவும் ஆராய்ச்சிக்குரிய பாகங்கள் என்பதில் யாதும் ஐயமில்லை.

காந்தளூர்ச்சாலையைத் தென்னாட்டின் தக்ஷசிலையென்றோ, நாளந்தாவென்றோ, விக்ரம சிலையென்றோ கூறுவது மிகையாகாது. வடநாட்டு மன்னர் நாளந்தா முதலியவற்றை எவ்வாறு ஆதரித்து வந்தனரோ அவ்வாறே தென்னாட்டு மூவேந்தரும் காந்தளூர்ச்சாலையை ஆதரித்து வந்திருக்கின்றனர். நம் பராந்தக பாண்டியன் சேரநாட்டைவென்று அடிமைப்படுத்தியபொழுது அந்நாட்டின் கண்மணி போல் விளங்கிய காந்தளூர்ச்சாலையினைக் கைப்பற்றி அதில் சில சீர்திருத்தங்கள் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. மணியம்பலம் என்பது அச்சாலையிலுள்ளாரனைவரும் ஒருங்கு கூடும் சபா மண்டபமாம். 'ஆயிரத்தெண்மர்' என்பவர் அங்குத் தங்கியிருத்தற்குரிய ஆயிரத்தெட்டு அந்தணர்களேயாவர். வேதாகமங்களை ஆராய்ந்து உண்மைகளை அறிந்து உலக தர்மங்களைப் பாதுகாப்பதே அவரது முக்கிய கடமையாம். ஒவ்வோர் அரசனும் அச்சாலையைக் கைப்பற்றிய உடன் அதில் அநேக சீர்திருத்தங்கள் செய்து வந்திருக்கின்றனன். சாலையில் உண்ணுங்கலங்கள் இத்தனையென்று திட்டப்படுத்துவதோடு அங்கு ஓதப்படும் வேதாகமங்களில் விசேஷப் பயிற்சிக்குரிய பகுதிகள் இன்னஇன்னவை யென அறிவிற் பெரிய அந்தணர் குழாத்தைக் கொண்டு தீர்மானம் செய்விப்பதும் அத்தீர்மானத்தைச் சிலையில் எழுதி நாட்டுவதும் பண்டையரசரின் வழக்கமாயிருந்ததென்பது 'மறை

பேர்த்துக் கல்நாட்டி' என்ற சொற்றொடரால் அறியக் கிடக்கின்றது.

*10.* **வீரபாண்டியன்:**—'வீரபாண்டியன்' என்னும் பெயருடைய மரக்கால். "பண்டுள்ள பேர்தவிர்த்து அளப்பனவும் முகப்பனவும் நிறுப்பனவும் கயலெழுதி" என்று சாசனத்தின் முற்பகுதியிலும், "வீரபாண்டியனால் ௨௩" என்று அதன் பிற்பகுதியிலும் வந்திருப்பது கவனிக்கத் தகுந்த விஷயமாம். வீரபாண்டியன் மரக்கால் கோமாறபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர் காலத்திலும் வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது.

"பூவொன்றுக்கு வீரபாண்டியனால் உதகம் பண்ணின நெல்லுபதினைங்கலம்" (S. I. I. V. No. 347, p. 161.)

"வீரபாண்டியனால் நெல்லு முக்கலமும்" (S. I. I. V. No. 446, p. 168.)



# எமது சிறந்த இலக்கிய

# வெளியீடுகள்

## எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதியவை.

| | |
|---|---|
| தமிழ்ச்சுடர் மணிகள் | 5 8 0 |
| இலக்கிய தீபம் | 3 0 0 |
| தமிழின் மறுமலர்ச்சி | 2 8 0 |
| இலக்கியச் சிந்தனைகள் | அச்சில் |
| சொற்கலை விருந்து | அச்சில் |

# பாரி நிலையம்

**59. பிராட்வே - சென்னை-1**

## கவிமணியின் நூல்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மலரும் மாலையும் | 5 | 0 | 0 |
| மருமக்கள் வழி மான்மியம் | 2 | 0 | 0 |
| உமார்கய்யாம் பாடல்கள் | 1 | 4 | 0 |
| ஷை காலிகோ பயிண்டு | 1 | 12 | 0 |
| ஆசிய ஜோதி | 1 | 8 | 0 |
| ஷை காலிகோ பயிண்டு | 2 | 0 | 0 |
| தே.வி.யின் கீர்த்தனங்கள் | 1 | 12 | 0 |
| கவிமணியின் உரைமணிகள் | 2 | 8 | 0 |

★

**பாரி நிலையம்**

**59, பிராட்வே :: சென்னை - 1**

**Jacket printed at Shanti Press, Madras - 1**